வாழக் கல்மின்

அரசாங்க மகளிர் ஆசிரியர் கலாசாலை
கோப்பாய்

1977




# கலைமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமலர் சிறப்புடன் வெளிவர
வாழ்த்துகின்றோம்.

★ மகராஜா நிறுவனத்தினரின் அழகுசாதனப் பொருட்கள்
★ விவசாய கிருமிநாசினி வகைகள்
★ 'டங்ஸ்ரம்' பல்ப் வகைகள்
★ பெரக் (Berec) பற்றறிகள்
★ எஸ்லோன் (Slon) பைப் வகைகள் இணைப்புகள்
★ நபீசா றபர் றோலர்

அனைத்திற்கும்

விற்பனையாளர்களும், விநியோகஸ்தர்களும்

கல்கி சன்ஸ்

147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7711


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மலர்

திருவாட்டி ஜீவராணி ஹுல் அவர்களின்
சேவைநலம் பாராட்டிதழ்

மலர் 18 1977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றே விஜயம் செய்யுங்கள்

விநாயகம் மில்

ஸ்ரேசன் வீதி,

சுன்னுகம்.

அழகு சாதனப் பொருட்களுக்கும்

திறமான

நூல் வகைகளுக்கும்

ஸ்ரீ அம்பிகா பென்ஸிபலஸ்

(ராணித்தியேட்டருக்கு அருகாமை)

மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்

நம்பிக்கைக்கும், நாணயத்துக்கும்

உகந்த உங்கள் பிடவைத் தினிசு

களைத் தெரிவு செய்ய இன்றே

விஜயம் செய்யுங்கள்

A. V. P.

பான்சி ரேடேஸ்

No. B 7, நவீனசந்தை

சுன்னுகம்.

செல்லையா அன்கோ

General Merchants,

Point Pedro Road,

K. K. S.

கலைமலருக்கு எமது வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரில்.....


1. பிரார்த்தனை
2. சமர்ப்பணம்
3. ஆசிச்செய்திகள்
    1. தி. மாணிக்கவாசகர் அவர்கள்
    2 க. சிவநாதன் அவர்கள்
    3. அதிபர்
4. திருமதி ஜீவராணி ஹாஷல் வாழ்த்திதழ்
5. நான்கண்ட கணித மேதை
6. திருக்குறள் - சில புதிய கருத்துக்கள்
7. மகாத்மாகாந்தியின் கல்விக்கொள்கை
8. அதிபர் வளர்த்த ஆமைகள்
9. சிந்தி, செயற்படு
10. ஏழிசையாய் இசைப்பயனாய் நின்றபொருள்
11. சமயக் கல்வியின் அவசியம்
12. அநுபவம் பேசுகிறது
13. கிறிஸ்துவின் அன்பு
14. கலைமலர்க் குழுவினர் நடத்திய நாடகப் போட்டி
15. சிரிப்பு
16. கலைமணத்துடன் மனையலங்காரம்
17. நவீன விஞ்ஞான யுகத்தில்......
18. பல்வகை நடனங்கள்
19. உறங்கும் உறவுகள்
20. உண்மையன்பு
21. விடியாத இரவுகள்
22. சந்திரவட்டக் கற்கள்
23. நூற்றட்டை
24. மன்ற அறிக்கை
25. இல்ல அறிக்கைகள்
26. 1977ஆம் ஆண்டுச் சிறப்பு நிகழ்ச்சிகள்
27. பரிசு பெறுவோர்
28. பொதுக்கல்விச் சான்றிதழ் பெறுவோர்
29. பயிற்சி பெற்றுச்செல்வோர் முகவரிகள்
30. முதலுதவிச் சான்றிதழ் பெறுவோர்
31. கலாசாலைக் கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமலருக்கு எமது நல்லாசிகள்

# ஆசீர்வாதம் அச்சகம்

**50,** கண்டிவீதி, யாழ்ப்பாணம்



THE HALLMARK
OF
QUALITY PHOTOGRAPHS

# SELLAMS

PHONE: 436 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

'தீமையினின்றும் என்னை நன்மைக்கு அழைத்துச் செல்
இருளினின்றும் என்னை ஒளிக்கு அழைத்துச் செல்
சாவினின்றும் என்னைச் சாகாமைக்கு அழைத்துச் செல்

— பிரஹதாரணியகோபநிடதம் —

பாரனைத்தும் நிறைந்ததனுக் கப்பா லாகிப்
பரந்தொளிரும் பரஞ்சுடரே பரிந்தெம் பால்நீ
தேரவொணாத் தீமையதின் திணிவி னின்றும்
திகழுயர்வை நோக்கியெமை நடத்திச் செல்வாய்
கூரிருளின் கொடும்பாரச் சுமையைப் போக்கிக்
குலவொளியின் வழியினிலே செலுத்திச் செல்வாய்
ஆர்கலியாம் மரணத்தின் இடரை மாற்றி
அமிர்தாகும் நிலைபேற்றிற் கழைப்பாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமலர்க் குழுவினர்

**காப்பாளர் :** திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி

**ஆலோசகர் :** திரு. க. சொக்கலிங்கம்

**மலராசிரியர்கள் :** ஞானச்சகோதரி கொன்ஸ்ரன்ரைன்
செல்வி பவளாய் பொன்னையா

**செயலாளர் :** ஞானச் சகோதரி புஷ்பராணி

**பொருளாளர் :** திருமதி சிவபாக்கியம் செல்லையா

**மலர்குழுவினர் :**

திருமதி தேவராஜமலர் கந்தசாமி
,, சரோஜினிதேவி குமாரசாமி
,, இராஜ இராஜேஸ்வரி துரைச்செல்வம்
செல்வி அன்னம்மா செல்லப்பா
திருமதி தேவகி சுந்தரராஜா
,, மங்கையர்க்கரசி ஆழ்வாப்பிள்ளை
செல்வி பவானி முத்துராஜா
திரு. விமலன் அல்போன்சஸ்
திரு. சு. வி. பரமலிங்கம்
செல்வி இராசம்மா வேலுப்பிள்ளை

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலை விரிவுரையாளர்கள்

**அதிபர்**

திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி M. A, M. Sc.

**துணையதிபர்**

செல்வி ச. சின்னப்பு, M. Sc.

**விரிவுரையாளர்கள்**

திருமதி சு. செல்லத்துரை, B. A., Dip. Ed.

திருமதி ஜீ. ஹால், B. Sc. 1st Class Hons (Lond)

திருமதி ம. திருச்சிற்றம்பலம், B. A., Dip. Ed.

செல்வி த. முத்தையா, B. Sc.

திரு. இ. துரைராசா, B. Sc. (Cey), Dip. Ed. (Cey).

வித்துவான் க. சொக்கலிங்கம், M. A., 1st Class Tamil Trained Certificate

திருமதி ஒ. செ. தர்மானந்தன், 1st Class Trd. Specialist in. Home Scinece

திருமதி பா. சண்முகராசா, B. A.

திரு. வே. சுப்பிரமணியம், B. A. (Special), 1st Class English Trained Certificate

திரு. பொன். தெய்வேந்திரன், Diploma in Music, Spl. English, Saiva Pulavar.

திரு. க. வீரசிங்கம், Eng. Teachers Drawing (Cey), Adv. Drawing and Painting (Cey) General Drawing First Class (Madras), Govt. Tecinical Exams Higher Grade in Design, Painting, Free Hand Out line and Model Drawing (Madras) Lower grade Modeling, Vocational Trained C. T. C. Colombo

திரு. பொ. சின்னத்துரை, Dip. Painting, Drawing and Scripture (Madras) 1st Class English Drawing Teachers Certificate.

பிரமஸ்ரீ ந. வீரமணிஐயர், Dip. in. Music, Dip. in Dancing

திருமதி லூ. லூ. யேக்கப், Art Teachers, Certificate

திருமதி டே. தருமராஜா, P. T. I.

திருமதி பொ. பத்மநாதன் சங்கீதபூஷணம்

செல்வி க. சங்கரப்பிள்ளை, Dip. in. Dancing, Specialist in Dancing.

செல்வி வி. சுப்பிரமணியம், சங்கீதபூஷணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகுதி நேர விரிவுரையாளர் :**

ஞானச்சகோதரி மேரி டானியெலா (ரே.க)

திரு. கே. குமாரசிங்கம் (உடல்நலக்கல்வி)

**ஏனையோர் :**

கட்புல செவிப்புலச் சாதன உதவியாளர், நூலகர் } திரு. வி. கு. இராமலிங்கம்

**விடுதி மேற்பார்வையாளர் :**

செல்வி ச. சின்னப்பு

**எழுது வினைஞர் :**

செல்வி இ. கணேசபிள்ளை

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**வை**யத்து வாழ்வாங்கு வாழவும், சூழவுள்ள சமுதாயத்திற்குப் பயனுள்ளவராய் ஆகவும், பிறந்த பொன்னாட்டின்மீது மாறா அன்பு செலுத்தவும், இறையுணர்வினை உள்ளத்திலே குடிகொள்ளச்செய்யவும் வல்லதான ஒரு கல்விமுறையே இன்று எமது இன்றியமையாத் தேவையாகும். இத்தேவையை உணர்ந்து நவீன கல்வி முறையினை நல்லதொரு திட்டமாய் வகுத்து வழங்கும் தொண்டர் குழாத்தினுள் எம்மையும் இணைத்துக்கொண்டுள்ளோம், என்ற மனநிறைவோடு இவ்வாண்டுக் கலைமலரைக் கலைச்செல்வியின் பாதார விந்தங்களிலே சமர்ப்பிக்கின்றோம்.

"ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் எம் அம்மையே! நான்முகன் தேவியே! வெள்ளைக்கமலத்து வீற்றிருந்து எம் வெள்ளை உள்ளங்களை வாழவைத்திடும் வேதனின் துணைவியே! அம்மா! உனது அடியிணைகளே எமக்குத்தஞ்சம்" எம்மைக்காத்தருளி எமது கலைமலரை ஏற்று ஆசி தந்து, கடைக்கணிப்பாய்" என்று இறைஞ்சி நிற்கின்றோம்.

வழக்கம் போல இவ்வாண்டும் பல செயற்றிறங்கள் எமது கலாசாலையில் இடம் பெற்றன. பொன்மலர் நறுமணமும் பெற்றுப் பொலிவுற்றாற்போல எமது சகமாணவராய்க் கவின்கலைத்துறையினரும் வந்து சேர்ந்துள்ளமை எமக்கு அளவிலா மகிழ்ச்சியை அளித்துள்ளது. அவர்களை வரவேற்றுப் பெருமையுற்றோம். வளர்க அவர் கலைத்திறன்!

எமது ஆசிரிய கலாசாலையானது சிறந்த ஆசிரியர்களை வருடாவருடம் உருவாக்கிக் கொண்டேயிருக்கிறது. எனவே முதற்கண் எமது உளம்கனிந்த நன்றியை எமது கலாசாலை அதிபர், பேராசிரியர்களுக்குத் தெரிவிப்பதுடன் நாம் செல்லும் இடமெல்லாம், கலாசாலையின் சிறப்பும் சிறக்கப் பணிபுரிவோம் என்றும் கூற விரும்புகின்றோம்.

திருவாட்டி ஜீவமணி ஹூல் அவர்கள் சிறந்த ஆசிரிய மணியுமாவர். அன்னார் பல்லாண்டுகளாக எம்கலாசாலையின் நற்பண்புகள் யாவிற்கும் ஓர் அணிகலனாய் விளங்கிக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் தமது சேவையை செவ்வனே நிறைவேற்றித் தற்போது தம் ஓய்வு காலத்திலும் மீண்டும் ஓர் பாடசாலையில் தம் அறிவை மாணவர் சமுதாயத்துடன் தொடர்ந்து பகிர்ந்து கொண்டே இருக்கின்றார். இவர் எம் கலாசாலையை விட்டு நீங்கியமை ஆசிரியராகிய எமக்குப்பெரும் இழப்பேயாகும். திருவாட்டி ஹூல் அவர்கள் தாம் செல்லும் இடமெல்லாம் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்தி இறை ஆசீரையும் வேண்டிநிற்கின்றோம்.

அடுத்து இம்மலரின் சிறப்பிற்குத் தமது கருத்துக்களையும், ஆலோசனைகளையும், கட்டுரைகளையும், தந்துதவிய எம் அருமைப் பேராசிரியர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். விளம்பரங்கள், அன்பளிப்புக்கள் கொடுத்துதவிய வள்ளல்கள் யாவர்க்கும் எமது நன்றி உரியதாகுக.

மேலும் இம்முறை கலைமலர் சிறப்பாக வெளிவருவதற்கு எம்மை ஊக்குவித்த அதிபர் கலைமலர்க்குழுப்பேராசிரியர் சகோதர சகோதரிகட்கும் எமது நன்றிகள் பல பல.

ஆசிரிய மாணவர்களின் இச்சிறிய படைப்பாகிய கலைமலர் தொடர்ந்தும் வருடா வருடம் புதுப்புதுப்பொலிவுடன் வெளிவர இறையருள் கிட்டுவதாக.

**ஞானச்சகோதரி கொன்ஸ்ரன்ரைன்**
**செல்வி பவளாய் பொன்னையா**
இணையாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LUXHUMI VILLAS - CREAM HOUSE
## AND
## COOL BAR

## லெட்சுமி விலாஸ் அச்சுவேலி

லெட்சுமி கிறீம் ஹவுஸ் அன் கூல்பார்

இன்றே விஜயம் செய்யுங்கள் — ஒரே சைவக்கடை

சுத்தமாகவும், ருசியாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மணவிழா, திருவிழா போன்ற விழாக்களுக்கு

சிற்றுண்டி வகைகளுக்கு ஓடர் செய்யலாம்

★ ஐஸ் பழம் ★ ஐஸ் கிறீம்

★ ஐஸ் சிறே ★ ஐஸ் சொக்

★ ஐஸ் ஜெலி ★ ஐஸ் சர்பத்

★ ஜெலி கிறீம் ★ புறூட்சலட்

★ கேசரி ★ மஸ்கற்

இவற்றை எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்

உரிமையாளர் :

**K. கணேஸ்**

பஸ் நிலையம்,

அச்சுவேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாநிலக் கல்வியதிபதி

# திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி

கல்வியின் திரண்ட பயனை மாணவரும் சமூகமும் அடையத்தக்க வகையிலே கல்வி முறை புதிய பரிசோதனைகளுக்கும் மாற்றங்களுக்கும் உள்ளாகி வருவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். இக்காலகட்டத்திற் கல்வியோடு நேரடித் தொடர்புகொண்டுள்ள எங்களின் பொறுப்பும் கடமையும் மிகவும் காத்திரமானவை என்ற உணர்வு எம் அனைவர்க்கும் ஏற்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

சிறப்பாக ஆரம்ப பாடசாலைகளிலும், இடைநிலைப்பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் மாற்றங்களை நன்கு உணர்ந்து உள்வாங்கித் தமது முழு ஆற்றலோடும் செயற்படுவதை யாவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இவ்வெதிர்பார்ப்பிற்கு ஊறு விளையாத வகையிலே ஆசிரியர்கள் நடந்துகொள்வர் என்பது எமது உறுதியான நம்பிக்கை. இதனோடு சமய நம்பிக்கையையும் கலாசார உணர்வையும் வளர்ப்பதற்கும் ஆசிரியர்களே வழிகாட்டிகள் என்பதையும் இவ்விடத்தில் நினைவு கூர்வது நன்று.

எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் பயிற்சியில் ஈடுபட்டுப் பணியாற்றி வரும் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையினர் வழக்கம்போல இவ்வாண்டும் தமது 'கலைமலர்' சஞ்சிகையைச் [சிறப்பாக வெளியிடுவது பற்றி மகிழ்கின்றேன்.

ஆசிரிய உலகத்திற்கு வேண்டப்படும் பல சிறந்த விடயங்களைத் தாங்கி வெளிவரும் கலைமலருக்கு எனது நல்லாசிகள் உரியன. இப்பணியில் அயராதுழைத்த அதிபர், விரிவுரையாளர்கள், கலைமலர்க் குழுவினர் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

தி. மாணிக்கவாசகர்

24-11-77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாநில மேலதிகக் கல்விப் பணிப்பாளர்

# திரு. க. சிவநாதன் அவர்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி

இலங்கையின் கல்வி நிலையிலே நீண்டகாலமாக ஒருவகைத் தேக்கம் காணப்படு கின்றது. கல்வியின் திரண்ட பயனை மாணவரும் சமூகமும் அடைய முடியாத அளவுக்கு இந்தத் தேக்கம் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதனைப் போக்கவும் கல்வியின் மூலம் சமூக பொருளாதார கலாசார வளர்ச்சி ஏற்படவும் அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகள் மிகப் பலவாய் இருந்த போதும் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் நிகழவில்லை. இதற்குக் காரணங்கள் மிகப்பல· எனினும் அவற்றுள் முதன்மையானது நேர்மை, கடமையிற் பற்று, அர்ப்பண மனப்பான்மையாகின போதிய அளவு எமது சமுதாயத்திலேயே வளர்ச்சி அடையாமையே எனலாம். கல்வி முறையிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் இந்த மூன்று அம்சங்களுக்கும் முதன்மை அளிக்கப்படுவது மிக அவசியமாகும். மாணவர்கள் ஆசிரியர்கள், கல்வித் தொடர்புடையோரிடையில் மட்டுமன்றி மக்கள் அனைவரதும் மனங்களிலும் இவை ஆழமாகப் பதியத்தக்க வகையிலே கல்விச் சீர்திருத்தங்கள் அமைவதே இன்று மிகுதியும் வேண்டப்படுகின்றது. எனவே சிறியோர் தொடக்கம் முதியோர் ஈறுகப் யாவர்க்கும் பொருந்தும் வகையிலே புதிய கல்வித்திட்டம் அமைக்கப்படுவதோடு, அது குறிப்பிட்ட ஒரு சாராருக்கு மட்டும் பயன் தருவதாய் அமையாதும் பார்த்துக் கொள்ளல் வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் முழு மனத்தோடு கூடிய ஒத்துழைப்பு இன்றியமையாதது.

கற்பித்தலின் சிறந்த பாரம்பரியங்களை நீண்டகாலமாகப் பேணிக் காத்து வரும் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய காலசாலையினர் வெளியிடவிருக்கும் இவ் வாண்டுக் கலை மலரிலே இந்நோக்கங்கள் நன்கு பிரதிபலிக்கும் என்ற நம்பிக்கையோடு, கலை மலருக்கு எனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

க. சிவநாதன்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் வழங்கிய

# ஆசிச் செய்தி

தனி மனிதன் சமுதாயத்தோடு கொள்ளும் தொடர்பினை இறுக்கமுடையதாக ஆக்கி அவனைப் பயனுள்ளவனாய் மாற்றுவதே கல்வியின் முழுமையான இலக்காகும். தான், தன் குடும்பம், தன்னினம் என்ற பிரிவினைகளைக் கடந்து சென்று அகில உலகத்தையுமே நேசிக்க வல்ல பரந்த மனப்பான்மையோடு கூடிய உன்னத இலட்சியத்தினைக் கல்வி மூலம் படிப்படியாக வளர்த்து முடிவில் ஆன்மிகத்தை நோக்கி நெறிப்படுத்தும் கல்விக்கு ஆரம்ப பாடசாலைகளிலேயே வித்திடப்படல் வேண்டும். எனவே ஆரம்ப வகுப்புக்களிலே கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் பொறுப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதொன்று என்பதில் ஐயமில்லை.

மனித சமுதாயத்தில் நெகிழ்ச்சியும் மென்மையும் கொண்ட உள்ளங்களை உருவாக்குவன அழகியற் கலைகளே ஆகும். இக்கலைகளைப் பயிலுதலும், பயிற்றுதலும் உண்மையிலே சிறந்த சமூகப் பணியேயாகும். இல்லந்தோறும் அன்பும், இனிமையும், எழிலும் தவழ வேண்டுமாயின் இவை மடவார்களின் மென்கரங்களிலேயே தங்கியுள்ளன என்பதை எவருமே மறுக்கார். சீலமும் சால்பும் நிறைந்த மனையியற் கல்வியின் வாயிலாக மங்கையர் மாட்சி பெறுவர். அவர்களால் மாநிலமே சிறந்தோங்கும். இத்தகைய முத்திறக் கல்வியினையும் வழங்கும் ஆசிரியர் குழாத்தை உருவாக்கும் பெரும் பணியினை மேற்கொண்டு அயராது உழைத்து வரும் எமது கலாசாலையினர் இவ்வாண்டும் வழக்கம் போலத் தமது கலைமலரைச் சிறப்புற வெளியிடுவது மகிழ்ச்சி தருவதாகும்.

கலைமலர் எல்லாவகையிலும் உன்னத இலட்சியங்களையும், சிறந்த பாரம்பரியங்களையும் வெளியிட்டு நன்மணம் பரப்ப வாழ்த்துகின்றேன்.

இ. ஆனந்தக்குமாரசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்திர வட்டக் கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அதிபர்



திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலையிலே
பதின்மூன்று ஆண்டுகள் கணித விரிவுரையாளராய் அமர்ந்து நற்பணியாற்றிய

## திருமதி ஜீவராணி ஹூல் B. Sc. Hons (Lond) அவர்கள்

தமது கடமையினின்றும் ஓய்வுபெற்ற ஞான்று அளித்த

# வாழ்த்திதழ்

(வெண்பா)

பல்லாண்டு வாழி பகர்ஜீவ ராணிஹூல்
வில்லாண்ட ராமன் விறல்போன்று — சொல்லாண்டு
கற்றற் கரிய கணிதநூற் கல்வியினை
முற்ற உணர்த்தினீர் முன்.

(அகவல்)

சூசை முனிவரும் மரியும் பயந்த
யேசு நாதரின் இன்னருட் சூரியராம்
சோமசுந் தரத்தின் நாமமே விளங்க
ஏமமாய்த் தோன்றி இனியராய் வளர்ந்து
கணிதநூற் கல்வியின் துறையெலாம் திளைத்தே
அணியென முதல்வகுப் பமைந்திடப் பட்டம்
பெற்றுச் சிறந்த பெருந்திற லாட்டி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியத் தொழில் அமைவுற ஆற்றி
ஆசுகள் நீக்கி அனைவரும் சிறக்கத்
தேசுடன் பணியை ஆற்றிய செல்வி!
நல்லூர்ப் பயிற்சிக் கழகந் தன்னில்
நாடு வியக்க நற்பணி யாற்றிய
சொற்றிறம் உடையீர்! சொர்ணமே அனையீர்!
அமைதிக் குருவே! அன்பினுக் கணியே!
இமயம் துளங்கினும் இதயம் துளங்கா(து)
அமைவதாம் உறுதிக் கமைந்திடு சாட்சியே!
ஹாூல் எனும் பெரியவர் வாழ்வினின் விளக்காய்ச்
சால்புற அமைந்த சாந்தத் திருவுருவே!
எண்ணித் துணிந்து துணிந்ததை இயற்றிக்
கண்ணெனக் கடமையைக் காத்துயர் வுற்று
விண்ணவர் அமுதென விளங்கிடுந் தகையீர்;
மாணவர் உயர்வதை மனதினிற் கொண்டுநீர்
நாநயத் துடனே நவின்றநல் லுரைகள்
இன்றும் என்றும் எங்கழ க்ச்சுவர்
நின்றே எதிரொலி நிகழ்த்திடும் கண்டீர்
ராதா இல்லத் தாயெனத் திகழ்ந்துநீர்
ஏதுங் குறையதற் கேற்படா தியற்றிய
அமைதிப் பணியை யார்தாம் மறப்பர்?
குன்றுபோற் கொள்கைக் குருமணி ஹாூலே!
இன்றும் பணிகளை இழந்ததால் யாங்கள்
உயிர்மணி இழந்த உடலமே ஆயினோம்
பருவ மழையிலாப் பயிராய் விட்டனம்.
திருவினை இழந்த தரித்திரர் ஆகி
இருக்கிறோம் இதுமெய். புகழ்ச்சியே அல்ல
ஜீவனின் ராணிநீர் தாவறும் புகழுடன்
தேவனின் அருளில் திளைத்துமே மக்களின்
நல்வாழ்வு கண்டு நலம்பல சிறந்து
வாழிய வாழி! வாழிபல் லாண்டே

கோப்பாய், அதிபர், விரிவுரையாளர்கள்,

அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை ஆசிரியைகள்.

8-12-76

கல்வி என்பது மாந்தர் உள் ளத்தில்
எல்லையற் றுறையும் ஏழிற்பூ ரணத்தைக்
கல்லி வெளியே நல்குவ தாகும்.

— விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி ஜீவராணி ஹுல் அவர்களின்
பிரியாவிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட கணித மேதை

செல்வி த. முத்தையா B. Sc.

நான் கண்ட கணித மேதை என்ற தலைப்பைப் பார்த்ததும் நான் நியூட்டன், பிதாகரஸ், கன்ரன், தெக்காட்டிஸ் முதலியவர்களில் ஒருவரைப்பற்றித்தான் எழுதப்போகிறேன் என்று தீர்மானித்து இருக்கலாம். ஆனால் நான் விபரிக்கப்போகும் மேதை எங்கோ எப்போதோ வாழ்ந்தவரல்லர். பலவருடங்களாக அன்புக்கும்பண்புக்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுக்கும் எடுத்துக்காட்டாகத் திகழும் இக் கலாசாலையில் பலருக்கு வேம்பாகக் கசக்கும் கணிதத்தைக், கரும்பாக இனிக்கும்படி கற்பித்தவர். அவர். என் அன்புக்கும் மதிப்புக்கும் என்றும் பத்திரமான திருமதி ஜீவமணிஹால் ஆவர். நான் இந்த மேதையை 1967-ம் ஆண்டில் தான் சந்தித்தேன். ஆனால் அவர் குணுதியங்களைப்பற்றி அதற்கு முன்னமே கேள்விப்பட்டிருந்தேன். பின்பு எங்கள் சந்திப்புகளும் அடிக்கடி நிகழ்ந்தன. அன்பும் மதிப்பும் பெருகியது. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல நம் இருவருக்கும் இக்கலாசாலையிலேயே கணிதம் கற்பிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அக்காலத்தில் தான் நான் அவரைக் கணித மேதையாகக் காணமுடிந்தது.

அன்று பிளேட்டோ என்ற தத்துவ ஞானி கேத்திரகணித அறிவு இல்லாதவர்கள் இக்கலாசாலையில் நுழையாது இருப்பார்களாக என்று தாம் நடாத்திய சர்வ கலாசாலை வாயிலில் எழுதிவைத்தார், சர்வ கலாசாலைக்கு மாத்திரமன்றி ஆரம்பக்கல்விப் பாடசாலையிற் பயிற்சி புகட்டும் ஆசிரியர்களுக்கும் கணிதம் கட்டாயபாடம் ஆக்கப்பட்டது. இது பல பயிற்சி ஆசிரியர்களுக்கும் பெரும் பிரச்சினையாக இருந்தது. நம் கணித மேதை "எதையும் கற்கக் கடினம் என்று கற்காது விடவேண்டாம். கற்றுக்கொண்டே இருங்கள். காலம் எல்லாவற்றையும் சரியாக்கும்" என்று அறிவுரை கூறுவார். இவ்வாறு கடைப்பிடித்தவர்கள் கணிதத்தில் திறமைச் சித்தியடைந்துள்ளார்கள்.

சுவாமி விவேகானந்தர் தாம் மறுபடியும் கல்விகற்பதாக இருந்தால் "விடயங்களைக் கற்காது தணியாத ஆர்வத்தையும், மன ஒருமைப்பாட்டையுமே கற்றுக்கொள்வேன் பின் மற்ற விடயங்களைக் கற்றல் இலகுவாக அமையும்" என்றனர். நான் கண்ட கணித மேதையின் விசேட சிறப்பு இயல்பு அவரது மன ஒருமையும், தளராத ஆர்வமும் ஆகும். இப்பண்புகள் திருமதி ஹால் அவர்கள் ஓய்வு பெறும் காலத்திலும் ஓய்வு பெற்ற பின்பும் சுடர் வீசுகின்றன. உலகில் வாழ்ந்த பல மேதைகளைப் போல் இவரும் தன்னுடைய சொந்த முயற்சியினாலும் தளராத ஊக்கத்தாலும் சர்வகலாசாலைக்குச் செல்லாமலே கணிதத்தில் லண்டன் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றார்.

திருமதி ஹால் அவர்கள் ஒரு நிறைகுடம். அதுமாத்திரமல்ல, குடத்துள் தீபம் போலவும் விளங்கினார். அவருடைய திறமைகளையும் ஆற்றல்களையும் பகிரங்கப்படுத்தியது இல்லை. கடந்த சில வருடங்களாக ஆசிரிய கலாசாலைக் கணித விரிவுரையாளர்களுக்குப் பிறநாட்டுப் பேராசிரியர்கள் வந்து கருத்தரங்குகள் நடாத்துவது வழக்கம். பங்குபற்றும் விரிவுரையாளர்களை ஊக்குவிக்கப் பல போட்டிகளை ஏற்படுத்துவார்கள். அவற்றில் எல்லாம் நான் கண்ட கணித மேதை முதல் பரிசை எடுத்து நமது கலாசாலைக்கே தனிப்புகழை எடுத்துக் கொடுப்பார்.

உலக மேதைகளில் பலர் தாம் பெற்ற கல்வியையோ, இயற்கை அல்லது சூழலின் அனுபவத்தையோ திரும்பவும் கூட்டு வட்டிப்படி திருப்பிக் கொடுப்பது வழக்கமாகும். நம் ஹால் அவர்கள் தாம் பெற்ற கல்வியைக் கூட்டு வட்டிப்படி திருப்பிக் கொடுத்துத் தம்மிடம் கல்வி கற்றவர்களைப் பல சிறப்பு இடங்களைப் பெற உதவியுள்ளார். அவரது ஒருமாணவி ஆசிரியருடன் ஒரே கருத்தரங்கிலே பங்கு பற்றியது சிறந்த உதாரணம் ஆகும். அவரது பிள்ளைகளும் கணிதத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறம்படக் கற்றதோடு பல போட்டிப் பரீட்சைகளிலும் முதலிடத்தைப் பெற்றிருக்கின்றார்கள்.

கணித மேதைகள் பலர் கணிதத்தில் மாத்திரமே ஆர்வம் காட்டாது வேறு துறைகளிலும் ஆர்வம் காட்டுவர். நம் மேதையும் அரசியல் போன்ற துறைகளில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். விடுதலை இயக்கங்கள் என்றால் அவருக்கு உயிர், அவரது குடும்ப வாழ்க்கையும் சிறப்பானது. எளிய தோற்றம், காட்சிக்கு இனியதும், இனிமையுமான குரல். எதற்கும் எதிர்ப்புக் காட்டும் சுபாவம் இல்லை. தாம் சரியெனக் கண்டதற்கு விட்டுக் கொடுக்கும் தன்மையும் இல்லை அழகே உண்மை, உண்மையே அழகு. என்பது போன்று கணிதம் என்றால்உண்மை. உண்மையே கணிதம் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்த நான் கண்ட கணித மேதை திருமதி ஜீவமணிஹால் அவர்களைப்பற்றிச் சில வார்த்தைகள் இம் மலரில் எழுத வாய்ப்புத்தந்த இம்மலர்க் குழுவுக்கு நான் நன்றி நவில்கின்றேன்.

---

பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம் போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப் பழகுவராயின், முந்தியவன் கவிதை எழுதுவான்; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான்; இவனுடைய தொழிலிலே கவிதை இராது. இப்படியேதான் ஒவ்வொன்றிலும்.

— பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் – சில புதிய கருத்துக்கள்

ஆறறிவுள்ள மனிதன் தனது சிறந்த பகுத்தறிவால் சரி எவை பிழை எவை என்பதைப் பகுத்தறிகிறான். அவ்வாறு பகுத்தறியும் தன்மையற்றவரை மக்கள் உருவத்தில் தோன்றும் மாக்கள் என்று சொல்லலாம். எனவேதான் வள்ளுவனும்

"மக்களே போலும் கயவர் அவர் அன்ன
ஒப்பாரி யாம் கண்டதில்"

"அரம் போலும் கூர்மைய ரேனும்
மரம் போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்"

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்" என்றனன.

அல்லாமலும் ஒரு பொருளை எவரெவர் எப்படிச் சொன்னாலும் எங்கே உண்மை இருக்கிறது என்பதைக் காண்பதுதான் உண்மையான அறிவு எனவேதான் செந்நாப் போதாரும்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு
என்றும்"

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப் பொருள் மெய்ப் பொருள் காண்பது
அறிவு என்றும் அருளினார்

காலம் மாறுகிறது. நாமும்மாறிக்கொண்டேயிருக்கிறோம். அதேபோல நாம் காலத்திற்கேற்ப நூல்களின் பொருளையும் மாற்றவேண்டியிருக்கிறோம். அவ்வாறு மாற்றுவது தவறு என்று யாரும் சொல்லிவிடமுடியாது. பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இலக்கண ஆசிரியரான பவணந்தி முனிவர் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே" என்றார். ஆதலினாற்றான் வள்ளுவர் கூறிய "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்" என்ற குறளையும் "பழையன கழிதலும்" என்ற பவணந்தியின் இலக்கணத்தையும் யான் படித்தவளாதலின் திருக்குறளையும் அதற்கு ஆசிரியர் பரிமேலழகர் கொடுத்த உரையையும் ஆராய என் உள்ளம் தூண்டியது.

திருக்குறள் யாது? அறநூலா அன்றி இலக்கிய நூலா? திருவள்ளுவர் யாவர்? சமணரா அன்றிச் சைவரா? வள்ளுவர் திருக்குறளைப் பொருளுக்காகத் தந்நலம் கருதிப் பாடினாரா? இல்லையேல் ஏனைய புலவர்கள் பணத்திற்காகப் பாடினார்களா? வள்ளுவர் தமக்கென ஓர் தொழிற் செய்தாரா? அல்லது வேறுபுலவர்களைப் போல் பாடிப் பரிசில் பெற்றுப் பசிப்பிணி தீர்த்தாரா? இப்படியான வினாக்கள் இயற்கையாக எல்லோரிடமும் எழக் கூடிய வினாக்களே. திருக்குறள் ஓர் அறநூல் அதே சமயம் அது ஓர் சிறந்த இலக்கிய நூலுமாகும். திருவள்ளுவர் இரப்பவர்க்குக் கொடுப்பவர். ஆனால் இரந்திலர். இரப்பவர்க்கு ஈதல் அறம் என்கிறார் அதே காலை இரத்தல் ஓர் கேவலமான செயலென வெறுக்கிறார். எனவேதான் தனக்கொரு தொழிலென நெசவுத் தொழிலைச் செய்ததாகத் தெரிகிறது. "இழை நக்கி நூல் நெருடும் ஏழை அறிவேனோ "பிழை நக்கும் பிங்ஞகன்றன் கூத்து" என்ற இப் பாடலினால் அவர் நெசவுத் தொழில் செய்தார் என்பது தெரியவருகிறது. இவருடைய சமயம் பற்றி ஆராயும் போது இவர் சமணமதத்தவர் என்று சொல்லலாம். வள்ளுவர் காலத்திலே சைவ மதத்தின் பேரால் பெரிய யாகங்கள் நடந்ததாகத் தெரிகிறது. இதனை "அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று" என்ற குறளிலிருந்து அறியலாம். எனவே அவர் யாகத்தின் பெயரால் உயிர்க்கொலை செய்தலை அறவே வெறுக்கிறார் என்பது தெளிவு. அத்தோடு சைவசமயத்தில் இன்றியமையாதன என்று கருதப்பட்ட வேதங்கள் ஸ்மிருதிகளின் வாயிலாக அக்கால மக்கள் மாமிச உணவு சாப்பிட்டார்கள் என்பது தெரியவருகிறது.

இரட்டைக் குளம்புள்ள மிருகங்களில் ஒட்டகத்தைத் தவிர ஏனைய மிருகங்களின் மாமிசம் சாப்பிடலாம் என்றும் ஆட்டு மாமிசத்திற்குப் பதிலாக உழுந்து வடையைச் சாப்பிடலாம் என்றும் ஸ்மிருதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டிருக்கிறது. சைவசமயத்தவர் புலால் உண்ணுதவராக இருந்தால் ஸ்மிருதியில் இவ் ஆராய்ச்சி வரவேண்டியதில்லை. ஆட்டிறைச்சிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் உழுந்து வடையைப் பயன் செய்யலாம் என்றும் கொள்ளலாமல்லவா? இதிலிருந்து சைவசமயத்தவர் முன்பு புலால் உண்டோர். எனவே புலால் உண்ணற் பொருட்டுக் கொலை செய்திருப்பார்கள். கொலை செய்யாவிடினும் உண்டிருப்பார்கள் "கொன்றிடப் பாவம் தின்றிடத் தீரும்" என்றபடி இவர்கள் கொலைக் குற்றத்துக்கு ஆளாகிறுர்கள்.

சமணரோ கொல்லா நோன்பு கொண்டோர். கொல்லாமையை அறவே வெறுப்பவர். வள்ளுவரும் கொல்லாமையை அறவே வெறுக்கிறுர். அதற்கென ஒரு அதிகாரமே பாடியிருக்கிறுர். திருக்குறளில் சைவசமயத்திற்குரிய சிவன் என்ற பெயர் எங்கும் வரவில்லை. பொதுவாக இறைவனை "வாலறிவன், வேண்டுதல் வேண்டாமையிலான் அறவாழி அந்தணன், என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. அருகக் கடவுளுக்கு அறவாழி என்ற பெயரும் உண்டு. இன்னேரன்ன காரணங்களால் வள்ளுவர் ஓர் சமணர் என்று துணிவதற்கிடமுண்டு.

அடுத்ததாக வள்ளுவர் மற்றும் புலவர்களைப் போல் பொன்னையோ பொருளையோ எதிர்பார்த்துத் திருக்குறளை எழுதவில்லை. சடையப்ப வள்ளல் வளர்த்தமையால் கம்பரோ பொன்னுக்கும் புகழுக்கும் இராமாயாணத்தைப் பாடினுர். படிக்காசுப் புலவர் படிக்காசிற்காகப் பாடியிருக்கிறுர். ஔவையார் ஓர் கால் கூழுக்கே பாடியிருக்கிறுர். ஆனுல் வள்ளுவரோ தமக்கெனவொரு தொழிலை மேற்கொண்டு ஓய்வான நேரங்களைப் பயன் செய்து தமது சிந்தனைகளையெல்லாம் சுதந்திரமாக வெளியிட்டுள்ளார். இதனுலேயே திருக்குறள் காலங்களை வென்று விளங்குகின்றது.

இத்தூய்மையான குறளை எடுத்தாராய்தற்கண் இதன் உரையில், பகுத்தறிவுக்கு எட்டாத பொருந்தாத பல சிக்கலான உரையைக் காண முடிகிறது. குறளுக்கு உரை ஆசிரியர் பரிமேலழகர் கொடுக்கும் விளக்கங்களைப் பார்க்கும் போது வியப்படைய வேண்டியிருக்கிறது. வியப்பிலும் மேலாக வெறுப்பே எஞ்சி நிற்கிறது.

ஆசிரியர் பரிமேலழகர் ஓர் பார்ப்பனர். வள்ளுவரின் சாதி பற்றி எமக்குத் தெரியாது. தாம் ஓர் பார்ப்பனர் என்ற காரணத்தால் பரிமேலழகர் திருக்குறளும் பார்ப்பானீய வழிவந்ததென்பதை நிரூபணம் செய்யப் பெரிதும் முயன்றிருக்கிறுர். அந்த நப்பாசைக்குத் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருக்குறளைக் கேவலம் குலத்துக்கொரு நீதி கூறும் மனுஸ்மிருதியை அடியொற்றி வந்ததாக நாக்கூசாமல் சொல்லிவிட்டார். திருக்குறளுக்கு உரை செய்ய வந்த பரிமேலழகர் அவரது சிறப்புப்பாயிரத்தில் அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம்" என்று கூறுகிறுர். அப்படியாயின் மனுஸ்மிருதியில் என்ன கூறப்பட்டிருக்கிறது? மனுஸ்மிருதியின்படி பிரம சத்திரிய வைசிய சூத்திரர் என்று நான்கு சாதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் மிகத் தாழ்த்தப்பட்டவன்தான் சூத்திரன் என்போன்?

யார் இந்தச் சூத்திரன்? பிராமணனுக்குப் பரம்பரை பரம்பரையாக அடிமை வேலை செய்பவன். மனுஸ்மிருதியில் இச்சூத்திரனுடைய நிலையென்ன? இவனுக்கு மனுநீதிப்படி என்ன நீதி விதிக்கப்பட்டிருக்கிறது, சூத்திரன் வேதாகமங்களைமற்றவர்கள் வாசிக்கும்போது சூத்திரன் காதாற் கேட்கவும் கூடாது. அது பாவம். சூத்திரன் வேதாகமங்களை வாசித்தால் அவனுடைய நாக்கை அறு, சூத்திரன் எவனுவது மற்றவர்கள் வேதாகமங்களை வாசிக்கும்போது கேட்டுக்கொண்டிருப்பானுயின் அவனுடைய காதிலே நாராசத்தைக் காய்ச்சி ஊற்று. மநுநீதி சாஸ்திரத்தின் கட்டளை இது.

அந்தணர் என்போர் அறவோர்
மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்
என்று கூறும்

(ஆசிரியர் பரிமேலழகர் சிறப்புப் பாயிரத்திற் குறிப்பிட்டபடி) திருவள்ளுவர்

இக் கொடிய குலத்துக்கொரு நீதி கூறும் மனுஸ்மிருதியை அடியொற்றித் திருக்குறளை எழுதியிருப்பாரா? "பிறப்பால் ஒருவன் பிரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணனாக முடியாது. ஒருவன் செய்கையினாலே தான் பிராமணன் ஆக முடியும்'' என்ற புத்த பெருமானின் கொள்கையைத்தான் வள்ளுவரும் கொண்டிருந்தார். எனவேதான் வள்ளுவர் ''அந்தணர். என்போர்', என்றார். அந்தணன் என்பவன் எவனுயுமிருக்கலாம். அவன் அறம் செய்பவனாயும் மற்றும் உயிர்களில் சிறந்த அன்பு காட்டுபவனாயும் இருத்தல் வேண்டும். இதுதான் வள்ளுவன் கொடுக்கும் வரைவிலக்கணம்.

அந்தணனுக்கு இவ்வரைவிலக்கணம் கொடுக்கும் வள்ளுவர் சாதித் கொடுமை நிறைந்த குலத்திற்கொரு நீதி கூறும் மனுஸ்மிருதியை அடியொற்றித் திருக்குறளை யாத்திருக்கமாட்டார் என்பதைச் சான்றோர் எவருமே ஒப்புக்கொள்ளவர். திருக்குறளின் புகழையும் பார்ப்பனர் தட்டிக்கொள்ள வேண்டுமென்ற பேரவா மேலீட்டால் ஆசிரிய பரிமேலழகர் இவ்வாறு சொன்னார்.

மேலும் நாம் வள்ளுவரின் மனோ நிலையை ஆராய்வோம். வள்ளுவர் பரந்த உள்ளம் படைத்தவர் கொடுமை கண்டு கொதிப்பவர், புரட்சியுள்ளம் படைத்தவர். தனியொருவனுக்கு உணவில்லையேயெனின் இச் செகத்தினை அழித்திடுவோம் என்ற புதுமைப் புலவன் பாரதியாரைப் போன்றவன். யாராவது (இரந்து) பிச்சையெடுத்து உயிர்வாழ வேண்டிய நிலை ஏற்பட்டால் அவ்வுலகத்தைப் படைத்த இறைவனே அழிந்து போகட்டும் என்று சாபமிடுபவராக பரிமேலழகர் உரை பகருகிறார். தெய்வப்புலவர் திருக்குறளுக்கு

> இரந்து முயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து
> கெடுக உலகியற்றி யான்

இக்குறளிலும் உரை ஆசிரியர் தவறு செய்து விட்டார் என்பது என் நினைவு. பொருத்தமான பொருளை அவர் தரவில்லை. வள்ளுவர் சிறந்த இறை பக்தியுடையவர். இப் பக்தி நிறைந்த பெரியார் உலகத்தைப் படைத்த இறைவனை அழிந்து போகத் திட்டியிருந்திருக்க மாட்டார். பொருளிலே தான் தவறு. எப்படியென்றால் எதுபோலவெனின் நாம் எதிர்பாராத விபத்தொன்றில் அகப்பட்ட சமயம் எம்மை ஒருவர் உரிய நேரத்து வைத்திய விடுதிக்கு எடுத்துச் சென்று காப்பாற்றி விடுகிறார். உரிய நேரத்தில் இவ்வுதவி கிடைக்காவிடின் நான் இறந்திருப்பேன் என்னுடைய உறவினரைக் காணும் போது ''அவர் இல்லாதுவிடின் இறந்திருப்பேன் அவர்தாம் என் கடவுள்'' என்று அன்பு மிகுதியால் கூறுகிறேன் இதே போல் தான் ''உலகியற்றியான்'' என்று நாட்டை ஆளும் அரசனைக் குறிப்பிட்டிருப்பார் என்பது என் கருத்து.

> ''கொடுங்கோன் மன்னன் வாழும்
> நாட்டின்
> கடும்புலி வாழும் காடுநன்றே''

என்ற சான்றோரின் கொள்கைப்படியும் ''வேலன்று வெற்றி தருவது மன்னவன் கோலதுவும் கோடா தெனின்'' என்ற வள்ளுவனின் கொள்கைபடியும் உலகியற்றியான் என்று மன்னனைக் குறிப்பிட்டார் என்பதில் ஐயமில்லை. காரணம் நாட்டை நீதி தவறாமல் குடிமக்களையெல்லாம் தம் மக்களாக எண்ணும் மன்னனை ''உலகியற்றியான்'' என்று கோடுவதில் இறும்பூதெய்தல் வேண்டும். வள்ளுவர் பெருமான் இறைவனைத் திட்டும் ஓர் (இல்லையென் போன்) நாஸ்திகனுகச் சிலசமயம் சந்தேகிக்கும் அளவிற்கு உரையாசிரியர் உரை செய்தது தவறு. இறைவனைச் சாபமிடுபவராக இருந்தால் வள்ளுவர் இறை வாழ்த்து என்ற ஓர் அதிகாரத்தை இவ்வளவு அழகாய்ச் செய்திருக்க மாட்டார்.

காலத்திற் கேற்பப் பவணந்தியார் குறிப்பிட்டது போலப்பழையனகழிதல் வேண்டும், புதியனவற்றைப் புகுத்தல் வேண்டும். முக்கியமாக எம்சமுதாயத்துத் தாய்க்குலத்தவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தா வண்ணம்.

> ''தெய்வம் தொழாள் கொழுநாற்றொழு
> தொழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை''

என்ற குறளுக்குப் பரிமேலழகரின் உரையை மாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம் இவ்வாசிரியருக்காப் பரிந்து போவோர் அவர் காலத்து இவ்வுரை சரியாக இருந்திருக்கலாம் என்று குதர்க்கம் பேசலாம். இக் குதர்க்கத்தால் இன்றைய தாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்தை ஓர் பேய்க்குலமாக நாம் பழிப்பதாகவும் முடியும். தெய்வம் தொழாள்— கடவுளை வணங்காதவளாய்க் கொழுநற் றொழுதெழுவாள் — (நித்திரை விட்டு எழும்பும் போது) கணவனையே வணங்கிக் கொண்டு எழுபவள்—பெய்யெனப்—பெய்யும் மழை — மழை(யே) பெய் என்று சொல்லின் பெய்துவிடும். இது உரையாசிரியர் பொருள். அதன் கீழ்க்குறிப்பில் அது கற்பின் திண்மையால் நடைபெறும் என்ற பொருள்பட உரை அமைந்துள்ளது.

இவ்வுரைக் கண்ணோட்டத்தோடு நாம் உலகைப் பார்ப்போம். இன்று தாய்க்குலத்தைச் சேர்ந்தவர் எவரென்றாலும் மழையே பெய்யென்று சொல்லிவிட்டால் மழை பெய்துவிடுமா? உலகில் எப்பாகத்திலாவது நடைபெறுமா? எனவே ஆசிரியர் உரைப்படி தாய்க்குலத்தவர் அத்தனைபேரும் தவறுனவர்களா? இரண்டாவதாகத் தாய்க்குலம் அவமானம் அடையும் வகையில்தெய்வப்புலவர் இக்குறளைப் பிழையாகப் பாடியிருப்பாரா? அல்லது உரைகண்ட உரையாசிரியரின் தவறு? வள்ளுவர் முக்காலங்களுக்கும் பொருந்தும்வகையில்தான் குறளை எழுதியிருப்பார் - எனவே நாம் மீண்டும் உரையாசிரியரைத்தான் சாடவேண்டியிருக்கிறது. வள்ளுவரைப் போன்ற சான்றோர்களை ஈன்ற தாய்க்குலத்தவர்களை நாம் பேய்க்குலமாகக் கருதிவிடக்கூடாது. வள்ளுவன் பொய்யாமொழிப்புலவன். எனவே பொய்யினையோ தவறினையோ பாடியிருக்கமாட்டான். முக்காலத்துக்கும் பொருந்தும் இக் குறளில் பொருள் எப்படி புதைந்திருக்கிறது என்று பார்ப்போம் ''தெய்வம் தொழாள் தொழுநற்றெழு தொழுவாள்'' கடவுளை வணங்காதவளாய் நித்திரைவிட்டு எழும்போது கணவனையே வணங்கிக்கொண்டு எழுபவள் பெய்யெனப் பெய்யும் மழை (அப்படியான) மனைவி (கணவனுக்கு தேவையான நேரத்துப் பெய் யென்று சொன்னால் பெய்கின்ற மழைபோல) கணவனுக்கு(உதவும் பெண்ணாக)'இருப்பாள் சுருங்கக் கூறின் அப்படியான மனைவி கணவனுக்குப் பெய்யெனப் பெய்யும் மழை போலாவாள்

இதை விளங்கக் கூறின் வேளாண்மை செய்த ஒருவனுக்கு நெற்பயிருக்கு நீர் வேண்டியிருக்கிறது. மழை பெய்தால்ன் அவன் குறை நீங்கவேண்டிய நிலை. இல்லையெனின் நீரின்றிப் பயிர்கள் செத்துவிடும். இந் நிலையில் அவ் வேளாளன் ''என் நெற்பயிர் சாகப் போகிறதே மழையே பெய்! என்று சொல்லுகையில் மழை பெய்துவிட்டால் அம் மழையால் எவ்வளவு உதவியாயிருக்கும். அதேபோல இம் மனைவியும் தேவையான நேரத்துப் பெய்யென்று சொல்லுகையில் பெய்த மழைபோல் கணவனுக்கு உதவியாய் இருப்பாள் என்பது உண்மைப் பொருள். இதுதான் வள்ளுவரின் பொருளும் என் பொருளுமாகும்..

இவ்வாறு திருக்குறளானது புதிய புதிய கோணங்களிலே சிந்தனையைத் தூண்டித் தொழிற்படச் செய்வதால் அதனைக் காலங் கடந்த சிரஞ்சீவி நூல் என்று கூறுதல் பொருந்துவதே.

**திருமதி மங்கையர்க்கரசி ஆழ்வாப்பிள்ளை**
*1ஆம் வருடம் (நடனப்பிரிவு)*

**கல்வியின் இரகசியம் கற்போரைக் கௌரவிப்பதிலேயே தங்கியுள்ளது.**

— எமெர்சன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தியின் கல்விக்கொள்கை

உலக சரித்திரத்தில் ஒவ்வொரு பெரிய இயக்கமும் அதற்கேற்ற கல்வித் திட்டத்தை உருவாக்கியது. இலங்கையை ஆண்ட ஐரோப்பிய இனத்தவர்களாகிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரும் தங்கள் தங்கள் தேவைக்கேற்ற கல்வி முறைகளையே இலங்கையில் அமுல் நடத்தினர். அப்படியே இந்தியாவிற்கும் தனது விடுதலை இயக்கத்திற்கு அமைவான ஒரு ஆதாரக் கல்வித்திட்டத்தை மகாத்மா காந்தி அவர்கள் ஆக்கிக் கொடுத்தார். இந்தக் கல்வித்திட்டம் மிகச் சிறந்த ஒரு கல்வித்திட்டம் என்று உலகக் கல்விமான்கள் மத்தியில் ஒரு நிலையான எண்ணம் நிலவுகின்றது.

மகாத்மா காந்தி அவர்கள் கல்வி என்பது "சீவியத்திற்குச் சீவியம்மூலம் சீவியம் முழுவதும்" என்று கருதினர். இவருடைய இந்தத்திட்டம் முழுக்க முழுக்கத் தொழிலையே ஆதாரமாகக் கொண்ட திட்டமாகும். மகாத்மா காந்தி அவர்கள் தமது இலட்சியம் பூரணமடைய ஒரு புதிய கல்வித் திட்டம் வேண்டும் எனக் கருதினர். அத் திட்டம் தொழிலை ஆதாரமாகக் கொண்டதாகவும், தொழில் மகத்துவத்தை விளக்குவதாயும் அமைய வேண்டும் எனக் கருதினர். மேலும் அவர் எல்லா மக்களுக்கும் கல்வி அவசியமென்றும், அது அவர்கள் ஆற்றலுக்கு ஏற்பக் கற்பிக்கப்படல் வேண்டும் என்றும் ஒரு சிலருக்குத்தான் உயர்தரக்கல்வி என்ற நிலை மாறி எல்லோரும் உயர்தரக் கல்வி பெற வசதி அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினர். இவற்றை ஆதாரமாகக் கொண்டு அமைந்ததே இவரது கல்விக்கொள்கையாகும்.

"தொழில் மூலம் எல்லாப் பாடங்களையும் படிக்கலாம்" என்ற சித்தாந்தமே இக் கொள்கையின் முக்கிய அம்சமாகும். உதாரணமாக மேசை செய்யும் ஒருவன் வேண்டிய பலகைகளின் அளவுகளைக் கணிக்கும் போது எண் பாடத்தையும், கோணங்களின் அளவுகளைக் கணிக்கும் போது கணித பாடத்தையும், அந்த மரங்களின் தன்மை, அவை வளரும் காலநிலை என்பனவற்றை ஆராயும்போது புவியியலையும் கற்கிறன். இப்படியே எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டும் என்பதே இந்தக் கல்விக் கொள்கையின் நோக்கமாகும். இங்கே புத்தகம், வாசிகசாலை என்பன எல்லாம் இரண்டாம் நிலையிலேயே அமைகின்றன.

மாணவர்கள் தங்கள் அனுபவங்களைப் புத்தகங்களாக எழுதவேண்டும். பாடசாலை ஒரு சமூகம் போல இயங்க வேண்டும். சூழலில் உள்ள தொழில்களைச் செய்யப் பாடசாலை வழிகாட்டியாக அமையவேண்டும். பாடசாலை தொழிற்சாலை போலவும், சன சமூக நிலையம் போலவும் விளங்க வேண்டும். பாடசாலையில் மதச்சார்பற்ற கல்வி அளிக்கப்படவேண்டும். நீதி நெறிகள் அவசியம் போதிக்கப்பட வேண்டும். போதனமொழி தாய்மொழியாக அமையவேண்டும் என்பன எல்லாம் மகாத்மா காந்தி அவர்களின் கொள்கையாகும்.

மனிதன் இறக்கும் வரை படிக்க வேண்டும். கல்வி பாடசாலைகளில் மட்டும் தான் நடைபெறுகிறது என்றால் அது முழுப் பிழையான கொள்கையாகும். தொழில் நுட்பங்கள் எல்லா இடங்களிலும் பரவ வேண்டும். சிறிய இயந்திரங்களின் உபயோகம் தெருவிற்குத் தெரு பெருகவேண்டும். அப்படியிருந்தால் மாத்திரமே நாம் எமக்கு வேண்டிய உணவு, உடை முதலியவற்றைச் செய்ய முடியும். இதற்குக் கல்வி முறை உதவவேண்டும், என்பதுவும் மகாத்மாவின் கொள்கையாகும்.

ஆனல் அதனுடன் நிற்காது தொழிலை ஆதாரமாகக் கொண்டு கல்வி உற்பத்தியாகினும், இறுதியாகப் பூரண மனிதனின் பூரணக் கல்வியாக முடிவு காணவேண்டும். அது மாத்திரம் அல்ல அக்கல்வி மூலம் ஓர் புதிய சர்வோதய சமூகம் எழல் வேண்டும். மகாத்மா காந்தி அவர்களின் கல்விக் கொள்கையை ஓரளவு தழுவியமைந்ததே இலங்கையின் புதிய கல்வித் திட்டமாகும். எனவே அக்கல்வித் திட்டத்தை மாணவர்களுக்கு ஊட்டி வருங்காலச் சந்ததியை முன்னேற்றுவோமாக.

**தேவராஜமலர் கந்தசாமி**
2 ஆம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் வளர்த்த ஆமைகள்

1. ஏடெடுத்தேன் பாட்டெழுத இயல வில்லை
என்னதிப ரெழிலுருவந் தோன்றிற் றென்முன்
பாடுபட்டும் பிறக்காத கவிதை யந்தப்
பால்முகத்தைக் கண்டதுமே பிறந்த தம்மா!
பீடுடைய அதிபரெனக் கடிப்பா ரென்றேன்
பின்பு அன்பி லாக்கோவை அதிப ரென்றேன்
நாடுபுகழ் நம்மதிபர் தாம்வ ளர்த்த
நல்லாமை களைப்பற்றிக் கூற வந்தேன்.

2. ஏதடிநீ எவ்வளவு திமிரு னக்கு
ஏற்றவொரு தலையங்க மறியா யோஇப்
போதெங்கள் முன்னிலையில் வந்தா யானல்
பொறுக்கிடச்செய் வோம்பற்கள் என்று ரைக்கும்
கோதையரைக் கற்பனையிற் காணு கின்றேன்
கோபங்கொள் ளாதீர்கள் கோவை நல்கும்
மாதரசி காளென்னை மன்னிப் பீரே
மங்கையர்க்குப் பொறுமைமிக நன்றே அன்றே

3. அதிபரது புகழ்பாட அடியே னுக்கும்
ஆசையுண்டு ஆனதலை யங்க முண்டு
நிதிமிகுந்தோர் கதியற்றோர் எவரு மிந்த
நிலவுலகிற் பலவுயிரை வளர்த்து நிற்க
மதிநிறைந்த நம்மதிபர் மனத்தி னாலே
யாண்புடனே வளர்த்துவரும் ஆமை கள்தாம்
அதிசிறந்து விளங்குவன என்றே எண்ணி
ஆவலுட னேயவற்றைக் கூற வந்தேன்.

4. பாரபட்சம் காட்டாமை பகைகொள் ளாமை
பண்புதவ றுமையுடன் பகட்டில் லாமை
நேரமது பிந்தாமை நேர்மை யற்றோர்
நிழல்கூடப் பாராமை நீண்ட வாழ்க்கைப்
போரதிலே சிக்கிடினும் பொய்சொல் லாமை
பொல்லாங்கு செய்யாமை புகழ்நா டாமை
ஈரநெஞ்சங் குறையாமை என்போன் றோரின்
இடர்களைய மறவாமை இரந்தி டாமை.

5. இத்தகைய எத்தனையோ ஆமை கள்தாம்
எம்மதிப ரகத்திடையே இலங்கக் கண்டேன்
அத்தனையும் எழுதிடத்தா னவ லானல்
அழகியநற் கலைமலரின் அளவை மீறேன்
உத்தமப்பே ரதிபரது உணர்வு மிக்க
உளமீர்க்கும் போதனையா லுயர்வு கண்டோர்
சித்தமதில் நன்றியுடன் அவர்வ ளர்த்த
சீரான ஆமைகளை வளர்த்து நிற்போம்.

**திருவாட்டி மனோன்மணி நடராசா** *( பழையமாணவி )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தி; செயற்படு

பல ஆண்டுகளாக ஆசிரியப் பணியிலே உழைத்த என் உடன் ஆசிரியர் ஒருவருடன் அன்று சென்று கொண்டிருந்தேன். அவசரமாகச் சென்று கொண்டிருந்த எம்மை எதிரே வந்த பைசிக்கிள் "வணக்கம் ரீச்சர்" என்ற குரலுடன் தடுத்து நிறுத்தியது. இருபது வயதுடைய வாலிபன் ஒருவன். அவன் முகத்திலே மலாச்சியும், அன்பும், நன்றியும் வழிந்தோடின. அகத்தின் அழகை முகம் எடுத்துக்காட்டியது. என் உடன் ஆசிரியரால் அந்த வாலிபன் யாரென்பதை மட்டிட்டுக் கொள்ள முடியவில்லை. "என்ன ரீச்சர்! என்னை மறந்து விட்டீர்களா? நான் தான ராஜன். உங்களிடம் மூன்றும் வகுப்புப் படித்தனான்" என்ருன் அந்த வாலிபன்.

"ஆ! ராஜனு? என்னடா இப்பிடி வளந்திட்டாய்? ஆளையே மட்டிடமுடியவில்லை. உன்னுடைய சுகம் எப்படி? என்ன செய்கிருய்?" என்று கேட்டார், உடன் ஆசிரியர். "ரீச்சர் நான் சுகமாய் சந்தோஷமாய் இருக்கிறேன். இப்ப மெக்கானிச்வேலை பார்க்கிறேன். என்ரை பொறுப்பில் ஒரு தொழிற்சாலை கூட வைத்திருக்கிறேன். முந்தியைப் போலக் குழப்படி செய்யவதில்லை. நான் நல்லாய் இருக்கிறதெல்லாம் உங்களாலை தான். நீங்கள் மூன்றும் வகுப்பிலை என்னை நல்லவனுக்க எவ்வளவு பாடுபட்டீர்கள்? உங்களைக் காணவேண்டுமென்று எவ்வளவு காலமாய் ஆசைப்பட்டனுன்! இப்ப கடவுள்தான் உங்களைக் காட்டித் தந்தவர். உங்கடை விலாசத்தைத் தாருங்கோ. கட்டாயம் நான் உங்களிடம் வரவேண்டும். ஆனல் ஒரு கவலைதான், நான் "படிக்கவில்லை..." ராஜனின் கண்களில் கண்ணீர் வடிய ஆரம்பித்தது.

"ராஜன்! அழாதே நீ இப்போது நல்ல மனிதனுய் வாழ்கிருய். அதுவே போதும். நீ என்னிடம் வரமுன் நானே உன்னிடம் வருவேன். சரி வருகிற சனிக்கிழமை உன் வீட்டிற்குக் கட்டாயம் வருவேன்" என்ருர். ஆசிரியர். "நன்றி ரீச்சர் கட்டாயம் வரவேண்டும்" என்று கூறிய ராஜன் தாயை விட்டுச்செல்லும் மகன் போல அரிதிற் பிரிந்து சென்ருன்.

நாங்களும் எங்கள் நடையைத் தொடர்ந்தோம். ராஜனின் தூய்மையான தோற்றம் அவன் பேசிக் கொண்ட மாதிரி அவனிடம் ஏதோ ஒரு பற்றை என்னிடம் உண்டாக்கிவிட்டது. எனவே அவனைப்பற்றி என் உடன் ஆசிரியரிடம் வினுக்களைத் தொடுத்தேன். அவரும் ராஜனின் வரலாற்றைக் கூறினுர். ராஜன் சிறுவயதிலேயே தாயை இழந்து விட்டான். அவனுடைய தகப்பன் அவனை நல்லாய் வைக்க எவ்வளவோ பாடுபட்டார். ராஜன் தந்தையின் சொல்லுக்குக் கட்டுப்படாத துடியாட்டக்காரனுய் வளர்ந்தான். "பாடசாலைக்குப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு எங்காவது போய்விடுவான். தந்தைக்கு இவனுல் நிரம்பிய கவலை. ஏதோ வகையாய் வகுப்பேற்றப்பட்டு மூன்றும் வகுப்புக்கு வந்துவிட்டான். என்னுடைய கையில் அகப்பட்டால் ஒருவரும் தப்பினபாடில்லை. வீடு தேடிப் போய் அவனைப் பாடசாலைக்குக் கூட்டிவருவேன். மத்தியானச் சாப்பாடும் என்னேடுதான். சிலவேளை மதிலால் ஏறிக் கூட ஓடிவிடுவான். ஐயோ! அவன் செய்த தறுகுறும்புக்கு அளவில்லை." என்று ஆசிரியர் தமது கதையை முடித்தார்.

தவறிய குழந்தைகளை நேரான வழியில் அழைத்துச் செல்ல இவ்வாறு உழைக்கும் ஆசிரியர்களை இன்று விரல் விட்டுத்தான் எண்ணவேண்டும். பதவிக்காக பணத்துக்காக உழைத்துக் கடமை முடிந்தது என்று திருப்திகொள்பவர் நம்மில் எத்தனைபேர்? பரிதாபம்! கடமை புரிய வேண்டிய நேரத்தில் முழுமையாகச் செயலாற்றுதவர் நம்மில் இல்லையா? படித்து, பயிற்சி பெற்று, பட்டம் பெற்று, பதவியேற்கும் ஆசிரிய குலமே! உன் சிந்தனையை ஆழமாக்கு, தரப்பட்ட நிகழ்ச்சிபோன்று உன் வாழ்வு எத்தனை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டது? சிந்தித்துப்பார்! உன் கரங்களில் ஒப்படைக்கப்பட்ட மாணவச் செல்வங்களை - ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தேடற்கரிய செல்வங்கள்தாம், நீ எவ்வாறு உருவாக்குகின்றாய்! "நான்வாழ்க்கையில் செய்தவை இரண்டு தவறுகளே. ஒன்று - பள்ளிக்கூடம் சென்றது. மற்றொன்று - எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டது." இவ்வாறு கூறியவர் யார்? ஏன் இவ்வாறு கூறினார்? ஆசார்ய விநோபா பாவேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மனிதனை உருவாக்க வேண்டிய நமது கல்வி முறையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியே இவ்வாறு கூறினார். நமது கற்பித்தல் முறை முழுமையாக இருக்க வேண்டுமாயின் மூன்று அம்சங்களை அது கொண்டிருக்க வேண்டும். 1. யோகம் (அதாவது மனநிறைவு அல்லது அமைதி) 2. உத்தியோகம் (உலகியல் வாழ்வுக்குகந்த ஒரு தொடர்பு) 3. சகயோகம் (பரஸ்பர சுரண்டலற்ற கூட்டுறவு) ஆழ்ந்த உள்ளம். ஒன்றை உணர்ந்தே இப்பெரியார் பேசியுள்ளார். மனநிறைவு. உள அமைதி அன்றட அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான வேலை வாய்ப்பு - இவற்றைக் கொடுக்காத கல்வி முறை சமுதாய உணர்வற்ற மனிதனையே உருவாக்கும். மனிதனாக வாழ்வதற்குப் பதில் பகுத்தறிவுடைய ஒரு மிருகமாகவே அவன் வாழ்வான்.

எமது கற்பித்தல் முறையால் முழு மனிதனைச் சமுதாய உணர்வு கொண்ட மனிதனைக் கடவுள் அன்பு பிறர் அன்பு இரண்டும் உடைய மனிதனை நாம் படைக்க வேண்டும். தன்னிடம் கல்வி பயில்கின்ற மாணவருள் புத்திக் கூர்மை படைத்தவர்களை ஒழுக்க சீலர்களை உருவாக்குவது ஆசிரியனுக்குச் சிரமமற்ற வேலை. ஆனால் மேற்காட்டிய மாணவன் போன்று குறும்புத்தனமுள்ள குழப்படிகார மாணவர்களிலும் ஆழ்ந்த பண்புகளும் ஆற்றல்களும் மங்கி மறைந்து கிடக்கும். இத்தகையோரைக் க்ண்டுபிடித்து அவர்களை நன்முறையில் உருவாக்குவதுதான் ஆசிரியரது நீங்காத கடமை. யானை தனது கன்றை ஈன்றவுடன் அந்தக் கன்று ஒரு பிண்டமாக, உருவமே தெளிவுபடாத ஒரு பொருளாகத் தோன்றுமாம். அந்த யானைக் கன்றைத் தாய் யானையானது நக்கி, நக்கி உருவமுள்ள, பொலிவுள்ள, அழகுள்ள கன்றாக ஆக்கிவிடுகிறதாம். நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளிடமும் எழில்மிக்க பண்புகள், ஆற்றல்கள் மறைந்து மழுங்கிக் கிடக்கும், அவற்றை இடைவிடாது முயன்று வெளிக்கொணரல் வேண்டும். அவர்கள் நல்வாழ்வு காண வழிகாணல்வேண்டும். அதன் வழி எதிர்கால உலகை உய்வித்தல் வேண்டும். இப்புனிதபணி உன்னுடையதே. ஆசிரிய குலமே, சிந்தி. சிந்திப்பதுடன் நின்றுவிடாது செயலாற்று.

அறிவொளி ஊட்டுபவர்களின் பாதங்கள் எவ்வளவோ புனிதமானவை. வானத்து விண்மீன்கள் போல் அவர் தம் பணியினால் ஒளிவீசுவர்.

**ஞானச்சகோதரி குளோட்டில்டா**
*(2 ஆம் வருடம்)*

> உண்மையைப் பார்க்க உதவும் கண்ணாடியே கலையாகும். மனிதன் சத்தியத்திலே அழகைக் காணத் தொடங்கும்பொழுது உண்மைக் கலை உதயமாகின்றது.
>
> —மகாத்மாகாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழிசையாய் இசைப் பயனுய் நின்ற பொருள்

ஓசையிலே ஒன்றியிருக்கும் இறைவன் உலகத்திற்குக் கர்த்தாவாகிறன். அந்த இறைவன் பஞ்ச பூதச் சேர்க்கையினுல் உருப்பெற்றுள்ள உடம்பினுள் அருவமாக உள்ள உயிருக்குத் தலைவனுகவும், இந்த உயிரும் உடலபும் இயங்குவதற்கான இயக்க காரணமாகவுமுள்ளான். உயிர்களில் மானிட வடிவம் கொண்ட உயிர்களே பகுத்தறிவுப் பேற்றினைப் பெற்றமையினுல், தமது பிறப்பு இறப்பு பிறவிப் பயன் என்பவற்றினை ஆராய்ந்து அறிந்து உணர முடிந்தது.

சிந்தனையாளர்கள் இயற்கையை ஆய்ந்து தீர்க்கமாகத் தெளிந்து விளக்கங்களேயும் எமக்குத் தந்துள்ளார்கள். "இவர்களைத் தத்துவ ஞானிகள்" என உலகம் கூறும். உலகில் எத்தேசத்திலுமுள்ள தத்துவ ஞானியர்களும் இயற்கையின் இயக்கத் தத்துவத்தில் ஒரே மாதிரியான கருத்தினையேதான் உலகத்தோர்க்கு உணர்த்தியுள்ளார்கள். நமக்குள்ளும் நமக்கு அப்பாற்பட்டும் ஒரு ஒப்பற்ற இயக்க சக்தி இருப்பதென்பதே அந்தக் கருத்தாகும்.

நமக்குள் நம்மையும் பிரபஞ்சத்துள் பிரபஞ்சத்தையும் இயக்கி நிற்கும் இயக்கம் எப்படிப்பட்டது ? அப்பாற்பட்ட இயக்கம் எத்திறத்தாலானது? இப்படி இயக்கி நிற்கும் பொருளுக்கு ஏதாவது வடிவம் உண்டோ? அதனுல் எமக்கு ஏதும் பயனுள்ளதா! என்றெல்லாம் ஆராய்ந்து சிந்தித்தார்கள் ஞானியர்கள். சிந்தனையின் பேறும் வீண் போகவில்லை! தெளிவு பிறந்தது. அந்த இயக்க சக்தி எம்மை நல்வழிப்படுத்திக் கடைத் தேற்றுவதற்காகவே எப்போதும் நிலையாகவுள்ளது என்றும், அந்த சக்தி மலரின் மணம் போன்று, பிரபஞ்சத்திலும் எம்மிலும் பிரிவில்லாமல் இயங்கி நிற்பதேனெனில், உயிரையும் பிரபஞ்சத்தையும் இயக்கி நிற்பதற்காகவேதான் எனவும் அறிந்தோர் உரைப்பர்.

நமக்கு அப்பாற்பட்டு நின்று இயங்கும் சக்தி பேரறிவுள்ளது. இது இன்ப அன்புமயமாக நின்று சிற்றறிவுள்ள இந்த மானிட உயிருக்குத் தன்னை அறிவித்து உணர்வளித்துத் தன்னில் இணையச்செய்து பேரின்பப் பேற்றினைத் தரவல்லது. இந்த இயக்க சக்தி கனி கரும்பு கற்கண்டு தேன் முதலியவைகளின் சுவை போன்றது எனவும், இந்தச் சுவைகட்கு மேலான ஒரு ஒப்புயர்வற்ற பேரின்ப உணர்வு என்றும், அந்த இயக்க சக்தி உருவமாகவும் அருவமாகவும் அருஉருவமாகவும் விளங்கி, ஓசை ஒலி வடிவமாகத் திகழ்கின்ற ஒப்பற்ற பரம் பொருள் என்றும் தத்துவஞானியர்கள் உலகோருக்குச் சொல்லி வைத்தார்கள். இதுவேதான் ஒலி விளக்கமெனவும் இந்த முடிவுதான் இசைத் தத்துவமெனவும் அறியக்கிடக்கிறது.

எனவே இத்திறத்திலான இயக்க முடிவினையே கடவுளின் தடத்த நிலைப் பொருளாகவும் சைவ சித்தாந்தம் உரைக்கின்றது. இதனையே ஓங்காரம், பிரமம், சிவம், சக்தி, முருகு, மால், கடவுள், கர்த்தர், அல்லா, குணங்குடி, இறைவன் என்றெல்லாம் சமய சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மேலும், யாழ், குழல், முழவு, சங்கு உடுக்கை முதலிய நாதக் கருவிகளும் நாம், வழிபடும் தெய்வ வடிவங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதனைக் கண்கூடாக அவதானித்து உணருமிடத்து, எவ்வகையிலும் அந்த இயக்கப்பொருள் ஓசை, ஒளி, வடிவாகவே விளங்கி நாதப் பிரம்மமாகவே உள்ளதென அறிகின்றேம். ஆகவேதான், அந்த இயக்கப் பொருளை உணர்ந்த எமது சைவ சமய குரவர்களும் "உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய்" நின்ற பரம் பொருள், ஏழிசையாய் இசைப்பயனுய் நின்ற பரம் பொருள் எனக் கூறியதுமல்லாமல், அந்தப் பரம்பொருளை இசையினுலேயே புகழ் மாலைகளும் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட உயிரானது பஞ்ச பூதத்திலான இந்த உடம்பினைத் தாங்கி நின்ற பயன் என்ன வெனில்; இந்தப் பிறவியிலேயே உயிர் தன்னிறைவு பெற்று ''பூரணத்வம்'' அடைவதுதான் என்பது பெரியோர்களின் கருத்து. மனித உடம்பினையும் ''நல்லதோர் வீணை'' என்கிறார் கவி ஒருவர்.

இப்பேற்றான ஆத்ம ஞானத்தினை அடைவதற்கு மார்க்கங்கள் எத்தனையோ விதங்கள் உலகத்திலுள்ளன. மார்க்கங்களின் முடிவுகள் எல்லாம் ஒரே மாதிரியானவையே என்பார்கள் தத்துவஞானியர்கள். கற்கண்டுக் கட்டியை எந்தப்பக்கம் சுவைப்பினும் சுவை ஒன்றுதான் என்பதனை உதாரணமாகக் காட்டுவார்கள் பெரியோர்கள்.

இருப்பினும் அந்த நாத தத்துவப் பொருளை உயிருடன் சுலபமாக இசையவைப்பது நாத உபாசனை என்பதனையே தான் '' இசைப்பயனாய் '' எனக் கூறினார்கள் போலும்! ''முள்ளை முள்ளால்தான் எடுக்கலாம் '' சூட்டைச் சூட்டால்தான் தணிக்கலாம்'' என்னும் முது மொழிகளிலிருந்தும் நாம் உணரலாம்.

நாதரூபமான அந்தப்பொருள் ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஓசைகளின் இசைவடிவமாகவே உள்ளது. சதாசிவ மூர்த்தியினுடைய திருமுகங்களாகிய ஐந்து திருமுகங்களிலிருந்தும் ரிகமதநி ஆகிய ஐந்து இசைகளும், திருவருளாகிய சிவசக்தியிலிருந்து ச, ப என்னும் இரண்டு இசைகளுமாக ஏழு இசைகளும் தோன்றினவென இந்த ஏழிசைகளின் தோற்றுவாயினை நாம் அறிகின்றோம்.

நாத மயமாக விளங்கி நிற்கும் பரம்பொருள், உயிர்களை உய்வித்தற் பொருட்டே ஏழிசை வடிவினனாகத் தோற்றுவாய் என்னும் திருவிளையாட்டினை நடத்தியுள்ளது எனவும் நாம் கொள்வதற்கு இடமிருக்கிறது.

'' சரிகமபதநி'' என்னும் சப்தஸ்வரங்களுந்தான் பரம்பொருள்; ஆகவே '' ஓம் '' என்னும் ஒலியை ஸரிகமபதநி என்கின்ற ஏழிசையின் ஸ்தானங்களில் இசைத்து உபாசனை செய்து சமாதி நிலையைப் பெறவேண்டும். இதுவே உண்மை மார்க்கம், இதுவே தான் இசைப்பயனும். இப்படி எமது காலத்தில் வாழ்ந்து வருபவராகிய யோகி சுத்தானந்தர் அவர்களும் உபதேசித்துள்ளார்கள். வேத ஆகமங்களில்கூட, ''நான் நாதவடிவாகவும் சாமகானப் பிரியனாகவும் இருக்கிறேன்'' என இறைவனே திருவாய் மலர்ந்தருளியிருக்கிறான்.

ஸ்வரம், பண், இராகம், பாக்கள் எல்லாமே ஏழிசையினுடைய வடிவந்தானே! நாதப்பரம்பொருளுடன் இணைந்துபேரின்பப் பேற்றினைப் பெற்ற பெரியோர்கள் பலரும் ஏழிசைப் பாக்களாலேயே துதி செய்தார்கள் என்பதனை நாம் அறிகின்றோம் எனவே தான், ''ஏழிசையாய் இசைப்பயனாய்'' ''ஏழு நரம்பின் ஓசையானை''; ''பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னை'' ''நரவிசை வடிவாய் நின்ற நாயகி'' ''சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி'' ''நாதரூபமானாக ராகத் துறைவோனே. எனவும் விளக்கம் தந்துள்ளார்கள் நாத யோகியர்கள்.

முடிவாகச் சிந்திப்போமானால் நல்லதோர் வீணையாகிய இந்த மானிட உடம்பு நலங்கெட்டுப் புழுதியில் இடுவதற்கு முன்பு, ஏழிசையாய் நின்ற பரம்பொருளை ஏழிசைப் பாக்களால் பாடி நாமும் இறையுணர் வினைப் பெறவேண்டியவர்களாக விருக்கின்றோம்.

இறை புகழாக இசைப் பாக்கள் பலவற்றையும் நமக்கெனவே பரம்பொருளின் அடியார்கள் பலரும் தந்துள்ளார்கள்.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் திருவாய்மொழி, கீர்த்தனை, சுருதிகள் போன்ற ஏழிசைப் பாக்கள் இசை வடிவான பரம்பொருளுடன் உயிரை இசையவைத்த அருட் பாக்களாகையினால் அவற்றினை நாமும் தமிழோடு இசைபாடி மலர் தூவி, ஏழிசை வடிவான பரம்பொருளுடன் சிற்றறிவு பேரறிவுக் கலப்பெய்தி அணைந்து இணைந்து பிணைந்து புணர்ந்து ''தாடலைப்பட்டு'' பேரின்பப் பேற்றினைப்பெற்று நித்தியமான சுகத்தைப் பெறுவதற்காகவே தான் ஏழிசையாய் இசைப்பயனாய் நிற்கிறது பரம்பொருள்.

சங்கீதபூஷணம் **சு. வி. பரமலிங்கம்**
(இசைப்பிரிவு, முதலாம் வருடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயக் கல்வியின் அவசியம்

தொன்று தொட்டு நிலவிவரும் இந்து சமயம் இன்றுவரை அழியாது ஆல் போல் தழைத்து வளர்ந்து பருத்துப் பல் கிளைவிட்டு விழுதுகள் ஈன்று உறுதியோடு பல்லாயிரக் கணக்கானோர்க்கு நிழல் தருகின்றதெனில் அதனுள் செறிந்து புதைந்து கிடக்கும் பரந்த நோக்கும் உறுதியான கோட்பாடுகளுமே அதற்குக் காரணமாகும். காலத்துக்கு காலம் பிற சமயங்களின் தலையீடு காரணமாகவும் நம்மின மக்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகள் காரணமாகவும் நலிந்து வளர்ச்சி குன்றிய நேரமெல்லாம் அடியார்கள் தோன்றி நம் சமயம் நலியாது தழைத்தோங்க உழைத்து வளர்த்து வந்ததை வரலாறு பகர்கின்றது. சைவசமயம் பகரும் எல்லாம் வல்ல இறைவன் பல்லார் உயிர் உணரும் பான்மையென மேலொருவன் இல்லாதவன், உயிர்களிடம் அகரவுயிர்போல் அறிவாகி நிற்பவன்; சகத்தோரை எளிதில் ஆட்கொள்ள அன்பே உருவாகி வருபவன் அவன் அருளால் அவன்தாழ் போற்றும் அடியவர்கள் ஆற்றும் அற்புதங்களில் அருட்சக்தியாக நின்று உலகோர்க்குத் தன்னை உணர்த்துபவன். இங்ஙனம் வேண்டுவோர் வேண்டும் வகையில் வேண்டும்போது இப் பொல்லாத உலகில் பல்வேறு திருமேனிகள் தாங்கி உலவி வரும் அத் தலைவனை இல்லை என்பாரும் பொய் என்பாரும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று எண்ணமிட்டு எப்படியேனும் வாழ்ந்தால் போதும் என வாழ நினைக்கின்றவரும் பலராவர். இவர்களின் நெஞ்சங்கள் திருந்த அறியாமையிருள் விலகச் சமயப் போதனை அவசியமாகின்றது.

ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் மதமாம் இந்துமதம் அக்காலத்து மக்களின் அறிவுக்கும் சிந்தனைக்கும் ஏற்பவும் சந்தர்ப்ப சூழலுக்கு இசைவாகவும் ஓர் உண்மையை உணர்த்துவதற்காகக் கதைகளையும் கற்பனைகளையும் பயன் செய்திருக்கலாம். அவை ஆராய்ச்சி மிகுந்த இக்கால மக்களின் பார்வைக்கு நகைப்பையூட்டவும் கூடும். ஆனால் சிந்தனைத் திறத்தோடும், காரணகாரிய ஆய்வோடும் இத்தகைய புராணக் கதைகளை அணுகினால் அவற்றின் உள்நோக்கம் புலப்படாமற் போகாது. கதையை விடுத்துக் கருப்பொருளை உணர முயலல் வேண்டும். காந்தியடிகள் "பூந்தோட்டத்தினுள் நுழைபவன் மணமலர்களைப் பார்க்க வேண்டுமேயொழிய அங்குக் குவிக்கப்பட்டிருக்கும் மாட்டுச் சாணங்களை நோக்கக்கூடாது" என்று கூறியதை நினைவு கூர்தல் நன்று.

சமயத்தின் போதனைத் தேவை பற்றிக் கல்வியியலாளர் கூறும் கருத்துப் பின்வருமாறு: "சமயமானது மனிதனை மனிதனுய் வாழவழிகாட்டி நல்வழிக்கு ஈர்த்துக் கொள்கின்ற காரணத்தால் அது மனிதனின் நன்னெறிப்படுத்தும் காரணியாக அமைந்து விட்டது. மேலும் அவனின் ஆளுமையை முழுமையாக்கும் மனிதத்தன்மை வாய்மை அறம் முருகியல் ஆகிய பலவும் வளர்ச்சியடையச் செய்கின்றது. சமயம் வாழ்க்கையின் இலட்சியத்தை அறிவுறுத்துவதுடன் அன்பு தியாகம் பண்பு பணிவு அடக்கம் மனிதத்தன்மை தயை தாட்சண்யம் ஆகியவற்றோடு, கலை கலாச்சாரம் அறிவியல் சுகாதாரம் ஆதியவற்றையும் அறிவுறுத்துகிறதென்றால் மிகையாகாது. கல்வியின் இலட்சியம் விடையங்களைப்பற்றிய ஞானத்தைச் சேகரிப்பதன்று. மன ஒருமையே கல்வியின் அடிப்படையான இலட்சியம் எனச் சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். எனவே நமது சைவசமயத்தில் ஐம்புலன்களை அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்தி வழிபடுவதே இறையருளைப் பெறும் வழி எனச் சொல்லப்படுகின்றது."

சமயம் பலநாடுகளில் கட்டாய பாடமாகப் போதிக்கப் படுகிறதெனினும் ருஷ்யாவிலும் அமெரிக்காவிலும் அவ்வாறன்றி ஒழுக்கக்கல்வி போதிக்கப் படுகின்றது. மனிதன் பிறந்தநாள் தொடக்கம் இறக்கும் வரை சமூகத்தில் ஒரு அங்கத்தவனுகவே வாழ்கின்றான்; எனவே சமூக விழுமியங்களுக்கேற்பத் தன் நடத்தைகளைக் கட்டுப்படுத்தி அவற்றின் மூலம் ஆளுமையை விருத்தியாக்க வேண்டியவனுகின்றான். எனவே தான் சமூகம் நல்லன என்றும் சரியானவை என்றும் ஏற்றுக்கொண்டதைத் தானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்று அல்லாதனவற்றைத் தவிர்த்து வாழக் கற்றுக் கொடுப்பது சமயம் ஆகும். நேர்மை அன்பு எளிமை அடக்கம் தயை உறுதி ஆகிய நற் செய்கைகளின் அம்சங்களை ஒழுக்க நெறிகளைப் போதிப்பது சமயக் கல்வியாகும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என ஒழுக்கத்திற்கு வரைவிலக்கணம் வகுத்து வைத்தார் பெருநாவலராம் வள்ளுவர். ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவனிடம் அன்பு தலை காட்டுகின்றது. அன்பு என்பதை ஆழமாகச் சிந்திப்பின் எல்லாச் சமயங்களுமே அதனை வலியுறுத்துகின்றன என்ற முடிவுக்கு நாம் வருவோம். "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிகிலார்" என்னும் திருமூலர் திருமந்திரமும் "உன்னைப்போல் உன் அயலவனையும் நேசி" என்ற யேசுபிரானின் கூற்றும் அன்பின் இறை தன்மையை அழகை எடுத்துரைக்கின்றன.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்னும் பொய்யாமொழியின் திருவாக்கிலும் அன்பே பேசப்படுகிறது. மணிவாசகனார் கண்ணப்பரின் இறுகிய அன்பை எடுத்துக் காட்டுமுகமாக,

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்
ஆட்கொண்டருளி

எனக் கூறுகின்றார். புத்தகத்தினுள் மறைத்துக் கொண்டுவந்த கத்தியினால் குத்திக் கொன்றவனையும் மன்னித்துப் பிறர் அவனைத் தாக்காவண்ணம் நகருக்கப்பால் கொண்டுபோய் விடுங்கள் என்று வேண்டினார் மெய்ப்பொருள் நாயனார். எனவே அன்பை எடுத்துக்காட்டின் அதன் சிறப்புக்கு அளவே இல்லை எனலாம். இத்தகைய அன்பை ஆக்குவது சமயக்கல்வியே ஆகும். இவ்வாறே கடமை, சேவை, எளிமை ஆகியவற்றை மனிதனுக்கு உணர்த்துவதும் சமயம் என்றால் வியப்பில்லை.

சமயக் கல்வி கவின்கலைத்துறையை மிகவும் வளப்படுத்தி உள்ளது. அதன் உபபிரிவுகளாக இசை, நடனம், நாடகம், சிற்பம் ஓவியம் ஆகிய கலைகள் இடம் பெறுகின்றன. மூவேந்தர் காலத்தில் சகல தேவஸ்தானங்களிலும் நுண்கலைக் கல்லூரிகள் இயங்கி வந்தன என்று சரித்திரம் பகர்கின்றது. வாத்தியக் கலைக்கும் சமயம் இடமளித்துள்ளது. தேவஸ்தானங்களிலே குறிப்பாக நாதஸ்வரம் முக்கிய இடத்தை வகிப்பதை நாமறிவோம். சமயத்தில் விஞ்ஞானத்தையும் காண்கிறோம். எனவே உலகின் பல்வேறு துறைகளிலும் சமயம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இவ்வாறான சமயக் கல்வியை நாம் பிள்ளைகளுக்கு அவர்களின் இளமைப் பருவத்திலிருந்தே கற்பித்துவரல் அவசியமாகின்றது. ஆழ்ந்த தத்துவங்களையும், உட்கருத்துக்களையும் ஆரம்பத்தில் போதிக்காது வாழ்க்கையோடு ஒட்டிய உதாரணங்கள் மூலம் சிறார்களின் மனத்தில் சமய அறிவை விருத்தி செய்தல் மூலம் எதிர் காலத்திலே ஒழுக்கத்தால் மேம்பட்ட சமூக இசைவாக்கம் பெற்ற மக்களை உருவாக்குவதுடன் தலைசிறந்த ஒரு சமுதாயத்தையும் நாம் காணமுடியும் என்பது திண்ணம்.

**திருமதி குணமணி சிவஞானம்**
II-ம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபவம் பேசுகிறது

[சென்ற ஆண்டு எமது கலாசாலையில் நாடகக் கருத்தரங்கு ஒன்று நிகழ்ந்தது. அக் கருத்தரங்கிலே நாடகத் துறையில் அனுபவம் பெற்ற கலைஞர் பலர் கலந்து கொண்டனர். கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, திரு. எஸ். டி. அரசு, திருமதி வள்ளி நாயகி இராமலிங்கம், கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, திரு சண்முகலிங்கம் (குழந்தை) பேராசிரியர் திருமதி சு. செல்லத்துரை ஆகியோர் நாடகத் துறையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய கருத்துக்களை வழங்கினர் இக் கருத்துக்கள் நாடகத்தில் ஈடுபாடுள்ள அனைவர்க்கும் பயன்படக்கூடுமாதலால் அவற்றைத் தொகுத்துத் தருகின்றோம். — ஆசிரியர்]

**நாடகமும் இயக்குனரும் :**

நாடகத்தில் இயக்குனரின் பங்கு மிக முக்கியமானதொன்றாகும் என்பதை யாவரும் அறிவர் இயக்குனரின் பணி நாடகம் பார்ப்போர்க்கு வெளிப்படையாகத் தெரியாவிடினும் நாடகத்தின் இயக்கத்திற்கும் வெற்றிக்கும் மூலகாரணராயுள்ளவர் இயக்குனரே. அவர் எத்தகைய பணிகளை ஆற்ற வேண்டும் என்பது வரையறைக்குட்படாததொன்றாகும். பொருத்தமான எழுத்துப்பிரதியைத் தெரிவு செய்தல் இயக்குனரின் முதற்கடமை. கதைப் பாத்திரங்களுக்குகந்த நடிகர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பும் இயக்குனர்க்கே உண்டு. ஒத்திகை நடத்துதல் மற்றும் அலங்காரக் கலைஞருடைய பணிகளைப் பெறுதல் நடிப்பதற்குப் பயிற்சியளித்தல், பேசுவதற்குப் பயிற்சியளித்தல், ஆகிய பணிகளும் இயக்குனர்க்கே உரியனவாகும். இயக்குனர் சொல்வதை எந்தப் பெரிய நடிகராலும் கேட்டு அதன்படி நடக்கக் கடமைப்பட்டுள்ளவராவர்.

நாடக அரங்கின் உயர் கலைஞன் என்ற வகையில் இயக்குனர் இருக்கின்றார். நாடக அரங்கில் நிகழும் தவறுகள் இயக்குனரையே நினைவுபடுத்தும். எனவே இயக்குனரின் பணி பொறுப்பு வாய்ந்ததொன்றாக இருப்பதோடு மட்டுமல்லாது இயக்குனர் நடிகர்களைச் சரியான முறையில் இயக்கக் கூடிய திறமை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

**நாடகமும் உரையாடலும் :-**

நாடகம் சிறப்புற்று அமைய உரையாடல் மிக முக்கியமான தொன்றாகும். உரையாடல் சிறுச்சிறு வசனங்களாகத் தெளிவுற அமைந்திருத்தல் வேண்டும். நீண்ட வசனங்கள் நடிகனுக்குப் பேசுவதற்கும் கஷ்டம். அதேசமயம் கேட்பவருக்கும் விளங்கிக் கொள்ளவும் கஷ்டம். சலிப்புத் தட்டக் கூடிய வகையில் உரையாடல் அமைந்திருத்தல் கூடாது. தனியொருவரின் உரையாடல் அளவிற்கு அதிகமாக நீண்டு போகாமல் சிறுச் சிறு பகுதிகளாகப் பிரித்தல் அவசியம். இலக்கிய, புராண, இதிகாச நாடகங்களில் உரையாடல கதை நிகழ்காலத்திற்கு ஏற்றமாதிரி அமைதல் வேண்டும். அந்த நாடகங்களிலுள்ள பொருளை மாற்றாமல் உரையாடலைச் சிறு வசனங்களிலோ அன்றி உணர்ச்சியைக் காட்டக் கூடிய ஒரு வசனத்திலோ அமைப்பது வசனகர்த்தாவின் திறமையில் தங்கியுள்ளது.

பலபேர் நாடகத்தில் பங்கு பற்றும் போது உரையாடலில் அவர்கள் எல்லோரும் இடம் பெறத்தக்க விதத்தில் அமைவது விரும்பத்தக்கது.

உரையாடல் எதார்த்தமாக அமைவது வரவேற்கத்தக்கதே. ஆனால் நூற்றுக்கு நூறு எதார்த்தமாக அமையவேண்டும் என்றில்லாமல் எதார்தத்தினின்றும் ஒரு சிறிது விலகிக் கலை உணர்வையும் உண்டாக்கும் வகையில் உரையாடல் அமைதல் வேண்டும். பிராந்திய வாழ்க்கையினைப் பிரதிபலிக்கும் நாடகங்களில் அப் பிராந்தியத்தின் மொழிவளம் உரையாடலில் காணப்படலாம். எனினும் இயற்கையான உரையாடலை நாம் நாடக அரங்கிற்கு வெளியிலும் காண முடியுமாதலால் கலையுணர்வும் சிறிது கொண்டுள்ள உரையாடல்களே நாடகத்தில் இடம் பெறல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகமும் நடிகரும் :**

நடிகரின் பங்கு நாடகத்திற் குறிப்பிடத்தக்க தொன்று. நடிகன் தன்னை மறந்து தான் ஏற்றுள்ள பாத்திரமாகவே மாறி நடிக்க வேண்டும் என்று சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். ஆனால் அது தவறு. ''நான் இன்ன பாத்திரத்தை ஏற்றுள்ளேன். அப்பாத்திரத்தைச் சிறப்புறச் செய்வது என் கடமை'' என்ற எண்ணத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடித்தல் வேண்டும். தன்னை மறந்து நடிப்பவன் சிறப்பாக நடிக்க முடியாது. நடிப்பு சுயமாக இயற்கையாக இருக்கவேண்டும். இன்னொருவருடைய பாணியைப் பின்பற்றி நடிப்பதென்பது அவர்களுக்குச் சுயமான திறமை இல்லை யென்பதையே காட்டும்.

நடிப்பது இலகுவான செயல், வசனம் பேசி விட்டால் போதுமென்றில்லாமல் நடிப்பதற்குத் தேவையான பயிற்சிகளை நடிகன் தினமும் பெறுதல் வேண்டும். உடல் தசைகளின் அசைவு பயிற்சியினால் ஏற்படுவதாகும். நடிகன் சுகதேகியாக இல்லாவிட்டால் நாடகம் வெற்றி பெற முடியாது. சிறந்த நடிகனைத் தொடர்ந்து விளங்க உடற்பாதுகாப்பு அவசியமாகும். அதனோடு நடிப்பதற்கு ஏற்ற நல்ல குரலைப் பெற்றிருப்பதும் அவசியமாகும். வெளியான இடத்தில் குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் பயிற்சி செய்து கொள்ள வேண்டும்.

பெண்கள் ஆண் பாத்திரம் ஏற்று நடிக்கும் போதும் ஆண்கள் பெண் பாத்திரம் ஏற்று நடிக்கும் போதும் சிரமமேற்படுகின்றது. எனவே நடை, குரல் என்பனவற்றிற்குத் தரமான பயிற்சி பெறுதலும் அவசியமாகும்.

**நாடகமும் மேடையமைப்பும் :**

நாடகத்திற்கு ஏனைய கலையம்சங்களைப் போல மேடையமைப்பும் மிகுதியும் வேண்டப்படுகின்றது. ஒரு நடிகனின் ஒப்பனை அமைப்பு எவ்வாறு அவன் தாங்கும் பாத்திரத்தின் தன்மையைப் பார்ப்பவரது உள்ளத்தில் பதிக்க உதவுகிறதோ அதேபோல மேடையமைப்பும் நாடகக் கதை நிகழும் இடங்களை இரசிகர்களின் கண்முன் காட்டுவதாக அமைதல் வேண்டும். மக்களின் கவனத்தை ஈர்த்துக் கதை நடக்கும் இடத்திற்கு இழுத்துச் செல்வதாகிய மயக்கத்தினை மேடையமைப்பு உண்டாக்குவது மிக மிக அவசியமாகும். இன்று நடைமுறையிலிருக்கும் மேடையமைப்பில் பல குறைகள் காணப்படுகின்றன.

மேடை எவ்வளவு அகலமுடையதாய் இருக்க வேண்டும், எவ்வளவு உயரமுடையதாய் இருக்க வேண்டும் என்பதில் முதலில் கவனம் செலுத்துதல் அவசியமானது. நடிக நடிகையர் மேடையில் நிற்பதிலிருந்து அவர்களின் தலைக்குமேலே நாலடி இடைவெளி இருத்தல் விரும்பத்தக்கது. நீள் சதுரமாக மேடை அமைக்கப்படல் வேண்டும். ஆனால் இன்று வாடகைக்குப் பெற்று அமைக்கும் திரைகள் மேடையின் அளவிற்குப் பொருத்தமில்லாமல் இருப்பதைக் காண்கின்றோம்.

மின்னொளி உத்தி மூலம் உதவியின்றி மேடையிலே தேவையான காட்சிகளை அமைத்துக் கொள்ளலாம் 'சைக்கோராமா' ஒளி மூலம் வரைந்த செடி, கொடி மரங்களை வெண்திரையில் படும்படி செய்வதன் மூலம் ஒரு பூங்காக் காட்சியைக் காட்ட முடியும். இது போலவே விரும்பிய காட்சிகள் எவற்றையும் அமைத்துக்கொள்ளலாம்.

இலகுவாகக் கையாளக் கூடிய பொருள்களோ ஆசனங்களோ தாம் மேடையில் கையாளப்பட வேண்டும். காட்சி ஜோடனைகள் மேடையில் அதிகமாக நிறைக்கப்பட்டால் நடிகர்கள் நடிப்பதற்கு வசதியீனத்தை ஏற்படுத்தும். மின்னொளி, ஒலிபெருக்கி வெளியில் தெரியாவண்ணம் அமைக்கப்படல் வேண்டும்.

**நாடகமும் ஒப்பனையும்:**

ஒப்பனை பற்றிக் கூறுமிடத்து நாம் ஒவ்வொருவரும் ஒரு ஒப்பனையாளராகவே இருக்கின்றோம் எனலாம். நாளாந்தம் நாம் செய்து கொள்ளும் ஒப்பனைக்கும் நாடகத்திற் செய்து கொள்ளும் ஒப்பனைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. அழகும், இளமையுமுள்ளவராகக் காட்டத் தினமும் ஒப்பனை செய்கிறோம். நாடகத்தில், அழகுள்ளவராகவும், அழகற்றவராகவும், முதுமையானவராகவும், நோயாளிகளாகவும், இப்படிப் பலவாறு ஒப்பனை செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி உள்ளது. இதனுல்தான் நடிகர்கள் தமக்குத் தாமே ஒப்பனைசெய்ய முடியாத வராய் ஒப்பனைக் கலைஞரின் உதவியை நாடுகின்றனர்.

ஒப்பனை நடிகனது நடிப்பிற்குத் தடை யாக இருக்கக் கூடாது. எனவே ஒப்பனை செய்யும் போது பல விடயங்களை நுணுக் கமாக அவதானிக்க வேண்டும்.

மேடையில் நடிக்கும் ஒவ்வொருவரும் தாம் ஒப்பனை செய்யப்பட்டு மேடையில் நடிக்கிறுர்கள் என்பதையும் தம் முன்னே மக்கள் இருக்கிறுர்கள் என்பதையும் நினை வில் வைத்திருப்பதோடு குறிக்கப்பட்ட ஒரு பாத்திரத்தின் உணர்ச்சியுடனும் நிற்க வேண்டும். இத்தகைய உணர்விருக்கு மாஞல் நடிகர்கள் தமது ஒப்பனை கலை வதையும் வேறு பாரதூரமான அசம்பா விதம் நடப்பதையும் தவிர்க்க முடியும்.

ஏற்றுள்ள பாத்திரத்திற்குப் பொருத் தமான ஆடை அணிகலையே அணிய வேண் டும் அத்தோடு குறித்த நாடகம் எக்காலத் துப் பாத்திரங்களைச் சித்திரிக்கின்றது என் பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

**நடிகர்கட்குப் பண்பு தேவை:**

நாடகம் தொடங்குமுன்னர் நடிகர்கள் இறைவனுக்கும் தம்மோடு நாடகத்திற் பங்கு கொள்ளும் கலைஞர்க்கும், நாடக ஆசானுக்கும், பக்க வாத்தியக்கலைஞர்க்கும் வணக்கம் செலுத்துவதோடு மேடைக்கும் வணக்கம் செலுத்த வேண்டும். பத்தியற்ற கலை மக்கள் உள்ளத்தில் நல்ல உணர்வை ஊட்டமுடியாது. கலையைத் தெய்வமாகப் போற்றுவது தமிழர் பண்பு.

"தேனீ"

---

ஓயாமல் தூற்றல் போட்டால் அது மழையாக மாட்டாது. சிணுங் கல் மழையினுல் கெடுதிதான் உண்டாகும் தூற்றலாகத் தொடங்கியது மழையாக விரைவிலே பெய்து முடித்துவிட வேண்டும். ஒரு நல்ல காரி யம் செய்யத் தொடங்குவோன் அதை ஒரே நீட்டாக வருடக்கணக்கில் நீட்டி மற்றவர்களுக்கு அதுவே ஒரு தீராத தொல்லையாகும்படி செய்ய லாகாது. "சுபஸ்ய சீக்கிரம்". நன்மையைத் துரிதப்படுத்த வேண்டும்.

— பாரதி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் அன்பு

ஆண்டவர் உலகைப் படைத்தார். மனிதனும் அவரின் அதிசய சிருஷ்டியே. மனிதனைத் தனது சாயலிலே (தேவதூதர்களிலும் சற்றுச் சிறியவனாகவே) சிருஷ்டித்தார்.

அவனுக்குத் தமது அன்பினால் சர்வத்தையும் அடக்கி ஆளும் அதிகாரத்தை ஆண்டவர் கொடுத்தார். ஆனால் அவரால் படைக்கப்பட்ட மனிதன் அவரின் கட்டளையை மீறினதால் அவன் சமூகத்தினின்றும் துரத்தப்பட்டான். ஆயினும் கிருபையும் அன்பும் நிறைந்த கர்த்தர் அவனைப் பின் தொடர்ந்து அவனை வழி நடத்தி வந்து தமது ஆசாரியர் மூலமாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாகவும் மனிதர் பாவம் செய்யும் பொழுது அடிக்கடி சிட்சித்தும், எச்சரித்தும் தமது வழியில் நடத்த முயன்றார். இன்னும் அவ்வாறே நடத்திவருகிறார். அவரின் எச்சரிக்கையை ஏற்றுக்கொள்ளாதவர்களை அவர் நிர்மூலமாக்கினார்.

தாம் உண்டாக்கிய மனிதன் இன்னும் மனம் திரும்பவில்லை எனக்கவலைப்பட்டு அவனின் மீது கொண்ட அளவுக்கதிகமான அன்பின் நிமித்தம் தமது குமாரனையே இப்பூவுலகத்திற்கு அனுப்பினார்.

அவர் ராஜாதிராஜன், கர்த்தாதி கர்த்தா. ஆனால் ஏழையோடு ஏழையாய் ஏழைக்கோலம் பூண்டார். ஏழைகளோடு சஞ்சரித்தார். ஏழைகளுக்காகப் பாடுபட்டார். எம்மைப் போன்ற பாவிகளைத் தேடி அலைந்தார். சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்க ஆவலுடன் இருந்தார். இன்னும் இருக்கிறார். அவரிடம் போகும் ஒருபாவியையும் புறம் தள்ளிவிடார். நோயுற்றவர்களுக்குச் சுகத்தையும், சமாதானம் அற்றவர்களுக்குச் சமாதானத்தையும் யாரும் அற்ற அநாதைகளுக்கு தாயும் தந்தையுமாய் ஆதரவையும் அளித்து ஜீவித்தார்; இன்னும் ஜீவிக்கிறார்.

இத்துணை மகத்துவமுள்ளவரை யூதர், அதாவது அவருடைய போதனையை வெறுத்தவர் சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தனர். எல்லாச் சரீரப்பாடுகளையும் பொறுமையோடு சகித்தார் ''அன்பு அனைத்தையும் சகிக்கும்'' என்ற உண்மையை ஆண்டவர் தம் வாழ்க்கையில் நிரூபித்துக் காண்பித்தார். பாவிகளை மீட்டுக் கொள்வதற்காகத் தமது இரத்தத்தைச் சிந்தினார். இதுவே அவரின் அன்பின் மகத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

**செல்வி எல்சி சமுவேல்**
II ஆம் வருடம் (ஆரம்பக்கல்விப்பிரிவு)

---

எனது வாழ்விற்கு நான் என் தந்தைக்குக் கடப்பாடுடையேன். ஆனால் நான் நன்முக வாழ்வதற்கு என் ஆசிரியரே காரணர்.

மகா அலெக்சான்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசளிப்பு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கலைமலர்' குழுவினர் நடத்திய

# ஓரங்க நாடகப் பிரதிப் போட்டி-1977

1976 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வோராண்டும் 'கலைமலர்' குழுவினர் ஓரங்க நாடகப் போட்டி ஒன்றினை நடத்தி, அப்போட்டியிலே முதற்பரிசு பெறுபவர்க்குத் தங்கப் பதக்கம் பரிசிலாக வழங்குவதெனவும், அவரின் நாடகத்தைக் கலைமலரில் வெளியிடுவதெனவும் தீர்மானித்தனர்.

இத்தீர்மானத்திற்கமைய 8-10-77 அன்று கலாசாலைப் பிரதான மண்டபத்தில் நாடகப் பிரதிப்போட்டி நடைபெற்றது. சென்ற வருடத்தளவு உற்சாகத்தை ஆசிரிய மாணவர் காட்டாவிடினும், கலந்து கொண்ட ஐவரினதும் நாடகங்கள் தரமாகவே அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகப்பிரதிப் போட்டிக்கு நடுவர்களாகப் பின்வரும் மூவரும் பணியாற்றினர்.

**திரு. மு. வி. ஆசீர்வாதம் J. P.**
உரிமையாளர் ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்

**திரு. பி. நடராசன்,** ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

**திரு. த. பஞ்சலிங்கம்,** ஆசிரியர், துரையப்பா ம. வி. கொழும்புத்துறை

இவர்களின் தீர்ப்புப்படி பின்வரும் மூன்று நாடகங்களும் முதலிடம் பெறுகின்றன.

முதலாம் பரிசு **சிரிப்பு — திருமதி தேவராஜமலர் கந்தசாமி**

இரண்டாம் பரிசு **கவிதா நீ ஒரு கவிதை — செல்வி யோகா வேலுப்பிள்ளை**

மூன்றும் பரிசு **வட்டத்துக்குள் விட்டம்—திருமதி சந்திரலேகா ஜெகதீசன்**

முதற்பரிசுக்கான தங்கப்பதக்கம் சிவநெறிக் (மில்க்வைற் அதிபர்) காவலர் திரு. க. கனகராசா J. P. அவர்களாலும், இரண்டாம் மூன்றும் பரிசுகளுக்கான புத்தகங்கள் சட்டத் தரணி திரு. த. சோமசுந்தரம் அவர்களாலும் வழங்கப்பட்டுள்ளன. நடுவர்களுக்கும், பரிசில்கள் அளித்த வள்ளல்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரியது.

போட்டியிலே கலந்து கொண்டு தம் திறமைகளைப் புலப்படுத்திய சகோதரிகளுக்கு எமது வாழ்த்துக்கள் உரியவாகுக.

'கலைமலர்' குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தமிழ்ப்பரிசு நாடகம்

# சிரிப்பு

## பாத்திரங்கள்

**இலட்சுமணன், ஊர்மிளை, இராமன், சீதை, மந்தரை, சேடிப் பெண்**

காட்சி I

(ஊர்மிளை நந்தவனத்திலே அமர்ந்திருக்கிருள். அவள் முகத்தில் கோபத்தின் சாயல். இலட்சுமணன் வருகிருன்)

**இலட்சுமணன் :** என்ன? என்னருந் தேவியார் தனிமையிலே, நந்தவனத்திலே சோகமேயுருவாக அமர்ந்திருக்கிருர்?

**ஊர் :** (பேசாதிருக்கிருள்)

**இலட் :** (அருகே வந்து) ஊர்மிளை, என்ன நடந்தது? ஏன் உன் முகத்தில் இந்தச் சினம்?

**ஊர் :** என்னையா கேட்கிறீர்கள்?

**இலட் :** உன்னைக் கேட்காமல் வேறுயாரைக் கேட்பது? உனக்கு யார் என்ன செய்தார்கள்? அல்லது நான்தான் ஏதும் தவறு செய்துவிட்டேனு? நானறிய ஒரு பிழையும் விடவில்லையே! காரணத்தைச் சொல்ல மாட்டாயா?

**ஊர் :** பலரறிய அரசசபையிலே என்னை அவமானப்படுத்தியதுமல்லாமல் கேள்வி வேறு கேட்கிறீர்களா?

**இலட் :** அவமானமா? நானு? என்ன உளறுகிருய்? பெண்களைத் தெய்வமாக மதிப்பவன் நான். நான் போய்ப் பெண்ணுகிய உன்னை, அதுவும் என் இதய ராணியை அவமானப்படுத்துவேனு?

**ஊர் :** போதும். போதும் சாகசம், எல்லாம் நான் அறிவேன். என்னைத் தனியே விட்டுப் பதினுன்கு ஆண்டுகள் அண்ணுவுடன் வனம் சென்றீர்களே? அப்போதே தெரியும் உங்கள் யோக்கியதை எனக்கு,

**இலட் :** கடமை என்னை அழைத்தது. என் கண்கண்ட தெய்வம் அண்ணு. அவர் சேவையே எனக்கு முக்கியம். அதன் பிறகுதான் ஏனைய இன்பங்களை நான் விரும்புவேன். இதுவெல்லாம் நீயறியாதது அல்லவே! பிறகு ஏன் இந்தச் சஞ்சலம்?

**ஊர் :** தெரியும், தெரியும் பெண்ணைத் தெய்வமாக மதிப்பவர்தான் சூர்ப்பனகையின் மூக்கை அரிந்தீர்களோ?

**இலட் :** சூர்ப்பனகை பெண் அல்ல, அரக்கி. கொடுமையே உருவானவள். அண்ணுவைத் துன்பப்படுத்தினுள். ஆகையால் மூக்கை இழந்தாள்.

**ஊர்:** உம். பெரிய வீரர்! மூக்கறுக்கும் வீரர்.

**இலட் :** நான் என்ன வீரனுகவோ இருந்து விட்டுப் போகிறேன். நீ மழுப்பாமல் விஷயத்திற்குவா. நான் எப்பொழுது உன்னை அவமானப் படுத்தினேன்?

**ஊர் :** போதும் நடிப்பு. இராமபிரானின் பட்டாபிஷேகத்தின்போது நானும் அக்கா சீதையும் அருகருகே இருக்கையில் நீங்கள் ஏளனமாகச் சிரிக்கவில்லையா?

**இலட் :** ப்பூ இதுதாஞ விஷயம்? (பெரிதாகச் சிரிக்கிருன்).

**ஊர்:** (அழுகையுடன்) பார்த்தீர்களா? நான் நினைத்ததில் என்ன தப்பு? எல்லாம் என் தலைவிதி. (அழுகையுடன் செல்லத் திரும்புகிருள்)

**இலட் :** பொறு ஊர்மிளை (சென்று கையைப் பிடிக்கின்ருன்.) நான் உன்னைப் பார்த்துச் சிரித்ததாகவா நினைக்கிருய்?

**ஊர் :** (சீறுகிருள்) வேறு யாரைப் பார்த்துச் சிரித்தீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலட் :** நான் உன்னைப் பார்த்துச் சிரிக்கும் அளவிற்கு நீ என்ன செய்தாய்?

**ஊர் :** (பேசாது மறுபக்கம் பார்க்கிருள்)

**இலட் :** (அவள் தோளில் கைவைக்கிருன்) சொல் ஊர்மிளா! நீயாக எதையோ கற்பனை பண்ணிக் கொண்டு வருந்துகிருய். நீ எண்ணியதைச் சொல்.

**ஊர் :** (விம்மியபடி) அக்கா தன் கொழுநரை விட்டு ஒரு கணமும் பிரிந்ததில்லை. அவர் வனம் சென்றபோதும் கூடவே சென்ருள். ஆனல் நானே உங்களுக்குச் சேவை செய்யாமல் உங்களை வனத்திற்கு அனுப்பி விட்டு, இங்கு அரண்மனைச் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு இருந்தேன்.

**இலட் :** அப்படியா?(ஆச்சரியபாவத்துடன்) அப்புறம்?

**ஊர் :** அப்படிப்பட்ட நான், காட்டிற்கும் கூடவே சென்று பதி சேவை புரிந்த அக்காவிற்கு அருகே நிற்கவும் தகுதி அற்றவள் என்று தானே என்னைப் பார்த்து ஏளனமாக நகைத்தீர்கள்?

**இலட் :** ஒரு நாளும் இல்லை. நான் இதற்காகச் சிரிக்கவில்லை. நீ சொல்ன காரணமே எனக்கு இப்பொழுதுதான் விளங்குகிறது. அத்துடன் என் சொற்படிதானே அன்னையரைக் கவனிக்க என்று நீ அரண்மனையில் தங்கினுய்? இதில் உன் தவறு ஒன்றும் இல்லையே?

**ஊர் :** போதும், போதும். செய்வதையும் செய்துவிட்டுச் சமாதானம் வேறு வேண்டிக் கிடக்கிறதா?

**இலட் :** நான் சொல்வது உண்மை. நிச்சயமாக நம்பு

**ஊர் :** செய்த தவறை மறைக்க இந்தப் பாடு

**இலட் :** இல்லை ஊர்மிளை! உண்மையாகத் தான் சொல்கிறேன். உன்மீது ஆணை. நான் உன்னை எண்ணிச் சிரிக்கவில்லை. என்னை நம்பு.

**ஊர் :** அப்படியா? (சிறிதுநேரம் சிந்தித்த வண்ணம் நின்று பின் திரும்பி)அப்படியாஞல் வேறு எதற்குச் சிரித்தீர்கள்? காரணத்தைச் சொல்லுங்கள்.

**இலட் :** (சங்கடத்துடன்) வந்து ...

**ஊர் :** உங்கள் மனைவியாகிய என்னிடம் ஏன் மறைக்கிறீர்கள்?

**இலட் :** அதாவது ஊர்மிளை வந்து...

**ஊர் :** உம் வந்து

(அதே சமயம் மந்தரை வந்துகொண்டே)

**மந் :** இலட்சுமணு நீ இங்கா இருக்கிருய்? உன்னை எங்கெல்லாம் தேடுவது?

**இலட் :** என்ன காரியமாக என்னைத் தேடினுய்? (முறைப்புடன் கேட்கிருன்)

**மந் :** உனக்கு இன்னமும் என்மீது உள்ள சினம் மாறவில்லைப் போலிருக்கிறது.

**இலட் :** சரி,சரி,வந்த விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போ.

**மந் :** நான் உங்கள் ஏகாந்தத்தைக் கலைத்துவிட்டேனே?

**இலட் :** (எரிச்சலுடன்) உம், விஷயத்திற்கு வா,

**மந் :** சொல்லத்தானே உன்னைத் தேடி வந்தேன்? உனக்கு என்னதான் என்மீது கோபம் இருந்தாலும் வயதில் மூத்தவளான என்னை இப்படி அவமானப்படுத்தலாமா?

**இலட் :** என்ன சொல்கிருய் நீ? எனக்கு வரும் ஆத்திரத்திற்கு உன்னை என்ன செய்தாலும் தகும். ஆனல் அப்படிச் செய்யவில்லையே என்றுதான் கவலைப்படுகிறேன்.

**மந் :** பார்த்தாயோ ஊர்மிளை உன் கணவனை?

**ஊர் :** அவர் சொல்வது நியாயம்தானே? நீ விஷயத்தைச் சொல்

**மந் :** இராமனைக் காட்டிற்கு அனுப்பிய நான் அவனது முடிசூட்டுவிழாவிலே அவனை வாழ்த்த வந்துவிட்டேன் என்று தானே என்னைப் பார்த்து மகுடாபிஷேக விழாவின்போது சிரித்தாய்?

(ஊர்மிளை ஆச்சரியத்துடன் பார்க்கிருள்)

**இலட் :** (அதிசயத்துடன்) நீ இப்படி நினைத்துக்கொண்டாயா?

**மந் :** ஏன் வேறு எப்படி நினைப்பது?

**இலட் :** இன்னும் யார் யார் எப்படி எப்படி நினைக்கிருர்களோ? என் சிரிப்பு எப்படியெல்லாம் வேடிக்கை காட்டுகிறது?

(சேடிப் பெண் வந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சே. பெண் : பிரபு! தங்களை அழைத்து வரும்படி அரசர் கட்டளையிட்டார்.

இலட் : யார் அண்ணாவா? இதோ வரு கிறேன் என்று சொல் (போகிறான்)

## காட்சி II

(அந்தப்புரத்தில் இராமன் அமர்ந்திருக் கிறான். ஒரு மூலையில் சீதை சோகமாக நிற்கிறாள். இலட்சுமணன் வருகிறான்)

இலட் : வணக்கம் அண்ணா! அழைத்தீர்க ளாமே?

இரா : வா தம்பி! உன்னிடம் ஒரு விடயம் வினவத்தான் அழைத்தேன்

இலட் : அப்படியா? என்ன விடயம், அண்ணா! ஆணையிடுங்கள்.

இரா : ஆணையிடக்கூடிய விடயம் ஒன்றும் இல்லை தம்பி. நேற்று பட்டாபிஷேக விழாவின்போது நீ சிரித்தாயே? அதன் காரணத்தை அறியத்தான்......

இலட் : நீங்களும் ஏதும் தவறாக எண்ணி விட்டீர்களா?

இரா : தவறாக இல்லைத் தம்பி! சரியாகத் தான் நினைத்தேன். மாற்றான் கவர்ந்த பெண்ணை மீட்டு வந்து பட்டம் கட்டி யது தவறுதான். இருந்தாலும் சீதை பாவம். அவள் தான் அறிந்து தவறு செய்யவில்லையே?

இலட் : நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அண்ணா?

இரா: இராவணன் கவர்ந்து சென்ற சீதையை மீட்டுவந்து பட்டம் சூடி அரியாசனத்தில் பக்கத்தே அமர்த்திக் கொண்டதை எண்ணித்தானே சிரித் தாய்?

இலட் : இராமா! இராமா! நான் கனவில் கூட இப்படி நினைத்ததில்லையே! நீங்க ளாக எதையோ கற்பனை பண்ணிக் கொண்டு இருக்கிறீர்கள்.

சீதை : (வந்து கொண்டே சோகமாக) கற் பனை இல்லை இலட்சுமணா? இராவணன் சிறையில் வாடிய நான், அரியாசனத் தில் இராமபிரான் பக்கத்தில் அமர் வதற்கு என்ன தகுதி இருக்கிறது என்று தானே சிரித்தாய்?

இலட் : (காதைப் பொத்தியபடி) அப்படி எல்லாம் சொல்லாதீர்கள் அண்ணி. உங்களையும், அண்ணாவையும் தெய்வ மாகப் போற்றுபவன் நான். அப்படிப் பட்ட நானா உங்களைத் தவறாக நினைப் பேன்? பிழை செய்தவர்களாகக் கருது வேன்?

சீதை : இதில் பிழையோ, தவறோ என்ன இருக்கிறது, தம்பி!

இரா : அப்படித்தானே இலட்சுமணா?

இலட் : நிச்சயமாக இல்லை அண்ணா· அண்ணி நான் இதற்காகச் சிரிக்க வில்லை.

சீதை : எனக்காக மறைக்கிறாய் தம்பி (வருத்தத்துடன் செல்கிறாள்)

இலட் : (உறுதியாக) இல்லை அண்ணி. நீங் கள் இருவரும் இப்படி நினைக்கிறீர்கள். இந்த எண்ணம் என்மனதில் துளிகூட இல்லை. அப்படிச் சொன்னவர்களின் நாக்கைத் துண்டிக்கச் சித்தமாக இருக் கும் நானே இப்படி நினைப்பேனா?

சீதை : அப்போது உன்சிரிப்புக்கு என்ன காரணம்?

இலட் : என் சிரிப்பு வீண் பழியை எனக்கு ஏற்படுத்தி விடும்போல இருக்கிறது. அதற்கு முன் நானே உண்மையைச் சொல்லி விடுகிறேன். கொஞ்சம் பொறுங்கள். யாரங்கே?
(கையைத் தட்டுகிறான். சேடிப் பெண் வருகிறாள். அவளிடம்)

இலட் : நந்தவனத்தில் ஊர்மிளை இருப் பாள். அழைத்து வா.

சே. பெண் : அப்படியே பிரபு. (செல் கிறாள்)

சீதை: சிரித்த காரணத்தைக் கேட்டால் ஊர்மிளாவை அழைத்து வரச் சொல்லு கிறாயே எதற்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலட் :** காரணம் இருக்கிறது அண்ணி! நீங்களும் அண்ணாவும் உங்களை எண்ணி நான் சிரித்தாக நினைக்கிறீர்கள். ஆனால் ஊர்மிளையோ தன்னை நினைத்து அதாவது நான் உங்களுடன் வனத்தில் இருக்கத் தான் பட்டும் பதிசேவை செய்யாமல் அரண்மனையில் சுகமாக இருந்ததை எண்ணிச் சிரித்ததாக நினைக்கிறாள்.

**இரா :** அப்படியா? பாவம் வெகுளிப்பெண். நீ என்ன சொன்னாய், அதற்கு?

**சீதை :** ஊர்மிளையின் மனம் நோக ஏதாவது சொன்னாயா, இலட்சுமணா?

**இலட் :** சிரித்த காரணத்தைக் கேட்டு என்னோடு பெரிய போரே நடத்திவிட்டாள். காரணத்தைச் சொல்ல எண்ணியபோது நீங்கள் அழைத்ததாகச் சேதி வந்தது, வந்துவிட்டேன். அதுதான் அவளையும் அழைத்து அவள் முன்னிலையில் சிரித்த காரணத்தைச் சொன்னால் என் பிரச்சினை தீர்ந்துவிடும். இல்லையா அண்ணா?

**இரா :** சரியான யோசனை தம்பி

**இலட் :** அது மட்டுமில்லை, அண்ணா! மந்தரை தங்களைக் காட்டிற்கு அனுப்பிய தான் மகுடாபிஷேக விழாவின் போது வாழ்த்த வந்துவிட்டதாய் நினைத்து நான் சிரித்ததாகச் சந்தேகிக்கிறாள்.

**சீதை :** அப்படியா?

**இரா :** மந்தரை பாவம் ஆராயமல் செய்த தவறிற்கு வருந்துகிறாள். நீ என்ன சொன்னாய்?

**இலட் :** அவளிடம் சொல்ல என்ன இருக்கிறது? நான் சிரித்த ஒரு சிரிப்பு ஒவ்வொருவர் மனத்திலும் என்னென்ன நினைவுகளை எழுப்பி விட்டது, பார்த்தீர்களா?

(ஊர்மிளை வருகிறாள்) (முறைப்புடன்)

**ஊர்மிளை :** அழைத்தீர்களாமே?

**இரா+சீதை :** வா ஊர்மிளா! தம்பியின் மேல் கொண்ட கோபம் இன்னமும் தீரவில்லைப்போல் இருக்கிறது.

**ஊர்மிளை :** அப்படி ஒன்றும் இல்லை அக்கா!

**இலட் :** வா ஊர்மிளா, என் சிரிப்பின் காரணம் அறிய ஆவலாக இருப்பாய் இல்லையா?

**ஊர் :** (கோபத்துடன் முறைக்கிறாள்)

**இராமன் :** எங்கள் பொறுமையைச் சோதிக்காமல் சீக்கிரம் சொல் தம்பி!

**சீதை :** சொல் தம்பி!

**இலட் :** அதாவது.. அண்ணா! பதினான்கு ஆண்டுகள் நான் உங்களுடன் வனத்தில் இருந்தேன்.

**ஊர் :** இது யாருக்குத்தான் தெரியாது?

**இலட் :** பொறு ஊர்மிளா! இப்படிப் பொறுமை இழக்கலாமா? அந்தப் பதினான்கு ஆண்டுகளிலும் அண்ணாவையும் அண்ணியையும் கண்ணை இமை காப்பது போலக் காத்து வந்தேன்.

**இரா :** உன்னை அறிவேன் தம்பி

**இலட் :** பசி தூக்கம் முதலியவற்றைக்கூட மறந்து உங்களைப் பாதுகாப்பதிலே இன்பம் கண்டேன். ஆனால், நேற்றுப் பட்டாபிஷேக விழாவிலே சடங்குகள் நடக்கும் போது என்னையறியாமலே சிரித்துவிட்டேன். இதுதான் அண்ணா! என் சிரிப்பின் காரணம்.

**ஊர் :** அப்படியா விஷயம்? என்னை மன்னித்து விடுங்கள். ஆராயமல் உங்கள் மனம் நோகக் கண்டபடி பேசிவிட்டேன் தவறு என்னுடையது.

**இரா :** இதுதானா தம்பி விடயம்? நானும் வீணாக எதையெதையோ நினைத்துவிட்டேன். என்னையும் வருத்திச் சீதையையும் மனங் கலங்க வைத்துவிட்டேன்.

**சீதை :** என்னை மன்னித்து விடு இலட்சுமணா! உன்னைத் தவறாக நினைத்துவிட்டேன். ஆனால் அப்படி நீ நினைப்பதிலுந்தான் என்ன தவறு இருக்கிறது.

**இலட் :** விளையாட்டிற்குக் கூட நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது அண்ணி!

**ஊர்மிளை :** நீங்கள் நித்திரையை எண்ணிச் சிரித்தாலும் சிரித்தீர்கள். அது எத்தனை பேர் மனத்தில் எப்படிப் பட்ட எண்ணங்களை எல்லாம் உண்டாக்கி விட்டது பார்த்தீர்களா? பாவம் மந்தரை! அவனிடமும் போய்ச் சொல்ல வேண்டும்.

**இலட் :** இன்னும் யார் யார் தங்கள் தங்களை நினைத்துக் கொண்டு துயரப்படுகிறார்களோ? அப்பொழுது வந்த நித்திரை இப்பொழுது வந்தாலாவது எல்லாவற்றையும் மறந்து தூங்கலாம். அதுவும் வரமாட்டேன் என்கிறதே!

**இரா+சீதை :** நல்ல வேடிக்கை!

(நால்வரும் சிரிக்கிறார்கள்)

**திருமதி தேவராஜமலர் கந்தசாமி**
II ஆம் வருடம் (ஆரம்பக் கல்விப் பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொக்டரும் டிப்புளோமா மனைவியும்!

மெய்ஞ்ஞானம் விஞ்ஞானம் எஞ்ஞான மதிலும்
மனைஞான மன்றோநல் மங்கைக்கே மாண்பு?
செல்வமகள் சமையலிலே "டிப்புளோமா" பெற்றாள்
அப்பப்பா என்னென்ன சமைக்கின்றாள் அவளும்
தந்தை தம்பிராசாவும் தம்பட்டம் அடித்தார்
தரகரான தம்பருமே ஓலையுடன் அலைந்தார்
பிடித்திட்டார் டொனேஷனுடன் டொக்டர் வரனொன்றை
டிப்பிளோமா மனைவியவள் தப்புநிறை சமையல்
அப்பாவி உண்டாரே எந்நாளும் மருந்தாய்
அடுப்பதனில் ஏற்றிடுவாள் அலுமினியச் சட்டி
பக்கமதில் வைத்திடுவாள் சமையற் கலைநூலை
கோழிக்கறி சமைத்திட்டால் சட்டிகரி ஆகும்
வட்டிலப்பம் செய்தாலோ ஒட்டிடுமே சட்டி
பொரியலுடன் புத்தகமும் எரிந்து புகையாகும்
கட்டுலெட்டுச் செய்திடவே கட்டைவிரல் போச்சு
டொக்டரவர் விழித்துநின்றார் டிப்பிளோமா இதுவோ?
"என்மருந்தின் திறனதனை அறியவந்த கலையோ?"
மன்றாடிக் கேட்டிட்டார் "மனையாளே மானே!
என்பாட்டி என் அன்னை சமைத்தார்கள் சுவையாய்,
அம்மா சுட்ட தோசையது தின்னத்தின்ன ஆசை
என்றுநாம் பாடியுமே உண்டநாளும் உண்டே
அந்தநாள் என்றென்று வந்திடுமோ பெண்ணே!
டிப்பிளோமா ஓலையினை எரித்திடுவாய் கண்ணே!
முன்னையோர் முறையாகச் சமைத்திடுவாய் அன்பே!
அல்லலின்றி அறுசுவையைச் சுவைத்திடவே நன்றாய்
வயிறார உண்ணுதற்கு காத்திருக்கின்றேனே!"
சுடுவதுபோல் ஒருபார்வை டொக்டரையே பர்த்தாள்
"சுடுமென்றீர் டிப்புளோமா ஓலையதை நீரும்
புதியமுறைச் சமையலது பிடியாது என்றீர்
உங்களது மருந்துகள்தான் திறமான மருந்தோ?
ஒருவரேனும் உம்மருந்தால் குணமானதுண்டோ!
வெட்டிவிட்ட கைவிரலின் புண்ணுக்கே மருந்து,
கட்டி விடச் சரியாகத் தெரியாத டொக்டர்
பரியாரி போலநீர் பழமையினைப் பிடியும்"
எரிபோல விழுந்திட்டாள் டொக்டருமே விழித்தார்
எடிகண்ணே! கண்மணியே! கரும்பினது சுவையே!
பகிடிக்குச் சொன்னேன்நான் பதறாதே உந்தன்
பக்குவமாம் சமையலுண்டு பருத்துவிட்டேன் நானும்
இனிமேல் நான் ஒருபோதும் குறைசொல்லேன் உணவை,
அஞ்சுகமே நானுந்தான் அரைகுறையாய் பயின்றேன்
அதை நீயும் வெளியார்க்குச் சொல்லாதே இனிமேல்
சமாதானம் நிலவியது சண்டையில்லை வீட்டில்
சுவையிதுதான், சுவையிதுதான் சுந்தரியே என்றார்

**செல்வி வசுமதி சின்னத்துரை**
*1 ஆம் வருடம் (மனையியற்பிரிவு)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மணத்துடன் மனையலங்காரம்

இந்த உலகத்திலே காணப்படும் ஒவ்வொரு காட்சியிலும், கேட்கும் ஒவ்வொரு ஓசையிலும், உணர்விலும் நாம் எதைக் காணத் துடிக்கிறோம்? அழகைத்தான். அழகு கவலையை ஓரளவு மறக்க உதவும். ஆன்ம ஈடேற்ற முயற்சியிலும் மனம் தேடி விரும்புவது தெய்வீக அழகுதான். இவ்வழகினை ஓரளவு செயற்கையாகவும் ஏற்படுத்தலாம். இவ்வாறு செய்வதனையே அலங்காரம் என்கிறோம். அலங்காரம் ஒரு கலை. அதுவும் மிதமாக எளிமையும் அழகும் மிளிர அலங்கரிப்பது தனிக்கலை. அந்தகைய அலங்காரத்திலும் ஆடம்பரம் தென்படாமல் இருக்குமாயின் அதுவே ஒப்பற்ற அலங்காரக் கலையாகும்.

எமது இல்லங்களுக்குத் தேவைப்படுவது இத்தகைய அலங்காரந்தான். சிறிது கலாரசனை இருந்துவிட்டால்போதும் செய்யும் அலங்காரங்கள் கலையம்சத்துடன் மிளிரும். இத்தனையும் ஓர் இல்லத்தலைவியின் கையிலே தங்கியுள்ளது.

**மனையலங்காரம்:-**

வரவேற்பு அறையிலிருந்து சமையல் அறைவரை அலங்காரம் செய்யலாம். பட்டுப் பீதாம்பரங்கள் முதல் சாதாரண சீத்தைத் துணிகளாலும் யன்னல் கதவுகளுக்குத் திரை போடலாம்.

சாதாரண சீமெந்துத் தரையைக் கூட பளபளப்பாக வைத்துக்கொள்ளலாம். அதற்குப் பளிங்குத் திரைதான் வேண்டுமென்றில்லை.

சாப்பாட்டு அறையின் தூய்மையையும், எழிலையும் பார்த்த நோக்கிலேயே அங்கிருந்து உணவு உட்கொள்ள வேண்டுமென்ற ஆவலைத் தூண்டும் வகையில் அதை வைத்துக் கொள்ளலாம்.

**சிக்கனத்துடன் சிறப்பலங்காரம்:**

காலம் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. கருத்தும் ஒன்றாக இருப்பதில்லை. காலமும், கருத்தும் எப்போதும் மாறிக் கொண்டே இருக்கின்றன. சுவர்கள் வெள்ளையாகவும், இளமஞ்சள் நிறத்துடனும், இருப்பதுதான் சில ஆண்டுகளுக்கு முன்னர் அழகென்று கருதப்பட்டு வந்தது. ஆனால் இன்று வர்ணப் பூச்சுக்களே கூடிய அழகைக் கொடுக்கின்றன என்ற கருத்து ஏற்பட்டு விட்டது. எல்லா வீடுகளிலும் விதம் விதமான வர்ணப் பூச்சுக்கள்.

வீட்டிற்கு அபரிதமாகச் செலவிடவோ, மூளையை அதிகமாகக் குழப்பிக் கொள்ளவோ வேண்டிய அவசியமே இல்லை. சிக்கனமாகச் சிறப்பான அலங்காரம் செய்தால் வீடு கலைக் கூடமாகத் திகழும். கொண்டாட்ட வைபவங்கள் நெருங்குகின்றதென்றால் ஒவ்வொரு இல்லத்திலும் வேலைகள் குறைவின்றி இருக்கும். கூரையிலிருந்து, சுவர்கள், தரை உட்படச் செப்பனிடப்படும். சுவர்களுக்கு வெள்ளையடித்தல், வர்ணப் பூச்சு வேலைகள் நாட்கணக்கில் கச்சிதமாக நடக்கும்.

**பரவச மூட்டும் பல நிறங்கள்;**

பல நிறங்கள் கலந்தும். இருவர்ணங்கள் சேர்த்தும் அல்லது தனி ஒரு நிறத்திலும், அவரவர் மனவிருப்பத்திற்கும், அழகுணர்ச்சிக்கும், கலையுணர்விற்கும் ஏற்றவாறு வீட்டுச் சுவர்களுக்கு நிறங்கள் பூசப்படுகின்றன. ஆனால் எப்போதும் இருப்பிடமாகிய இல்லம் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய சூழ்நிலையுடன் விளங்க வேண்டும். கண்ணைப் பறிக்கும் நிறங்களையும், கடும் நிறங்களையும், தவிர்த்தல் நன்று.

இளம் பச்சை நிறம் கண்ணிற்கு மிகவும் குளிர்ச்சியானது. அமைதியான மனோ நிலையைக் கொடுக்கும். இளம் ரோஜா, இளம் நீல நிறங்களும், கவர்ச்சியைக் கொடுக்கும். சுவர்களுக்கு வர்ணங்களைத் தெரிவு செய்யும் போது எப்போதும் இப்படியான மெல்லிய நிறங்களைத் தேர்ந்தெடுப்பது நன்று.

**மாதர் மனம் வைத்தால் மனோரம்மியமாகும்:-**

உள்ளே வீடுகளை அலங்கரிக்கும் கதவு, யன்னல். திரைச் சீலைகளையும் சுவரின் வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணத்திற்குப் பொருந்தும். வகையில் தேர்ந்தெடுப்பது அறைகளை மேலும் அழகுபடுத்தும். அழகான கவர்ச்சியான பற்றிக் துணிகள் திரைச் சீலைகளுக்கென்று விற்கப்படுகின்றன.

விரும்பிய நிறத்தில் நல்ல டிசைனைப் பார்த்து வாங்கிக் கொள்ளலாம். கைத்தறித் துணிகளும் இதற்கென்று விற்கப்படுகின்றன. உள்ளூரில் உற்பத்தியாகும் இவற்றின் விலை சற்று அதிகம் என்றாலும் நீடித்து உழைக்கக் கூடியவை. அழகாகவும் இருக்கும். இவற்றை விட லேஸ் துணிகள் திரைகளை, அலங்கரிப்பதற்கு உகந்தவை. தையற்கலை, பின்னல் வேலை தெரிந்தவர்களென்றால் இவற்றிற்கு அவசியமில்லை.

அச்சடிக்காத தனி நிறத்தில் துணிவாங்கித் தமது கைத்திறனை அதில் பதித்து அழகாகத் தொங்கவிடலாம். நீண்ட திரையின் நடுவே நீளமான கொடி வேலைப்பாடு செய்தால் மிக அழகாக இருக்கும்.

**வரவேற்பறை:-**

வரவேற்பறையில் தளபாடங்கள் எவ்வளவு குறைவாக இருக்கின்றனவோ அவ்வளவிற்கு எளிமையும், சுத்தமும் நிலவும். அத்தியாவசியப் பொருட்களும், ஒன்றிரண்டு அலங்காரப் பொருட்களும் இருந்தால் போதுமானது. அளவுக்கு அதிகமாகத் தளபாடங்களைப் போட்டு நிரப்பினால் அழகாக இருக்கமாட்டாது.

சுவர்களில் படங்கள் அதிகம் தொங்கவிடுவது அழகு என்ற கருத்துமாறி இப்போது அநாகரிகம் என்று கருதப்படுகிறது. பரந்த சுவராக இருப்பின் ஓரிரு இயற்கைக் காட்சிப் படங்களை அல்லது பறவைகள் போன்ற பொம்மைப் பொருட்களை மாட்டிவிடலாம்.

பொழுது போக்கிற்குப் படிக்கக் கூடிய சஞ்சிகைகள் பத்திரிகைகள் வைக்கக் கூடிய பதிவான சிறுமேசை ஒன்றையும் கூடத்தில் வைக்கலாம்.

**தரையழகு, தனியழகு:-**

தரையை எப்போதும் பளபளப்பாக வைத்திருப்பது வீட்டுக்குத் தனிச்சோபையைக் கொடுக்கும். சிவப்பு நிறத்தரையை அடிக்கடி பொலிஷ் போட்டுத் தேய்த்துக் கொள்ளல் வேண்டும். சாதாரண சீமேந்துத் தரையையும் வளுவளுப்பாகவும், அழுக்கின்றியும் வைத்துக்கொள்ள முடியும். இது இல்லத்தரசிகளின் திறமையில் தங்கியிருக்கின்றது. பாலைப்பிழிந்து எடுத்த பின்பு தேவையற்றதென்று கொட்டப்படும் தேங்காய்ப் பூவினால் தேய்த்தால் சாதாரண சீமெந்துத் தரையும் மினுமினுப்பாகக் காட்சியளிக்கும். இத்தகைய முறையினால் அழகு பெற்ற வரவேற்பறையில் மேசைமீது பூச்சாடி ஒன்றை வைத்து அன்று மலர்ந்த இயற்கை மலர்களை அழகாக ஒழுங்குபடுத்தி வைத்தால் அதோடு அலங்காரம் பூர்த்தியாகும்.

**சயன அறை :-**

உணவும், படுக்கையும் ஒரு மனிதனுக்குப் புனிதமாகவும், மனதுக்குப் பிடித்ததாகவும் இருந்தால் அது அவன் செய்த பாக்கியம் என்றுதான் கூறவேண்டும். இவை இரண்டும் சுத்தமாகவும், மனதிற்குகந்ததாகவும் இருக்க வேண்டும்.

படுக்கையறையில் கட்டில், ஒரு மேசை, அந்த மேசையில் ஒரு விளக்கும் வைக்க வேண்டும். படுக்கை அறை மனதிற்கு அமைதியைக் கொடுக்கும் சூழ் நிலையில் அமைய வேண்டும்.

சுவரில் ஒன்று அல்லது இரண்டு இயற்கைக் காட்சிப் படங்களையோ, அல்லது முன்மாதிரியாகத் திகழ்ந்த பெரியாரின் படங்களையோ அழகிய குழந்தைகளின் படங்களையோ தொங்க விடலாம்.


**போசன அறையின் புனிதம் :-**

போசனம் செய்யும் இடமும் சுத்தத்திற்கு முதலிடம் அளிக்கப்படல் வேண்டும். சாப்பாட்டு மேசையின் நடுவே அவசியமானால் பூச்சாடி ஒன்றை வைக்கலாம். ஆனால் அப் பூச்சாடியோ, அல்லது பூக்களோ உயர்ந்திருக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உணவு அருந்தும்போது ஒருவர் முகத்தை ஒருவர் நோக்க மலர்த் தண்டுகள் தடையாய் இருக்கக் கூடாது. எப்போதும் பதிவான சாடியும் மிகச்சிறு தண்டுடன் அமைந்த பூக்களும் வைப்பது நன்று. உணவு அருந்தும் அறையில் மனதிற்குப் பிடிக்காத பொருட்களையோ அருவருப்பூட்டத்தக்க பொருட்களையோ வைக்காமல் அகற்றிவிட வேண்டும்.

இத்தகைய முறைகளில் மனையை அலங்கரிக்க எந்த இல்லத்தரசியும் மனம் வைத்தால் முடியும். ஆடம்பர அலங்காரங்களில் மனத்தை அலையவிட்டு அளவுக்கு மீறி இவற்றில் பணத்தைச் செலவழிக்கத் தேவையில்லை, எளிமையான அலங்காரத்துடன் வறுமையான குடும்பங்களும் பெருமையுடன் வாழலாம். மாதர்கள் மனம் வைத்தால் மனைகளெல்லாம் கலையலங்காரத்துடன் விளங்கும்.

**சந்திரலேகா ஜெகதீசன்**
(மனையியல் 2ஆம் வருடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்தமிழ் விழாவின் முதன்மை நிகழ்ச்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன விஞ்ஞான யுகத்தில் சிறப்பான வாழ்க்கைத் தரத்தைத் தேடி.......

வாழ்க்கைத்தரமானது ஒரு தனி மனிதனுக்கு வெளித்தோற்றதுடன் சம்பந்தப்பட்ட, மனதைச் சார்ந்த, நடத்தையுடன் தொடர்பான, ஆத்ம சம்பந்தமான தன்மைகளைப் பொறுத்தது. ஆனால் ஒரு சமூகத்தை எடுத்துக் கொண்டால் வாழ்க்கையின் தரமானது பொருளாதாரப் பாதுகாப்பு, அரசியல் நேர்மை, சமூக நீதி, சுற்றுடற் சௌகரியங்கள், சமாதானம், கலாச்சார வளம் என்பவற்றினுலும், அவற்றிற்கிடையேயுள்ள தாக்கத்தாலும் நிருணயிக்கப் படுகின்றது. மனித சமுதாயத்தின் வரலாற்றை எடுத்து நோக்கினுல், ஒரு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அமைப்பதற்கு நீண்ட சுவடுகளை எடுத்து வைத்திருப்பது புலப்படுகின்றது. இந்தப் பிரமாண்டமான, சிறப்பான பெறுபேறுகள் பிற்காலத்தில் பல புதியனவும் துரதிர்ஷ்டம் நிறைந்தனவுமான நிகழ்ச்சிகளினுல் தடைப் படுத்தப்பட்டும் அழுக்கப்பட்டும் விட்டன, இவ்வகையான வேண்டப்படாத நிகழ்ச்சிகளில் சில, போர்கள், கருத்து வேற்றுமைகள் பலாத்காரம், கொலைகள், வறுமை, ஊழல், அமைதியின்மை, வேலையில்லாப் பிரச்சினை என்பனவாம். அரசியல், பொருளாதார, சமூக ஒழுங்குகளின் அத்திவாரமே நிலைகுலைந்த நிலையில் உள்ளது.

பொருளாதார திருப்தியை மட்டும் நாடாது மனித சமுதாய நலனைக் கருத்தில் கொண்ட முன்னேற்றத்தையே சரியான விருத்தியாகக் கொள்ளலாம். இவை இரண்டும் சில வேளைகளில் ஒன்ருகவே இருக்கலாம். ஆனுல் பல சமயங்களில் இவை முற்ருக வேறுபட்டவை. மனிதர்க்குப் போதிய உறைவிடம், உடுப்பு, உணவு, ஆரோக்கியம், கல்வி என்பன அவசியம். ஆனுல் இவற்றிற்காக நாம் காற்று, நீர் போன்றவைகளை அசுத்தமாக்கவோ, கலாச்சார பாரம்பரியத்தை இழக்கவோ, சமூக ஒருமைப்பாட்டைக் குலைக்கவோ, சுகாதாரத்தைச் சீரழிக்கவோ செய்வது ஒரு போதும் வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதாகாது. ஐக்கிய நாடுகள் சாசனம் உயர்ந்த வாழ்க்கை நிலையைக் குறிக்கவில்லை. மாருக அது சிறந்த வாழ்க்கைத் தரத்தையே வலியுறுத்துகின்றது. தனித்த பொருளாதார முன்னேற்றம் ஒரு தனி மனிதனுக்கோ, சமூகத்திற்கோ ஒருபோதும் சிறந்த வாழ்வைக் கொடுத்து விடாது. பைபிளில் குறிப்பிட்டிருப்பதுபோல், "ரொட்டித் துண்டு மட்டும் மனிதனை வாழவைக்க போதுமானது அல்ல."

தற்காலத் தொழில் நுட்ப விருத்தி சாதாரண மனிதனின் முன்னேற்றத்தைக் குறிக்கின்றதா? இந்த விருத்தி தேவைகளையும், பட்டினியையும் அழிக்கக் கூடும். ஆனுல் இதன் மற்றைய விளைவுகள்தாம் என்ன? இத்தகைய நவீன தொழில் நுட்ப விருத்தியைக் கொண்டு உலகின் குழப்பநிலை, வறுமை, மனித நடத்தை தளர்ச்சி (Moral laxity), இன ரீதியான கருத்து வேற்றுமைகள், உள்நாட்டுக் கலவரங்கள் போன்றவற்றைக் கட்டுப் படுத்துவது கடினம். விஞ்ஞானிகளும், பொறியியலாளரும் தொழில் நுட்பத்தை மட்டும் வளர்ப்பவர்களாக இருந்தால் போதாது. மனிதப் பிரச்சினைகளை விடுவிக்கக் கூடியதான தொழில் நுட்ப விற்பன்னர்களாக அமைய வேண்டும். நவீன விஞ்ஞான விருத்தியும், பொருளாதார முன்னேற்றமும் சேர்ந்து மனித கௌரவம், ஒற்றுமை, நேர்மை போன்றவற்றிற்குரிய மதிப்பைப் பெரிதும் பாதித்து விட்டன.

விரைவான தொழில் மயமாக்கலினுல் மனித வர்க்கத்திற்கு உண்டாகும் நீண்டநாள் விளைவுகளை ஆராய்ந்த பிரித்தானிய, அமெரிக்க விஞ்ஞானிகள் 1972-ம் ஆண்டு தனித்தனியாக வெளியிட்ட இரு அறிக்கைகள் அதிர்ச்சி தரும் தகவல்களை வெளியிட்டன. இவ்வறிக்கைகளில் ஒன்று அமெரிக்காவில் வெளியிடப்பட்ட, "வளர்ச்சியின் எல்லைகள்" (Limits of growth), என்பது. மற்றது, பிரித்தானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யரின் ''தப்பியிருப்பதற்குரிய நீலப்பிரதி'' (Blue print for Surrival) என்பது. இவை யிரண்டும் கூறிய கருத்து ஒன்றே. கட்டுப் படுத்தப்படாத பொருளாதார, சனத் தொகை வளர்ச்சிகள் இரண்டாயிரத்து நூறு ஆண்டின் முன்னதாகவே கட்டுப் படுத்த முடியாத திடீர் வீழ்ச்சியை அடை யும் என்பதையே இவை காட்டின. இவற்று டன் பிணைந்த காணிகளிற் சில, சனத் தொகைப்பெருக்கம், உணவுப் பற்றுக்குறை, இயற்கை மூலப்பொருட்களின் குறைபாடு, தொழில் கொள்ளளவுகளின் மந்தநிலை, இயற்கையை மாசுபடுத்தல் என்பன.

பேராசிரியர் சார்ள்ஸ் க்யோவின் (ProfessorCharles H. C. Kgo, Wisconsin Univer-sity) பிரசித்தி பெற்ற, ''நாளையின் சவால்'' (The Challenge of Tomorrow) என்றும் அறிக்கையில் குறிப்பிட்ட சில தக வல்களை இங்கு தருவது மிகப் பொருத்தம்.

''துரதிர்ஷ்டவசமாக, மனித சந் தோஷம், சமூக ஒற்றுமை போன்றவை வளரும் சொத்து, வருவாய், நவீன வசதிகள் போன்றவற்றுடன் ஒத்துப் போவதேயில்லை.''

விஞ்ஞான, தொழில் நுட்ப விருத்திக்குப் பெயர் போன அமெரிக்கா, உலகின் ஏறக் குறைய 50% இயற்கை மூலப் பொருட்களை, உலகின் 6% சனத்தொகைக்கு மட்டுமே பயன்படுத்துகின்றது. இதே விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி வேறோர் அமெரிக் காவைச் சிருஷ்டித்து விட்டால் மிகுதி 88% சனத்தொகையினரின் கதி அதோ கதிதான். எல்லோரும் போற்றி வளர்க்கும் இன்றைய தொழில் நுட்பம் உண்மையிலேயே வசதி யுள்ள சிலரது, பொருளாதார சமூகத்தில் அவர்களது, நிலையை ஓரளவு உயர்த்தித் தான் விடுகின்றது, இந்த குறிப்பிட்ட தொகையினர் போதிய அளவு உணவில் மிதக்கிறார்கள். நினைத்த நேரத்தில் பல்லா யிரம் மைல்களை ஒலியிலும் பார்க்கவும், வேக மாகக் கடக்கிறார்கள். வேறு பலரோ ஓரடிகூட நடக்க திராணியற்றுப் பசியால் வாடுகிறார் கள். முன்னவர்களை பின்னவரின் மூலப் பொருட்களையும் ஆக்கிரமிக்கின்றனர். இதில் எது நியாயம், நீதி? இத்தகையவர்கள் தமது வாழ்வின் பொருள் நிலையை முன்னேற்றி னாலும் உண்மையிலே தமது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவில்லை, என்றே சொல் லலாம். மற்றவர்களின் தரத்தையும் குட்டிச் சுவராக்குவது எவ்வகையில் நீதி ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் மொத்தத் தேசிய வருமானத்தைக் கொண்டு அளவிடமுடியாத ஒன்று, ஆனால் இன்றும் ஏறக்குறைய எல்லா நாடுகளும் இத்தகைய ஒரு பொருளாதாரக் குறியைக் கொண்டு இயங்கித் தமது சுற்று டலைக் கொன்று விடுகின்றன. வளரும் நாடு கள் பசி, பட்டினியால் வாட, விஞ்ஞான வளர்ச்சியை அநுபவித்த நாடுகளோ தமது உடல்நிறையை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதில் பல} கோடி டலர்களை அழிக் கின்றன!

மேலும், தொழில் விருத்தி, விஞ்ஞான வளர்ச்சி போன்றவற்றால் சமூகங்கள் அடைந் திருக்கும் கலாச்சார, வீழ்ச்சியை அதுவும் மனிதனிற்கே உரிய வாழ்க்கைத் தரத்தைச் சமநிலைப் படுத்தவல்ல, மிருகங்கட்கு இல் லாத கலாச்சாரத்தின் வீழ்ச்சியைப் பூரண மாக ஆராய்ந்தால், இன்றைய விஞ்ஞான உயர்ச்சியின் தற்போதைய விளைவு 'ஓரடி ஏற ஈரடி சறுக்கல்'' என்பது புலப்படும். கீழைத் தேசங்கள் மேற்கிலிருந்து பலவற் றைப் படித்துவிட்டன. இவையும் மேற்கைப் பின்பற்றியே முன்னேறப் போகின்றன. என்பதில் சந்தேகமில்லை. எமது கீழத்தேய தத்துவமும், பரம்பரையான பழக்கங்களில் ஒரு சமநிலையான உயர் வாழ்க்கையையே அறி வுறுத்துவன. வெளிப்படையான முன்னேற் றத்துடன், உள்ளார்ந்த ஆத்ம விருத்தியை யும் இவை கொண்டுள்ளன. சுருக்கமாய்க் கூறின் மேற்கத்திய நவீன மயத்தையும், கிழக்கத்திய பின்னனியையும் இணைத்த மைக்கும் ஒரு உயர்தரமான வாழ்க்கைத் தரத்தை, ஒரு சந்தோஷமான, இலகுவான வாழ்க்கை முறையைச் சகல மனித இனத் திற்கும் உண்டாக்க முடியுமோ என்பதை உடனடியாக ஆராய்வது அவசியம்.

மகாத்மா காந்தி ஒரு சமயம் தமது மக்களிற்கு பின்வரும் அறிவுரையைக் கூறி னார். ''உங்கள் அபிலாசைகளைக் குறைத் துத் தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்'' எளிய வாழ்க்கை முறையும், மூலப் பொருட்களின் சாதனங்களைப் பாதுகாத் தலும் மனிதனின் உண்மை வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முடியும். எதுவாயி னும் நாம் ஒரு புதுவகையான கொள் கையை வாழ்க்கை சமூகம் என்பவற்றில் கொண்டு ஒரு நவீன முன்னேற்றத்தைக் கண்டு பிடிப்பது மிகச் சுலபமும் அவசிய முமாகும். இவ்வகை முன்னேற்றத்தால் பின்பு ஒருநாள் நாம் சமானத்தை நிலை நாட்ட நியூத்திரன் குண்டுகளைப் பயன் செய்து மனித உரிமைகளை மீறிவிட்டோமா என சஞ்சலப்படும் நிலைக்குத் தள்ளப் படமாட்டேம்.

செல்வி புஷ்பராணி இராசையா
II ஆம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வகை நடனங்கள்

## ஆடற்கலை

ஆய கலைகளாம் அறுபத்துநான்கில் எதனை எடுத்துக்கொண்டாலும் அது ஏதோ வகையில் இறை வழிபாட்டுடன் தொடர்புடையதாகவே அமைகிறது. மாலை தொடுத்தல் ஒரு கலை. அக்கலையின் பயனுகிய மாலைகள் இறைவனுக்குச் சூட்டப்படுவதனுலே அக்கலை தெய்வமாகிறது. அது போன்று ஆடற்கலையாலும், பாடற்கலையாலும் இறைவனை வணங்குதலும் அமையும். கலைகள் மனிதனுற் படைக்கப்படுவன. "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்பது போல மனிதனது உன்னத நோக்குகளாலும், படைப்புத் திறனாலும் அப்படைப்புக்கள் தெய்வீகமடைகின்றன. மானிட அன்பு கடவுள் அன்பாகும் தத்துவம் இந்திய மெய்யியல் ஞானத்தின் பிரிக்க முடியாத பண்பாகும். கலைகள் மக்களுக்குச் சுவையுணர்வுகளை ஊட்டவல்லன. இன்றைய கால கட்டத்திலே தமிழர் சமூகத்தில் வளர்ச்சியடைந்து வரும் பண்டைக் கலைகளென இலக்கியக்கலை, நாடகக்கலை, நாட்டியக்கலை, இசைக்கலை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இசை, நடனம், சித்திரம் போன்ற நுண் கலைகளுள் நடனக்கலையே மிகச் சிறந்தது எனலாம். ஏனெனில் எல்லா நுண் கலைகளிலும் உள்ள சிறப்பு அம்சங்கள் இந்த ஒரு கலையில் முற்றுக அடங்கிவிடுகின்றன. பாரத நாட்டின் பண்டைப் பழங்கலை நடனம். உலகத்தில் பண்டைக் காலந் தொட்டு இயல்பாய்த் தோன்றிச் சிறந்ததே இக்கலை. இஃது உள்ளத்திற்குக் களிப்பையும் உடலுக்கு வலுவையும் தந்து மக்களுடைய பண்பாட்டை அறியத் துணை நிற்கின்றது. நாட்டு மக்களின் ஒருமைப்பாட்டுணர்விற்கு ஆடற்கலையும் துணையாகும் என்று அறிஞர்கள் இயம்புகின்றனர். வாழ்க்கையிலிருந்து உருவாகி அமைக்கப்பட்டவையே ஆடற்கலை எனக் கூறிவிடலாம். இதனுல்தான் மக்களால் சிறப்பாக வழிபடப்படும் தெய்வங்களும் ஆடற்கலையுடன் தொடர்பு கொண்டுள்ளன போலும். தெய்வ வழிபாட்டிலும், சமுதாய வாழ்க்கையிலும் கலந்து இன்பமும், ஊக்கமும் அளித்து வரும் அருங்கலை அது. நாட்டுக்கு நாடு வேறுபட்டு நடனங்களிற் சில இன்று வளர்ச்சியடைந்து வருகின்றன. அவற்றிற் சிலவற்றை ஆராய்வோம்.

1. பரதநாட்டியம்
2. குச்சுப்புடி
3. கதகளி
4. மணிபுரி
5. கதக்

## பரத நாட்டியம்

முதன் முதலில் பரதநாட்டியம் ஆடியவர் சிவபெருமானேயாவர். சிவபெருமானுடன் சேர்ந்து பார்வதி தேவியும் ஆடினுர். முற்காலத்தில் தமிழகத்தில் இக்கலையைக் 'கூத்து' என்று அழைத்துவந்தனர். ஏறத்தாழக் கடந்த இரண்டு நூற்றுண்டுக்காலமாக இச் 'சதுர்க்கலை' என்றும் 'சின்ன மேளம்' என்றும் வழங்கலாயிற்று. 'பரதநாட்டியம்' என்ற பெயர் சுமார் முப்பது ஆண்டுகளாகப் பிரசித்தம் அடைந்துள்ளது. அன்றைக் காலம் கோயில்களில் மூலஸ்தானத்தின் எதிரே பெண்மணிகள் நாட்டியம் செய்து வந்தனர். இப்பெண்கள் 'தேவதாஸிப் பெண்கள்' என அழைக்கப்பட்டு வந்தனர். நாட்டியம் அன்றைய காலத்தில் புகழ்பெற்றிருந்தது என்பதை நமது புராதன கோயில்கள் எல்லாவற்றிலும் கட்டப்பட்டுள்ள நாட்டிய மண்டபங்களைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். சிலப்பதிகாரம் மாதவியின் நடனச் சிறப்பை அழகுற வருணிக்கிறது. உருத்திர கணிகையர் சிறப்பாக அந்தக் கலையைப் பாதுகாத்து வந்தனர். பிற்காலத்தில் அதனைப் புறக்கணித்துவந்தனர். நல்லவேளையாக வக்கீலாக இருந்த திரு. ஈ. கிருஷ்ணையர் போன்ற சில பெரியவர்களின் நன்முயற்சியால் மீண்டும் இப் பரதக்கலை புது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ச்சி பெற்றுப் பரத நாட்டியமாக வளர லாயிற்று. இப்போது பாரதநாட்டில் மட்டு மன்றி நம் நாடாகிய இலங்கையிலும் இக் கலையின் மேம்பாடு உணரப்பட்டு வருகிறது.

இன்று எத்தனையோபேர் 'பாரதம்' என்ற நாட்டின் பெயரையும், 'பரதநாட்டியம்' என்ற சொல்லையும் சேர்த்துக் குழப்புகிறார் கள். பரதநாட்டியம் என்ற பெயர் இரு காரணங்களால் வந்திருக்கிறது. இந் நாட்டி யத்தைப் பற்றிய முதல் நூலை எழுதிய வர் மகரிஷியான பரதமுனிவர். அவர் பெய ரால் இந்நாட்டியம் வழங்குவது சரியே யல்லவா? ''பாவம்'', ராகம், தாளம் இவை மூன்றும் நாட்டியத்திற்கு அடிப் படையானவை. இவற்றில் முதல் எழுத்துக் கள் முறையே ப, ர, த என அமைந்திருக் கின்றன. இதனால் 'பரதநாட்டியம்' என வழங்கப்பட்டு வருவது மிகப் பொருத்த மானதே: பரதநாட்டியம் என்பது லாகவ நாஸூக்குடன், நுட்பமான கருத்துக்களை யும், உள்ளெழுச்சிகளையும், விளக்கும் பிர பலமான அழகுச் சமிக்ஞைக் கலையாகும்.

பரத நாட்டியத்தை மூன்றுவகை களாகப் பிரிக்கலாம்.

1. நிருத்தம்
2. நிருத்தியம்
3. நாட்டியம்

'நிருத்தம்' என்பது கலப்பற்ற சுத்த நடன வகை. அழகுக்கும், அலங்காரத்திற்கு மாக உண்டாக்கும் அங்க அசைவுகளைக் கொண்டதாகும். பார்த்திருப்போருக்கு எத் தகைய கருத்தினையோ உணர்த்தும் வகை யில் இங்கு அபிநயிப்பதில்லை. 'நிருத்திய நடனம்' கருத்துச் செறிவுள்ளது. ஒரு கருத் தின் இயல்பினையோ அதன் முக்கியத்துவத் தினையோ உணர்த்தும் பொருட்டு ஆடப்படு வதாகும். முகபாவங்களாலும், முறைக் கிரமமான கை அசைவுகளாலும் கூறும் கருத் தினை உணர்த்துவது இதன் சிறப்பம்சம். மூன்றாவது நடன வகையான நாட்டியத்தி லேயும் முகபாவங்கள், ஹஸ்தங்கள், முத்தி ரைகளால் கருத்தை உணர்த்துவர். (எல்லா வகை நடனத்திற்கும் இம்மூன்றும் அமை யும்) பரத நாட்டியத்திலே நிருத்தம், நிருத் தியம். இரண்டும் முக்கிய இடம் பெறுகின் றன, நாட்டிய உருப்படிகளான அலாரிப்பு, ஜதிஸ்வரம் தில்லாளு ஆகியன நிருத்த வகைக்கு உதாரணங்களாகும். பதம் சுலோகம் சுப்தம், ஜாவளி என்பன நிருத்திய நடனத் துறையைச் சேர்ந்தவை. வர்ணம் நிருத்த- நிருத்திய இருதுறைக்கும் பொதுவானதே. சிருங்காரம் (சந்தோஷம்), பீபத்ஸம் (வெறுப்பு), பயானகம் (பயம்), ஹாச்சர்ய (ஆச்சர்யம்), ஹாஸ்யம் (நகைச்சுவை), வீர (வீரம்), கோபம்(கோபம்) சாந்தம் (சாந்தம்), கருணு (கருணை), இவ்வொன்பது உணர்ச்சி களையும் நமது அன்றாட வாழ்க்கையில் பிர திபலிக்கக் காண்கிறோம். இவைமூலம் முகத் தின் பிரதிபலிப்பால் கருத்தைப் புலப்படுத் துதல் பரதநாட்டியத்தில் இடம்பெறு கிறது. பரதநாட்டியம் — கால் அசைவுகள், முகபாவங்கள், அபிநயத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கின்றன.

அடுத்து 108 கரணங்களும் இங்கு முக் கிய இடம் வகிக்கின்றன. கோயிற் சிற்பங்க ளில் இவைஎடுத்துக்காட்டாக அமைகின்றன.

தமிழ்நாட்டில் புகழ்பெற்ற நாட்டிய ஆசிரியர்களான வழுவூர் திரு. இராமையா பிள்ளை, திருமதி ருக்மிணிதேவி, திரு. லஷ்மண் போன்றவர்களால் இப்பிரதேசக்கலை புனி தம் கலையாது காக்கப்பட்டு வருகிறது. பர தக் கலையில் வல்லவர்களான திருமதி கமலா, குமாரி பத்மா, திருமதி பாலசரஸ்வதி போன்றவர்கள் பரத நாட்டியத்தின் பெருமையை உலகமே கண்டுகளிக்கும்படி செய்து வருகின்றார்கள்.

''பரதநாட்டியம் குடும்பப் பெண்கள் ஆடத்தக்கதன்று'' என்ற தவறான எண் ணத்தைமாற்றித் தனக்குரிய உயரிய நிலையை அது பெறும்படி செய்த பெருமை திருமதி ருக்மிணி தேவியையே சாரும்.

சிலகாலங்களுக்கு முன்பு நம் நாட்டிலும் இக் கலை பற்றித் தப்பபிப்பிராயமே நிலவி யிருந்தது. ஆனால் இன்று உன்னத நிலையை அடைந்துள்ளது.

## குச்சுப்புடி

'பரதம்' போன்று 'குச்சுப்புடியும்' அழகு வாய்ந்தது. குச்சுப்புடி என்பது என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநோதமான பெயராயிருக்கிறது என்றும் சிலர் எண்ணமுடியும். எனவே குச்சுப்புடி என்றால் என்ன?. 'குசீலவாபுரி' என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து இது தோன்றிற்று என்பர் பலர். குசீலவாபுரி என்பது நடிகர்களின் கிராமம் என்பது வடமொழிப் பொருள். 'குசிலவா' என்ற சமஸ்கிருதச் சொல் தேய்ந்தும் மருவியும் கூச்சிலு என்ற தெலுங்கு உருவினைப் பெற்றது. இவ்வகை நடனத்தை ஆடும் கலைஞரான ஒரு சாரார் ஆந்திரப் பிரதேசத்தின் ஒருபகுதியில் வாழ்கின்றனர். இவர்கள் வாழும் பதியே 'குச்சுப்புடி' என்ற பெயர் பெற்றது. இந் நடனத்தின் தத்துவத்தையும், பொருளையும் விளங்கிக் கொள்ளச் சமஸ்கிருதத்தையும், தெலுங்கையும் அறிந்திருக்க வேண்டும். இதனால்தான் இதற்குப் போதிய ஆதரவு இல்லை.

குச்சுப்புடி நடனத்தில் நாடகத்தின் அம்சங்களும், இயல்புகளும் பெருமளவில் செறிந்துள்ளன. குச்சுப்புடி சுத்த நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் ஆகிய மூன்றினையும் ஒருங்கிணைத்த ஒன்றாகும். குச்சுப்புடி நாட்டிய நாடகங்கள் 'சித்தேந்திர யோகி' என்பவரின் உருப்படிகளை அடிப்படையாகக் கொண்டவை. இவர் பதினேழாம் நூற்றாண்டிலே வாழ்ந்த பெரும் ஞானியாவார். 'பாரிஜாதம்', 'பாமாகலாபம்', என நாம் அழைக்கும் தலைசிறந்த நாட்டிய நாடகங்கள் இவர் உருவாக்கியவையே. இந்த நாட்டிய நாடகங்கள் நாயக, நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்டவை; ஜீவாத்மா, பரமாத்மாவுடன் சங்கமமாகும் கோட்பாட்டினை எடுத்துக் காட்டுவன. ஜயதேவரின் கீத கோவிந்தம், நாராயணதீர்த்தரின் தரங்கங்கள், ஆகியனவற்றிற்கும் குச்சுப்புடி கலைஞர் ஆடுவர். 'பால கோபாலதரங்கம்' ஆடும் போது தலையில் செம்பை வைத்துப் பித்தளைத் தட்டத்தின் விளிம்பில் நின்றே ஆடுவர். மண்பானை யொன்றின்மேல் நின்றாடி, கால் விரலால் நிலத்திற் சித்திரம் வரைவதும் இவர்கள் வழக்கம். குச்சுப்புடியில் பாவ வெளிப்பாட்டில் அதிக சிரத்தை காட்டப்படும். உணர்ச்சி பாவங்கள் அதிகம் செறிந்திருக்கும். எனவே நிலைகளிலும், ஆடல் அசைவுகளிலும் சுதந்திரம் காணப்படுகிறது. நீர்போன்று சரளமாக அசையும் தன்மை காணப்படும். கர்நாடக சங்கீதக் கச்சேரியில் போன்று நிகழ்ச்சிக் கோவையான பத்ததியொன்று பரத நாட்டியத்திற் காணப்படுகிறது. ஆனால் குச்சிப்புடி முறையிலான நடனத்தில் விஷயத்திற் கேற்ற வகையில் நாதமும், நடன ஒழுங்கும் செல்வதால், நிகழ்ச்சிகளில் ஒழுங்குமுறை கடைப்பிடிக்காப்படாமையும், அதிசயங்கள் தரும் கட்டங்கள் வருதலுமுண்டு.

இத்துறையில் மிகச் சிறந்தவர் வெம்பட்டி சின்னசத்யம் அவர்கள். சென்னை நகரம் இதன் வளர்ச்சிக்கு மிகவும் வசதியான கேந்திரம் என்கிறார் சின்னசத்யம் அவர்கள். தற்பொழுதுதான் நம் நாட்டில் இக் கலையைப்பற்றி அறியும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. சில வருடங்களில் பரதத்தைப்போல் உன்னத நிலையை எய்துவதற்கு இடமிருக்கிறது எனலாம்.

## கதகளி

பாரத நாட்டின் நாட்டியக்கலைக்கு அடிப்படையான இலக்கணங்களை வகுக்கிறது பரத சாஸ்திரம். நாளடைவில் அந்த அந்தப் பிரதேசங்களில் வெவ்வேறு நடனங்கள் தமக்கே உரிய சில சிறப்பான இயல்புகளுடன் வளரலாயின. அத்தகையவற்றுள் ஒன்று 'கதகளி'. இது கேரள நாட்டில் தோன்றி வளரும் நாட்டியம். கதையை அடிப்படையாக்க் கொண்டு மகிழ்ச்சி உண்டாகும் வகையில் ஆடப்படுவதனால் இதற்குக் 'கதகளி' என்று பெயர் வந்தது. புராணக் கதைகளையே அடிப்படையாகக் கொண்டு கதகளி நாட்டியம் நடைபெற்று வருகிறது.

இதற்கென்று உடை, முக அலங்காரம், தலையலங்காரம் முதலியவை தனியே உண்டு. கதகளி நாட்டியம் செய்வோருக்குப் பல கடினமான சோதனைகள் உள்ளன. அவரது உடைகள் மிகவும் கடினமானவை. கனமானவை. அலங்காரம் செய்து கொள்வதற்கு மணிக்கணக்காகிறது. இதற்கு மேலாகப் பல்வேறு ஆபரணங்களையும், மிகப் பெரிய கிரீடத்தையும் சுமக்க வேண்டியிருக்கிறது. இல்லையெனில் சாதாரண மேடைமீது நாம் நம்முடைய பழம் பெரும் வீரர்களை எவ்வாறு பிரதிபலிக்க முடியும்? வீர, தீர பராக்கிரமச் செயல்களையெல்லாம் அற்புதமாக எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகிறது. கதாபாத்திரங்களை அப்படியே உருவாக்கிறது. உதாரணமாக பீமன், அனுமான் அர்ஜுனன், உள்ளத்தைக் கிளரும் அலங்காரத்தைக் கதகளியிலேயே காண முடிகிறது. இவ்வாறே வாத்தியங்களும் இதற்கென உண்டு. வீரம், கோபம், போன்ற நவரஸங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. கதகளியில் நிருத்யதித்திற்கே முதல் இடம். இடையிடையே நிருத்தமும் வருவதுண்டு. கதகளியில் தாண்டவமே முக்கியமானது.

## தாண்டவம் :

கதைப் பாத்திரத்தின் குணத்துக்கேற்றவாறு பலவகையாக நடந்துசெல்லும் முறையைக் கதாபாத்திரவடிவங்களைப் பார்த்தாலே இனம் கண்டு கொள்ளலாம். கதகளியில் வர்ண உடைகளுக்கும் முத்திரைகளுக்கும் சிறப்பிடம் அளிப்பர்.

இக்கலையில் புகழ்மிக்க திருவனந்தபுரம் குருஜி கோபிநாத் அவர்களும் அவர்களது பாரியார் தங்கமணி அவர்களும் மிகுந்த ஆர்வத்தோடு இதனைப் பாரெங்கும் பரப்பி வருகின்றனர். நமது நாட்டில் இன்று பரவலாக ஆரம்பித்துள்ளது. நம் நாட்டுக் கண்டி நடனத்தில் இதை ஓரளவு பார்க்க முடிகிறது.

## மணிபுரி

மணிபுரி என்று கூறப்படும் நாட்டிய வகை மணிபுரி என்ற இடத்தில் ஆரம்பமாகியது. இந்தியாவினுடைய கிழக்கில் பர்மா தேசத்தின் மேற்கு எல்லையில் அஸ்ஸாம் என்ற மாகாணம் அமைந்திருக்கிறது. அஸ்ஸாமில் இயற்கை எழில் சூழ்ந்த பிரதேசமான மணிபுரியில் பலர் சேர்ந்து கூட்டாக நாட்டியம் செய்கிறார்கள். இந்த நாட்டியம் மனத்தை வசீகரிக்கும்வகையில் ஆடப்படுகிறது.

'கவியரசர் தாகூர்' அகர்தாலாவுக்குப் 'பராதாகூர்' குடும்பத்தினரின் விருந்தாளியாகச் சென்றிருந்த போது மணிபுரி நடனத்தில் மனதைப் பறிகொடுத்தார் 'இங்கு குடத்துள் விளக்கென மறைந்து கிடக்கும் இம் மகோன்னதக் கலையை உலகறியச் செய்யவேண்டும்' என்று உறுதி பூண்டு பல்திக்கிலும் பரவச் செய்தார். தாகூரின் 'சித்ராங்கதா', 'சண்டாளிகா', 'சாபமோசன்', 'ரிதுரங்கா', ஆகிய நாட்டிய நாடகங்கள் மணிபுரிப் பாணியில் அரங்கேறின. அக்காலத்தில் 'ராஸலீலை' தான் முக்கிய இடம்பெறும். கிருஷ்ணன் பிரதான பாத்திரம். மணிபுரியைப் பெண்கள் ஆடுவர். அநேகமாக எல்லா மணிபுரி நாட்டியங்களும் ஸ்ரீகிருஷ்ணனையும் அவன் மீது காதல்கொண்ட ராதையையும் பற்றியே கூறுகின்றன. கலையுணர்வுமிக்க அரசர் ஒருவரே இதற்கான கண்கவர் ஆடையணிகளை அமைத்தார்.

உடலசைவு, கால்களின் அசைவு, கைகளின் அசைவுகளில் மணிபுரி நடனம்மற்ற நடனங்களிலிருந்து வேறுபடுகிறது. 'பரதம்' ஆடும் பெண்மணி நிற்கும்போது பாதத்தைப் பதிய ஊன்றி நிற்பாள். மணிபுரி நடனக்கலைஞர் பாதத்தின் முற்பகுதியை (விரல்கள் அமைந்தபகுதி) ஊன்றிக் குதிக்காலை லேசாக உயர்த்தித் தரையில் படாதவாறு நிற்பார். முன்பாதங்கள் பதியச் சுழன்றாடுவது இதன் தனிச்சிறப்பு. ஆங்கு ஆடும் போது பெண்கள் அணிந்துள்ள பாவாடை அல்லது கவுண் போன்ற ஆடையும் சுழல்வது மிக்க அழகாயிருக்கும். பரத முத்திரை பிடிக்கையில் கைகளை நேராகவோ, விறைப்பாகவோ ஒரு நிலையில் வைத்துக் கொள்கிறார்களே? அதற்கு மாறாக மணிபுரியில் கைகளைப் பாம்பு போல நெளியச் செய்வது வழக்கம். விறைப்பாக இராது. நெளித்து மேலும், கீழும் அசைப்பர். பெண்கள் மெல்லிய முத்திரை அணிந்து கொள்வது வழக்கம். அவர்களின் பார்வையும் பெரும்பாலும் கீழ்நோக்கிய பார்வையாக இருக்கும். விழிகளில் பக்தி ரசம் ததும்பும். பரதத்தில் தா, தை என்ற சொல்லுக் கேற்பத் தாளத்துடன் அடியெடுத்து வைப்பர். மணிபுரிக் கலைஞர் பாதம் தரையிலிருந்து மேலே எழாமல் தரையோடு பாதத்தை உரசும் படி இழுத்தவாறே அரங்கில் இடம் விட்டு இடம் நகர்ந்து ஆடுவார். ஒரு காலை ஊன்றியுள்ள நிலையில் மற்றொரு காலைப் பாதம் தரையுடன் உராய்ந்தவாறு இழுத்துக் கொள்வது இதன் தனித்தன்மை. கதகளியில் கழுத்தை நிலையாக நிறுத்தித் தலையையும் முகத்தையும் பக்கவாட்டில் அசைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர். இங்கு இசைக் கேற்ப உதடுகளை அசைப்பர்.

மணிபுரி நடன நிகழ்ச்சியில் 'சாலி, (புறப்படுதல்), பங்கிந்ருத்தம்' ஸ்நிதிந்ருத்தம்' (ராதா—கிருஸ்ண நடனம்), கடைசியில் மங்கள ஆரத்தி முற்றுக இரண்டு மணி நேரம் பிடிக்கும். பரதம் கற்றுத்தரும் ஆசிரியரைப்போல் மணிபுரி ஆசிரியர் உட்கார்ந்து கொண்டே கற்றுக்கொடுத்தல் முடியாது. ஆசிரியர் கையில் 'ஜால்ரா' இருக்கும். இந் நடனுத்துக்கான வாத்தியக் குழுவில் இரு மிருதங்கம், புல்லாங்குழல், பெஞங் (மீட்டும் கம்பிகள் கொண்டது) இசைக் கருவி. மூன்று பெண்கள் பாடுவர், இவர்களுக்குச் ஸூத்ரதாரி' என்று பெயர். இரு மணி நேர நிகழ்ச்சி மிக சிறப்பாக இருக்கும் மணிபுரியில் இசைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இந் நடனத்தில் திரு காமினி குமார் சின்ஹா என்பவர் திறமை வாய்ந்தவர்.இவர் சென்னையையே தாயகமாகக் கொண்டவர். இவர் மணிபுரி நாட்டியக் கலைக்காகவே வாழ்ந்துவரும் ஒரு இலட்கியக் கலைஞர்.

## கதக்

கோவில்களில் கதை சொல்லுவது என்றுமே சிறந்த பொழுதுபோக்காக இருந்து வந்தது. இன்றுகூட ஆயிரக்கணக்கான மக்கள் 'ஹரிகதாகாலட்சேபம்' கேட்பதற்குக் கூடுவதைப் பார்க்கிறோம். இப்படிக் கதை சொல்பவர்களை வட இந்தியாவில் 'கதாகார், என்று கூறுவர் அவர்களிற் பலர் பாடியும், சிலர் அபிநயித்தும், சிலர் ஆடியும் கதைகள் கூறுகிறுர்கள் நாட்டியத்தின் மூலமாகச் சொல்வதெல்லாம் 'நடவாரா' என்று அவர்கள் அழைக்கும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவைப்பற்றித்தான். தென்னிந்தியாவிலே பரத — கதகளி சிற்பங்களைப் பார்த்துள்ளோம். அவ்வாறே ராஜஸ்தான் ஓவியம், பஹாரி ஓவியம் என்று அழைக்கப்படும் வண்ணச் சித்திரங்களில் 'கதக்' நாட்டியத்தை நாம் காணலாம்.

பதினுருவது நூற்ருண்டில் மொகலாய மன்னர்கள் வட இந்தியாவின் மீது படையெடுத்தனர். இவர்களுள் சிறந்தவரான அக்பர், தாஜ்மகாலைக் கட்டிய ஷாஜஹான் எல்லோரும் கலைகளில் மிக விருப்புடையராக இருந்தார்கள். அவர்களுடைய செல்வாக்கினுல் நாட்டிய உலகில் ஒரு புதுவகை ஏற்பட்டது. அதன்பெயர் 'கதக்' என்பதே. ஹிந்துக்களின் பாணியும் முஸ்லிங்களின் பாணியும் அதிற் கலந்துள்ளன. கதக்கில் தாளம் முக்கிய இடம்பெறும்.

## நிறைவுரை

கலை மாறுகிறது; வளர்கிறது. அவை வெவ்வேறு விதமானவையாகத் தோற்றினுலும் நாட்டிய சாஸ்திரமே அனைத்திற்கும் அடிப்படை. அந்த அந்தப் பிராந்தியத்து மக்களின் பழக்கவழக்கங்களையொட்டி (Regional Interpretation) அமையப் பெற்றுள்ளன.

'கதகளி நடனம்' உச்சிமுதல் கழுத்துவரை முகபாவங்களை எடுத்துப் பிரதானமாக அபிநயித்துக் காட்டுவதாகும், குச்சுப்புடி' — பாவ உணர்ச்சி வெளிப்பாட்டில் சிரத்தை காட்டுவது. 'மணிபுரி' — கழுத்து முதல் இடுப்புவரை அங்க அசைவுகளைப் பிரதானமாகக் கருதுவது, 'கதக்'—இடுப்பு முதல் பாதம்வரை இருகால்களாலும், கால்களின் விரல்களாலும் தாள வேறுபாடுகளைக் காட்டித் தாளத்தைப் பிரதானமாகக்கொண்டு ஆடுவதாகும். 'பரதநாட்டியம்' — உச்சி முதல் உள்ளங்கால்வரையுள்ள உடல் உறுப்புக்கள் அனைத்தையும் காரணகாரியங்களோடு இயங்கச்செய்து பாவ-ராக தாளங்களோடு முத்திரைகளுமாக வெளிப்படுத்த எல்லா அம்சங்களையும் பொருத்தி ஆடுவதாகும்.

எமது பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும் நுண்கலைகளை வளர்ப்பதன் மூலம் பண்பாட்டுப் பெருமையைப் பேணுவது மாத்திரமின்றிச் சமூக மனப்பாங்கினையும் வளர்க்க முடியும்.

**செல்வி மாலதி தர்மா**
(1 ஆம் வருடம், நடனப்பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்கும் உறவுகள்

ஏட்டில் எழுதிவிட்ட கவீதையிலே — எழும்
இன்னொலி ஓசையில் எழுத்துறங்கும் — பண்
பாட்டில் உயர்கின்ற வாழ்வினைப் போல் — அவள்
பாட்டில் இனிய இசையுறங்கும்

இளம் கன்னத்தில் கைபதி கன்னியவள். — தனின்
இமையினுள்ளே அவள் கண்ணுறங்கும்.
வளம் பொலிகின்ற நல்லதோர் நாட்டிலே — பெரும்
வரவினுக்குள் மாந்தர் செலவுறங்கும்.

பெண்ணெனும் அன்பின் பெருநினைப்பில் — ஒரு
பேதையின் மடியிலே சேயுறங்கும்.
மண்ணெனும் விந்தைக் கடற்பரப்பில் — சிறு
மணியான வீதையினுள் செடியுறங்கும்.

என் கீதத்தில் நிலைக்கின்ற நாதலயிப்பில். — இன்ப
எழிலாய் அவளது நினைவுறங்கும்.
மன்னும் கற்பினில் பெண்ணுறங்கப் — பாச
மாகிய உலவுகள் உறங்குதம்மா.

**செல்வி . செல்வநாயகி . பாலசிங்கம்.**
I ஆம் ஆண்டு. (மனையியல்)

---

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

—திருவள்ளுவர்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை அன்பு

வானத்தில் வட்டமிடும் பருந்து, பாறையில் ஊர்ந்து செல்லும் பாம்பு, கொந்தளிக்கும் கடலிலே பாய் விரித்துச் செல்லும் மரக்கலம், இவற்றின் போக்கை முன்கூட்டியே கணக்கிட்டுக் கூறவியலாது என்பர். இவை போன்று இளைஞர்மனமும், சிந்தையும், நடத்தையும் எவ்வழிச்செல்லும் எனக்கூறுவது கடினம். இன்றைய செய்தித்தாள்களில் இளைஞரின் கேளிக்கைகள், வேலைநிறுத்தங்கள் ஆர்ப்பாட்டங்கள் போன்றவை கொட்டை எழுத்துக்களில் இடம்பெறுகின்றன. வருங்காலம் தங்களுடையது, விரைவாக மாறிவரும் உலகில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் பொறுப்புத் தங்களுக்குண்டு என இவற்றின் வழிகாட்டுகின்றனர். இளைஞர்கள் மாறுகின்ற சமூகச் சூழலில் அடிப்படையான சமய உண்மைகளையும், வாழ்க்கை நெறிகளையும் இழந்துவிடாமல், வாழ்க்கைப் பாதையில் முன்னேற உதவுவதே கல்வியின் பணியாகும்.

அன்பு என்ற அழகிய சொல் இன்று நடைமுறையில் வேறுபட்ட பொருள் கொள்கின்றது. சுயநலம் என்றபோர்வையில் அது வலம் வருகின்றது. ஒருசிலசமயங்களில் உண்மை உருவங்களிலும் காணப்படுகின்றது.

அன்பு இருவகைப்படும்.

I தன்னையே மையமாகக் கொண்ட அன்பு.

II பிறரை மையமாகக் கொண்ட அன்பு.

எப்பொழுதும் தன்னைப்பற்றியே நினைப்பது, எல்லோரும் தனக்கு ஊழியம் புரியவேண்டும் என்பது, தன் இன்பத்திற்காக உழைப்பதை எதிர்பார்ப்பது, எப்போதும் தன் உரிமைகளை அதிகமாக எண்ணிக் கடமையை மறந்து வாழ்வது. தான் விரும்பியதை அடைய எதையும் செய்வது; தன்னைப்பிறர் மதிக்கவேண்டும், புகழவேண்டும், மகிழ்விக்க வேண்டும் என்று விரும்புவது. பிறர் மகிழ்ச்சியைக்கண்டு சகியாது, பிறரை மதிக்காது விடுதல் இவைதாம் சுயநல அன்பு. இத்தகைய அன்புடையோர் வாழ்வில் மகிழ்ச்சியை அடையவே மாட்டார்கள். ஏமாற்றத்தையும் பிறர் வெறுப்பையுமே பெறுவர்.

ஆனால் பிறரை மையமாகக் கொண்ட அன்பே உண்மையான அன்பு. அது சுயநல அன்பிற்கு எதிர்மாறானது.

எரியும் மெழுகுதிரியைப்பார்
எரியும் போது இருளைப்போக்கி,ஒளிதந்து
அங்கிருப்போரை மகிழ்விக்கிறது.
அந்த ஒளிதரும் பணியிலே தன்னையே
அழித்துக்கொள்கிகிறது.
உண்மையான அன்பிற்கு மெழுகுதிரி
நல்லதோர் எடுத்துக்காட்டு.

எரியும் திரியைப்போல் தன்னையே தியாகம் செய்யும் ஒரு பெண்மணியின் வாழ்விலிருந்து ஒரு நிகழ்ச்சி. அவள் வீதி வழியாகச் சென்றுகொண்டிருக்கும் போது ஒரு கிழவன் இறந்து கொண்டிருந்தான். அப்போது அவள் அவனைப்பிழைக்க வைக்க விலையுயர்ந்த மருந்தொன்றைக் கொடுக்கும்போது அவ்வழியாகச் சென்ற மருத்துவர் ஒருவர் கூறுகிறார். "இன்னும் சில மணிநேரத்தில் சாகப்போகும் இக்கிழவனுக்கு ஏன் விலையுயர்ந்த இந்த மருந்தை வீணாகக்கொடுத்துப் பிழைக்க வைக்க வேண்டும்? பிழைத்தாலும் இவன் பூமிக்குப்பாரமும் சோற்றுக்குச் செலவுந்தானே!" அதற்கு அவள் கூறிய பதில்! "டாக்டர், இவன் கிழவன் தான். தன்வாழ்வில் அன்பு இன்னதென்று அறியாமல் வாழ்ந்திருக்கலாம். உண்மை அன்பை இன்னதென்று உணராமல் இவன் சாகக்கூடாது. அப்படி அவன் இறந்தால் அன்பே உருவாகிய கடவுளை அறியாமல் சாவான். அதனால் அவன் ஓரளவு சுகமடைந்து நான் காட்டும் அன்பை அனுபவித்துப் பின் இறக்கட்டும் என்று கூறித் தன் வீட்டிற்கு அவனைக்கூட்டிச் சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்கள் செல்ல அக்கிழவன் அப் பெண்மணியின் அன்பையும், பணியையும் ஏற்றுச் சுகமடைந்தான். ஒரு நாள் அவளு டைய கரத்தைப் பற்றிக்கொண்டு அதை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது அவள் "ஏனய்யா! இப்படிப் பார்க்கிறீர்கள்?" என்ருள். "அம்மா என் னுடைய வாழ்வில் பகைமையையும், வெறுப் பையும் தவிர வேறேதும் நான் கண்டதில்லை. ஆனுல் கடந்த நாட்களில் இறைவனைக் கண்டுவிட்டேனம்மா. இந்தக்கரம்தானு அந்த இறைவனின் கரம்? என்று பார்க் கிறேன்" என்ருன்.

ஆகவே கிறீஸ்துவ அன்பைச் செயலில் காட்டும் கடவுளின் பெண்மணியையிட்டு நாம் இன்று பெருமைப்படுகின்ருேம். "கிறீஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத் தார்" இதனுல் அன்பு இன்னதென்று அறிந் தோம். ஆகவே நாமும் நம்முடைய சகோ தரர்களுக்காக உயிரைக் கொடுக்கவேண்டும். இவ்வுலகச் செல்வங்களை உடையவன் ஒரு வன் தன் சகோதரன் வறுமையுற்றிருப்பதைக் கண்டு மனமிரங்காவிடில், அவனுள் கடவு ளன்பு நிலைத்திருக்கிறதென்று எவ்வாறு சொல்ல முடியும்? அன்புக் குழந்தைகளே! நம் அன்பு சொல்லிலும் பேச்சிலும் இரா மல், செயலில் விளங்கும் உண்மையான அன்பாக இருக்கட்டும்.

(1 அரு. 3 : 16-18)

நீ எப்போது எவ்வித நலனையும் நன்றி யையும் எதிர்பாராமல் உள மகிழ்ச்சியோடு மற்றவர்களுக்குச் சேவை செய்ய முன் வரு கிருயோ, அன்று நீ கிறீஸ்துவின் தியாக அன்பில் வேரூன்ற ஆரம்பித்துவிட்டாய் என்று திட்டவட்டமாகக் கூறலாம். மகிழ்ச் சியின் ஆதவன் உன்வாழ்வில் உதித்து ஒளி வீச ஆரம்பித்துவிட்டான். இதுதான் உண் மையான கிறீஸ்துவ வாழ்வு.

இனிப்பில்லாத கரும்பினை
எவரும் விரும்பித்தின்பரோ?
இசை இல்லாத பாட்டினை
எவரும் விரும்பிக் கேட்பரோ?
மணமில்லாத மலரினை
மகிழ்ந்து எவரும் அணிவரோ?
நிழல் தராத மரத்தின் கீழ்
நிற்க எவரும் வருவரோ?
தண்ணீர் இல்லாக் குளத்திலே
தாகம் தீரச் செல்வரோ?
அன்பில்லாத மனிதனை
ஆர்தான் விரும்பப்போகிருர்?

ஆகவே நாமெல்லோரும் அளிப்பதில் தன்னையே அழிக்கும் அன்பின் சின் னமாக விளங்க வேண்டும். மனிதன் மனி தனுக வாழ ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தரம் தேவை. தங்க ஒரு இடம், உடுக்க உடை, உண்ண உணவு, வாழ்க்கைப்பாது காப்பு, அன்பு செய்யும் உள்ளங்கள். இவற் றின் அடிப்படையில்தான் மனிதன் தன்துதிற மைகளையும், உள்ளத்தின் அறிவின் பண்புக ளையும், ஆற்றல்களையும், பண்பாட்டையும் வளர்த்து முன்னேற்றமடைய முடியும் என் பது வெள்ளிடைமலை.

ஞானச்சகோதரி: புஷ்பராணி
(2 ஆம் வருடம்)

---

நாளாந்த வாழ்வின்போது ஆன்மாவிலே படிகின்ற தூசுகளை இசை கழுவி அதனைத் தூய்மையாக்கு கின்றது.

—அவர்பச்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்ல மெய்வல்லுநர் போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியாத இரவுகள்

பரந்து கிடக்கும் அந்த முன்னறையில் பூலேக்கொன்றுகச் சோபாக்கள் ஒரு சீராகப் போடப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றிலே காலை நீட்டியபடி வெகு சுவாரசியமாக எதனையோ மீரா வாசிக்கின்றாள் என்றால் அது 'ஹாட்லி சேவின்' நாவலைத் தவிர வேறெதுவாக இருக்க முடியும்? மாலையிருள் சூழ்ந்து வருவதைக்கூட உணராமல் அப்படியொரு ரசனை.

பக்கத்து அறையிலே குமரன் அலறுவது என் காதில் விழுகிறது. "அக்கா! இங்கே வாருங்களேன்! இந்த லைட்டைப் போட்டு விட்டு இந்த வசனத்தை எப்படி எழுதுவது என்று சொல்லிக் கொடுங்களேன்". விரைந்து சென்ற நான் லைட்டைத் தட்டி விட்டு மேசையைப் பார்க்கிறேன். முதல் நாள் சொல்லிக் கொடுத்த அதே ஆங்கிலப் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு என்னைப் பரிதாபமாகப் பார்க்கிறான் குமரன். எரிச்சல் வருகிறது எனக்கு. "நீ ஒரு இவனடா ..... நேற்றுச் சொல்லித் தந்தது தானே? பின் என்ன இன்று புதுமையாக விரித்து வைத்துக் கொண்டு........." முடிக்கவில்லை நான், ஐயோ அக்கா! இன்று மட்டும். மாஸ்டா அடிப்பாரக்கா" அவனது கெஞ்சுதலுக்கு இரங்கிய நான் பாடத்தைச் சொல்லிக் கொடுத்து விட்டு முன்னறைக்கு விரைகிறேன். அருகில் மேசையில் கிடந்த 'ஆனந்த விகடனில்' மனம் போகிறது. வழக்கமாக வெளிவரும் ஓர் தொடர் கதையை விரித்து வைத்துக் கொண்டு உட்காருகிறேன்.

"நேரம் ஒன்பது மணி. இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம்...... செய்திகள்... வாசிப்பவர்...... திடுக்கிட்டுச் சுய உணர்வு பெறுகிறேன். ஆ! நேரம் போனதே தெரியவில்லையே. மீரா 'டப்' பென்று புத்தகத்தை மூடவும் அம்மா சமையல் அறையில் இருந்து சாப்பாட்டிற்குக் குரல் கொடுக்கவும் சரியாக இருக்கிறது. "உம்! அக்கா! வாங்க போகலாம்" என்றபடியே மீரா சமையலறையை நோக்கி நடக்கிறாள். என்னைப் பின்தொடர்ந்து குமரன் வருவது தெரிகிறது. "எந்த நாளும் இடியப்பம் தானோ?" என்றபடியே குமரன் மேசையை அணுகுகிறான். "உம், வேறென்ன வேண்டும் உனக்கு?" என்றபடியே எல்லோரும் அமர்கின்றோம்.

இடியப்பத்தைச் சொதியோடு குழைத்து வாய்க்கருகில் கொண்டு போகிறேன். அப்பாவின் செருப்புச் சத்தம் கேட்கிறது. நிலத்தை உராய்ந்தபடி 'சடக் சடக்' கென்று ஏதோ ஓர் லயத்திற்கு அமைய அவை எடுத்து வைக்கப்படும் விதம் ஏதோ ஒன்றை எமக்கு அறிவுறுத்துகின்றது. மீரா என்னை நிமிர்ந்து பார்க்கிறாள். அந்தப் பார்வையின் பொருள்...... அது பரிச்சயமானது தான். 'டக்' கென்று குனிந்து கோப்பையில் பார்வையை ஓட்டுகின்றேன். மனம் ஏனோ அடித்துக் கொள்கின்றது. அப்பா எல்லோரையும் ஒரு முறை நோட்டம் விடுகின்றார். புறங்கையைக் கட்டியபடி யன்னல் அருகில் மெதுவாகச் செல்லுகின்றார். "தூ"... காறி உமிழ்ந்து விட்டுச் 'சடக்' கென்று திரும்பிச் செல்லுகின்றார். ரேடியோவின் ஒலி திடீரென்று நிற்கிறது. ஒரே அமைதி. அம்மாவைப் பார்க்கிறேன். அவளோ அழகு காணும்.

மீந்திருந்த இடியப்பத்தை அப்படியே எடுத்து வைத்து விட்டுக் கையை அலம்பிக் கொண்டு படுக்கையறைக்குச் செல்கின்றேன். பிரார்த்தனை செய்ய வேண்டும் போல் இருக்கிறது "என்னக்கா ஒரே யோசனை? படுக்கவில்லையா? காலையில் நீங்கள் முன்னதாக விழித்துக் கொண்டால் என்னை எழுப்பி விடுங்கள், சரியா?" என்ற மீராவின் குரல் கேட்டுச் சுய உணர்வு பெறுகிறேன். "உம்" என்றபடியே படுக்கையில்சாய்கிறேன், நான். கதவைச் சாத்திக் கொண்டு மீரா வருகிறாள். "முருகா...! என்று முணு முணுத்தவாறே குமரனுக்கருகில் படுத்துக் கொள்கிறாள், அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாரென்ற ஓர் ஓசையைத் தொடர்ந்து திடுக்கிட்டுக் கண் விழிக்கிறேன். படுக்கையில் மீரா நிமிர்ந்து உட்கார்ந்திருப்பது தெரிகிறது. நெஞ்சு படபடக்கிறது, சமையலறையில் சாமான் உருளும் ஓசை. தூக்கக் கலக்கம் மாருமலே குமரன் எழுந்து உட்கார முயல்வதும் மீரா தாழ்ந்த குரலில் "குமரன்! ராஜா! நீ படுத்துக்கொள்" என்று அவனைப் படுக்க வைப்பதும் தெரிகிறது. "முருகா! சத்தங்களை உணரும் சக்தியை நீஏன் அளித்தாய்? எம்மைப் பொறுத்தவரை அது நரக வேதனையாயிற்றே!" என்று எண்ணிக் கொண்டிருக்கும் என் கண்களில் இருந்து கண்ணீர் தலையணையில் பட்டுத் தெறிக்கிறது. அமைதி! பயங்கர அமைதி! மீரா என்னைப் பார்க்கிருள். அசையாமல் இருக்கிறேன் நான்.

'கலீர்' என்ற ஓசையைத் தொடர்ந்து கண்ணுடிகள் நொருங்கிச் சிதறுகின்றன. ஆமாம்! மேசையில் அடுக்கியிருந்த கண்ணுடிச் சாமான்களாக இருக்க வேண்டும். தொடர்ந்து அம்மா விசும்பும் ஒலி கேட்கின்றது அடுத்து, "இது என் வீடு, நான் எதையும் செய்வேன். என்னைத் தடுக்க உன்னுலும் முடியாது. யாராலும் முடியாது. எனக்குச் சுதந்திரந்தான் பெரிது. ஒரு குடும்பம்... அது எனக்குத் தேவையில்லை உம்..." அப்பாவின் உறுமல் தொடர்கிறது. காதை இறுகப் பொத்திக்கொள்கிறேன் நான். பயத்திஞல் நெஞ்சம் அடித்துக் கொள்கிறது. இன்னும் அவர் ஏதேதோ உளறுகிருர். தொடர்ந்தும் சமான்கள் உருளும் ஓசை. இத்தனைக்கும் அவள்... மீரா... அசைய வேண்டுமே? சிலையாகி விட்டாள் போலும்

எங்கோ கதவொன்று இழுத்தறையப்படும் சத்தம். குமரன் திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறுன். அந்தப் பிஞ்சு உள்ளம் எம்மைத் திகிலோடு பார்க்கிறது. அப்பாவின் கர்ஜனை மெதுவாகத் தேய்கிறது. அவரின் குறட்டை ஒலி அமைதியை ஆட்சி செய்கிறது. அப்... பப்... பா அவருக்கு வேலை எவ்வளவு எளிதாக முடிந்து விட்டது. மற்றைய நான்கு ஜீவன்களுக்கும் அது அவ்வளவு எளிதாக இல்லையே!

பெருமூச்சு விட்டபடி மீரா என்னைத் திரும்பிப் பார்க்கிருள். "அக்கா!" வேதனை ரேகைகளின் ஊடே இளஞ் சிரிப்பு ஒன்றும் மலர்கிறது. 'இது நமக்கு ஒன்றும் புதுமை இல்லையே! நீங்கள் அழுவது வேடிக்கையாக இருக்கு". என்றபடியே என்னை உற்றுப் பார்க்கிருள். சற்று நேரம் கழித்துத் தாழ்ந்த குரலில் அவள் தனக்குத்தானே கூறிக் கொள்வது நிசப்தமான அவ்வேளையில் எனக்குத் தெளிவாகக் கேட்கிறது.

"அம்மா! முப்பது வருட உனது திருமண வாழ்வில் நீ கண்ட சொர்க்கம்தான் என்ன? ஓ! சொர்க்கம்... அது இருக்கவே செய்கிறது. நாம் சரித்திரத்தில் கண்ட ஹிட்லரை விட ஒரு படி மேலான சர்வாதிகாரியை உன் கணவராகப் பெற்றிருக்கும் பெருமை வேறு யாருக்கு வரும்? போதாதற்கு என்னை, அக்காவை. குமரனை வேறு பெற்றெடுத்துப், பேர் சூட்டி, ஆளாக்கி, ஓர் சாதனையை ஏற்படுத்தியிருக்கின்ருயே! உன்னைப் பொறுத்தவரை இதுவும் சாதனைதான்.

இல்லாவிட்டால் அனுதினம் வந்து போகும் இந்தப் பயங்கர இரவுகளை விசும்பி, விசும்பி அனல் மூச்சிஞல் அன்றிப் பெருமூச்சிஞல் சமாளிக்கும் திறமை உனக்கு எப்படி வந்திருக்க முடியும்? மனதிலேயே அனைத்தையும் சாம்பாராக்கி விடிந்தால் சிரிக்கின்ருயே? அது எப்படி முடிக்கிறது? உன் பொறுமையும் பண்பும் உன்னை உயர்த்துவதற்குப் பதிலாக எம்மையுமல்லவா சேர்த்துப் பழி வாங்குகின்றன? அம்மா! ஐந்து வயது முதல் விபரமறிந்த நாள் முதலாகவே அந்த இரவுகள் எம்மைக் கண்ணீரில் குளிப்பாட்டுகின்றனவே இரவு முழுதும் அழுது காலையில் சிரிக்கிருய். அது எல்லாம் ஏன்? ஓ! அது...... அந்தக்... குடும்ப கௌரவத்திற்காக! அப்படித்தானே சொல்லி வருகிருய் நீ? ஊரிலுள்ள அனைவருக்கும் நியாயஸ்தர் அப்பா. பெரிய புள்ளி. மானஸ்தர். அவர் இரவில் மது போதையில் நடத்தும் நாடகத்தை, நியாயத்தை யார் அறிவார்? யாரும் அறிந்து விடக் கூடாதென்பதில் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்கிருய் நீ? பிரம்படி பட்டுச் சிவந்து போன தோள்களையும், முதுகையும் மறைக்க இழுத்து இழுத்துச் சேலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பால் போர்த்திக் கொண்டு சிரிக்கிறாய். முடிவில்லாத அந்த நாடகத்திற்கு, 'குடும்ப கௌரவம்' என்ற அந்தக் கௌரவப் பிரச்சினைகளுக்கு ஆம்! ஆம்! நாமும் உடந்தை தானே? ஆகவே ...! ஆகவே.....! "அக்கா நீங்கள் அழத்தான் வேண்டும். அழுவதில் தவறில்லை. நன்றாக அழுங்கள்!"

இப்படிச் சொல்லிக் கொண்டே மீரா படுக்கையில் சாய்கிறாள். வெகு நேரம்வரை அவள் விக்கி விக்கி அழுவது கேட்கின்றது. நேரம் ஊர்கின்றது. அம்மாவின் விசும்பல் ஒலி இப்போது கேட்கவில்லை. காலை ஐந்து மணி. அது எப்போதும்போல் எமக்காக மலர்கிறது. மீரா எழுந்து சென்று அம்மா சாப்பிடாமல் மேசைமீது வைத்திருக்கும் சாப்பாட்டுக்கோப்பையை வழக்கம்போல் எடுத்துக்கொட்டி விட்டு ஒன்றும் நடவாதது போல் வேலையை ஆரம்பிக்கிறாள். ஆம்! குமரன் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். அப்பாவுக்குத் தேநீர் தயாரிக்கவேண்டும். வழமையான இரவு! அது புதுமை செய்யவில்லை. விடிய மறந்தே பிரிகின்றது.

**செல்வி பவளாய் பொன்னையா**
(2ஆம் வருடம்)

---

மாணவர்கள் கல்வி கற்கும் போது தூய்மையும் உண்மையும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். அவ்வியல்புகள் இல்லாத கல்வி முற்றும் பயனற்றதாகி விடும். எண்ணம், பேச்சு, செயல் ஆகிய மூன்றிலும் பரிசுத்தமானவர்களாக விளங்கவேண்டும். இல்லையேல், எவ்வளவுதான் படித்திருந்தாலும் அதனாற் பயனேயில்லை. அவர்களுடைய வாழ்க்கை பாழடைதல் ஒருதலை.

— மகாத்மா காந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திர வட்டக் கற்கள்

இலங்கைக்குச் சொந்தமானவும் மற்றெந்த நாட்டிலும் காணப்படாதனவும் பின்பற்றப்படாதனவுமான சந்திர வட்டக்கற்கள் இலங்கைச் சிற்பச் செல்வங்களில் புகழ் வாய்ந்தனவாகத் திகழ்கின்றன.

இந்த அலங்காரச் சிற்ப முறையானது, இலங்கையில் தேவநம்பியதீசன் காலந்தொட்டே இருக்கிறது. இது அமராவதிச் சிற்பமுறையைப் பின்பற்றியது எனக் கருதுகின்றனர்.

முதன் முதலாகச் சந்திர வட்டக் கற்கள் அலங்காரத்திற்காகச் செதுக்கப்படவில்லை. உருவங்களைக் கொண்டு ஏதோ ஒரு காரணத்தை, கருத்தை வெளிப்படுத்துவதற்காகவே இவை கருங்கல்லினால் உருவாக்கப்பட்டன.

நான்கு திசைகளிலும் இருந்துவரும் பௌத்த பிக்குகள் சந்திரவட்டக் கல்லோடு அமைந்த கூடங்களிலோ சத்திரங்களிலோ தங்கிச் செல்ல உரிமை பெற்றிருந்தனர்.

பௌத்த சமய நிலையங்களில் எல்லாம் அதன் முன் உள்ள வாயில்களில் சந்திர வட்டப் படிக்கல்லை வைப்பது இலங்கையில் காணப்படும் விசேட அம்சங்களில் ஒன்றாகும். சந்திர வட்டக்கல்லின் இருமருங்கிலும் கைப்பிடிவரிசை முன்பாகத் துவார பாலகர் அல்லது பூரண கும்பங்கள் செதுக்கப்பட்ட கற்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அநுரதபுர காலத்தின் பின்பே சந்திர வட்டக் கற்கள் அலங்காரப்படிக்கற்களாக அமைக்கப்படலாயின. அநுரதபுரி இராணி மாளிகையின் வாசலில் வைக்கப்பட்டிருக்கும் கல், மற்றெல்லாக் கற்களையும் விட மிக அழகானதும் கலை நுட்பம் நிறைந்ததுமாக அமைந்து காணப்படுகிறது. இக்கல்லில் யானை, குதிரை, எருது, சிங்கம் முதலிய மிருகங்களின் உருவங்களும், பூங்கொடி, பூவிதழ், பத்மம் போன்ற அலங்கார உருவங்களும் மிக அருமையாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆயின் சோழர் செல்வாக்கு பொலநறுவையில் இருந்த காலத்தில் செதுக்கப்பட்ட சந்திர வட்டக்கல்லில் உள்ள அலங்கார வரிசையில் முக்கியமாக மிருக வரிசையில் மாற்றம் ஏற்படலாயிற்று.

சிவன் கோயிலில் தமிழருக்கு தெய்விகச் சின்னமாக எருது இருந்தமையால் எருதின் உருவம் மிதிவாசல்களில் இருப்பதைத் தவிர்ப்பதற்காக இக்காலச் சந்திரவட்டக்கற்கள் எருதின் உருவம் இல்லாது அமைக்கப்படலாயின. இது பொலநறுவ, அனுரதபுரி சந்திரவட்டக் கல்லில் உள்ள மிகப்பெரிய வேறுபாடாகும்.

15-ம் நூற்றாண்டின் முன் செதுக்கப்பட்ட சந்திரவட்டக் கற்களில் சிற்பத் திறமை அவ்வளவாகக் காணப்படவில்லை. இவை கலை உணர்வோடு செதுக்கப்பட்ட சிற்ப உருவங்களாகத் தெரியவில்லை;

கொழும்பு நூதன பொருட்காட்சிச் சாலையில் அங்குருங்கொடையில் இருந்து கொண்டுவரப்பெற்ற சந்திர வட்டகல்லில் "லியவெல" பூவேலைப்பாடு மாத்திரமே காணப்படுகிறது. சிற்பிகளின் கற்பனைசக்தி இதில் காணப்படவில்லை. சிற்பத் தொழிலின் அந்திய கால வேலைப்பாடாகிய இது அரைவட்டத்தை இழந்து, முக்கோண வடிவாக மாறி இருப்பது கவனிக்கத்தக்கது.

C. டானியல்
(1ஆம் வருடம், சித்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றட்டை (Hundred Board),

கணிதம் ஒரு கருத்து நிலையில் உள்ள பாடம். ஆனால் அது வாழ்க்கைக்கு இன்றியமையாதது. ஆதலால் இப்பாடத்தை நன்கு விளங்கிக் கற்கப் பலவகையான கட்புல செவிப்புல சாதனங்கள் உபயோகிக்கப்படுகின்றன. இவற்றுள் நூற்றட்டை மிக உபயோகமான தொன்றாகும். கணிதத்தின் முக்கியபணி தொடர்புகளை அறிதலும் அவற்றைக் குறியீட்டில் குறித்தலும் என்பது தற்காலக் கருந்தாகும். எண்களுக்கு இடையே உள்ள தொடர்புகளையும், அமைப்பையும் விளக்கிக் கொள்ளச் சிறந்த கருவி நூற்றட்டையாகும். இதன் சாதாரண அமைப்பு பின்வருமாறு அமையும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |

இந்தப்படத்தை சற்று அவதானித்தால் உடனே வெளிப்படுவது (1) ஒவ்வொரு நிரையில் உள்ள எண்களையும் வலமிருந்து இடமாக நோக்கும் பொழுது ஒவ்வொன்று கூட்டப்பட்டிருப்பதையும் (2) இடமிருந்து வலமாக நோக்கும் பொழுது ஒவ்வொன்று குறைக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

உதாரணம் I 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10,
II 10, 9, 8, 7, 6, 5, 4, 3, 2, 1,

இனி நிரல்களை நோக்குவோமாயின் மேலிருந்து கீழாக ஒவ்வொரு எண்ணுடனும் பத்துப் பத்துக் கூட்டப்பட்டுள்ளது. கீழ் இருந்து மேலாகப் பார்க்கும் போது பத்துப் பத்தாகக் குறைந்து செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்   2ஆம் நிரலில் மேல் இருந்து கீழாக

2,   12,   22,   32,   42,   52,   62,   72,   2,   92.

கீழ் இருந்து மேலாக் :   92,   82,   72,   62,   52, ……… 12,   2

இந்த அமைப்பிலேயே இன்னும் ஒரு தொடர்பை நாங்கள் காணலாம். அது நிரைகளில் கடைசி எண்தவிர்ந்த மற்றைய எண்களின் பத்தாம் தானம் மாருது இருப்பதையும் நிரல்களில் ஒன்ரும் தானம் மாருது இருப்பதுமாகும். அடுத்து முதல் நிரலில் இருந்து ஒன்று விட்ட நிரல்களை அவதானித்தால் 100க்கு உட்பட்ட எல்லா ஒற்றை எண்களும் இந்நிரல்களில் அமைந்துள்ளதைக் காணலாம். இவ்வாறு 2ஆம் நிரலில் இருந்து ஒன்று விட்ட எண்களை அவதானித்தால் 100க்கு உட்பட்ட எல்லா இரட்டை எண்களையும் காணலாம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |

இவ்வட்டவணையை உபயோகித்துக் கூட்டல் கழித்தல் கணிதச் செய்கைகளையும் செய்யலாம். 25 + 13 ஐக் கூட்டுவதாயின் பிள்ளைகள் பல வழிகளைக் கையாளச் சந்தர்ப்பம் உண்டு. ஆரம்பத்தில் ஒன்றுக்களை கூட்டுவதாயின் முதலில் நூற்றட்டையில் 5 ஓடு 3ஐச் சேர்த்து எண் 8க்கு வருவான். பின் இதனோடு 2 பத்துக்களையும் பின் ஒரு பத்தையும் கூட்ட வேண்டும். இவ்வாறு செய்யும் போது அவனது விரல் தானாக 38ஐ தொடும். வேறு எந்த முறையைக் கையாண்டாலும் விடை 38 ஆவதையும் காண்பான்.

வாய்பாடுகளைக் கற்றல் அவர்களுக்கு இடையே உள்ள தொடர்புகளைக் காண 3-ம், 4-ம் வகுப்பு மாணவர்களுக்குப் பிரச்சினையான ஒரு விடயமாகும். இவ்வாறே கழித்தலுக்குப் பின்நோக்கிச் செல்லல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கும் இவ்வட்டை பெரிதும் உதவுகிறது. இதற்கு இவ்வட்டையைப் போன்று ஆனால் எண்களைக் குறிக்காது வேறு அட்டைகளைத் தயாரிக்க வேண்டும். 2ஆம் வாய்பாட்டை அறியச் செய்வதற்கு முதலாவது நிரையில் வலமிருந்து 2ஆம் சதுரத்தை வெட்டி எடுத்த பின் 4ஆவது இப்படியே வேறு 2 சேர்க்க வரும் விடையைக் கொண்ட சதுரங்களை வெட்டி எடுக்க வேண்டும். பின் எண்கள் எழுதப்பட்ட நூற்றட்டை மேல் வைத்தால் வெட்டி எடுக்கப்பட்ட சதுரங்கள் ஊடாக இரண்டின் பெருக்கங்கள் தெரியும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |

படத்தில் 3 இன் பெருக்கங்களைக் காண்பதோடு அவற்றிக்கு இடையே உள்ள தொடர்பு அதாவது இரண்டின் பெருக்கங்கள் எல்லாம இரட்டை எண்களாகும். அவை ஒன்றுவிட்ட நிரல்களில் அமைந்து இருத்தல் போன்றவற்றையும் வேறு பல தொடர்புகளையும் காண்பன். நீங்களும் வேறு வாய்பாடுகளுக்கு இவ்வாறு செய்து அவற்றின் தொடர்புகள் அமைப்புகள் ஆகும் விதங்களைக் காணலாம்

நூறுக்கு உட்பட்ட முதன்மை எண்களைக் காண்பதற்கு ''எருற்றேத்தெனிஸ்' என்ற கணிதர் இந்த நூற்றட்டையை உபயோகித்தார். இவர் ஆக்கிமிடிஸ் காலத்தில் அவர் உபயோகித்த விதி இன்றும் எருற்றேத் தெனிஸ் இன் சல்லடை விதியாகிற்று. இந்த விதியைக் காண்பதற்கு முதலில் நூற்றட்டையைத் தயாரிக்க வேண்டும். பின் இரண்டை வைத்துக்கொண்டு இரண்டின் பெருக்கங்கள் எல்லாவற்றிற்கும் கோடிடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 13 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |

மூன்றை விட்டு 3 இன் பெருக்கவிடக் கோடிடவேண்டும். இவ்வாறு தொடர்ச்சியாகச் செய்யும் போது முதன்மை எண்கள் கோடிடப்படாது இருக்கும். இது நூறுக்கு உட்பட்ட முதன்மை எண்களைக் காண வசதியாகும். இவ்வாறு 1000க்கு உட்பட்டதைக் காண 31 இன் பெருக்கம் வரை செல்லவேண்டும். இதை வாசகர்களும் செய்து பார்க்லலாம்.

இம் முறையில் மாணவர்கள் தாங்களாகவே தொழிற்பட்டுத் தொடர்புகளை அமைப்புகளைக் காண்பதால் பிள்ளைகள் தன்னம்பிக்கை, கண்டு பிடிக்கும் ஆற்றல் போன்ற திறன்களைப் பெறுகிறார்கள். பிரச்சினைப்படும் மாணவர்களுக்கு ஆசிரியர் வழிகாட்டாவிட்டால் விரக்தி, தன்னம்பிக்கையின்மை ஏற்படச் சந்தர்ப்பம் உண்டு. இவ்வாறு நூற்றட்டையின் பல தொடர்புகளைக் காணும் பிள்ளைகள் எண்களை இவ்வாறு தான் எழுதவேண்டுமா? வேறு முறைகளிலும் எழுதித் தொடர்புகள் காண முற்படுவார்கள். நூறுவரையும் எண்ண எழுதத் தெரிந்தவுடனேயே இம்முறையைப் பிரயோகிக்கலாம். எண்களை ஒரே நீட்டுக்கு எழுதாமல் இரண்டு இரண்டாக எழுத அல்லது மூன்று மூன்றாக எழுத அமையும், அமைப்புக்கள் தொடர்புகள் காண விடவேண்டும்.

**உதாரணம்:-**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | | *1* | *3* | *5* | *7* | *9* | *1 2 3* | | *1 4 7 10* |
| *3* | *4* | | *2* | *4* | *6* | *8* | *10* | *4 5 6* | | *2 5 8* |
| *5* | *6* | | | | | | | *7 8 9* | | *3 6 9* |
| *7* | *8* | | | | | | | *10* | | |
| *9* | *10* | | | | | | | | | |

இவ்வாறு எழுதும் போது அல்லது எண்களை அடுக்கும் போது வேறு புதுக் கண்டுபிடிப்புக்களைக் காண்பார்கள்.

இத்தகைய பல நன்மைகளைச் செய்யும் இக் கட்புல சாதனத்தை எண் தொடர்பு அமைப்புடன்தான் பாடசாலைகளிலும் வீடுகளிலும் ஆசிரியர் மாணவர்கள் பெற்றோர்கள் எல்லோரும் உபயோகித்துப் புதுப்புதுக் கண்டுபிடிப்புகளைக் கண்டு பிடிக்க வழிசெய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றம்

| | |
|---|---|
| காப்பாளர் : | பேராசிரியர் திருமதி ம. திருச்சிற்றம்பலம் |
| தலைவர் : | திருமதி குணமணி சிவஞானம் |
| செயலாளர் : | செல்வி இராஜபவானி அப்பாத்துரை |
| பொருளாளர் : | திருமதி சுசிலா இராசலிங்கம் |

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பதற்கேற்ப எமது கலாசாலை யோக மண்டபத்தில் காலை மாலை இரு நேரமும் வழிபாடாற்றி வருகின்றோம். விசேட தினங்களில் விசேட பூசைகள் வைத்து வழிபாடாற்ற எம்மன்றம் அதிக முயற்சி எடுத்துள்ளது. மகாசிவராத்திரி தினத்தில் நான்கு யாமங்களிலும் பூசைபுரிந்து வழிபாடாற்றினோம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தினத்தன்று அகில இலங்கைச் சேக்கிழார் மன்றச் சார்பில் திரு. ச. விநாயகமூர்த்தி அவர்கள் வருகை தந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் பற்றிச் சிறந்த ஒரு சொற்பொழிவு ஆற்றி எம்மை யெல்லாம் மெய்ம் மறக்கச் செய்தார். நவராத்திரி விழா கலாசாலையில் சிறப்பாக நடைபெற்றது. எங்கள் கலாசாலையைச் சேர்ந்த திரு. வே. சுப்பிரமணியம் அவர்கள் சக்திவழிபாடு பற்றிச் சிறந்த ஒரு சொற்பொழிவாற்றி எம்மை மகிழ்வித்தார். தினமும் இசைப் பிரிவு மாணவர்களது பண்ணிசைக் கச்சேரி நடைபெற்றது. அத்துடன் ஒன்பது திங்களும் கும்பபூசை, பஜனைகள் கூட்டுப் பிரார்த்தனைகள் நிகழ்ந்தன. பேராசிரியர் திரு. பொன் தெய்வேந்திரம் அவர்களால் 'சத்தியும் சித்தியும்' பற்றி இனிமையான ஒரு சொற்பொழிவாற்றப்பட்டது. ஓவியர் திரு. பெனடிக்ற் அவர்கள் வருகை தந்து இறைமை ஓவியம் பற்றிக் கருத்துரை வழங்கினர்.

எம்மன்றம் சிறப்புற நடைபெறச் சகலவிதத்திலும் ஆலோசனை கூறி வழி நடாத்திய அதிபர் அவர்கட்கும் சமய விழாக்களை நடாத்த உதவியாக இருக்கும் பேராசிரியர் திருமதி ம. சிற்றம்பலம் அவர்கட்கும் வேண்டும்போது வேண்டிய உதவியைச் செய்து ஒத்துழைப்புத் தந்த ஆசிரிய சகோதர சகோதரிகட்கும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றிய பெரியோர்கட்கும் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்திற்கும் எமது உள்ளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

**செல்வி இ. அப்பாத்துரை**
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவ மன்றம்

| | | | |
|---|---|---|---|
| காப்பாளர் | : | ஞானச்சகோதரி | டானியலா |
| | | திருமதி | ஓ. செ. தர்மானந்தன் |
| தலைவர் | : | திருமதி | மே. ஞா. சில்வேஸ்ரர் |
| செயலாளர் | : | ஞானச்சகோதரி | கொன்ஸ்ரன்ரைன் |
| பொருளாளர் | : | திருமதி | ம. ராஜேந்திரம் |

மண்ணில் நடமாடும் மனிதன் விண்ணையும் வென்று, தண்மதியிலே தவழ்ந்து விளையாட முனைந்துவிட்டான். மேலும் அயற் கோள்களையும் அதிவிரைவில் வெல்லுமளவுக்கு முன்னேறி வருகிறான். ஆகவே மனிதன் தன் உழைப்பினால் புத்துலகு ஒன்றைப் படைக்கிறான். பறவைகளும் விலங்கினங்களும் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு எவ்வாறு கூடுகட்டினவோ அவ்வாறே இன்றும் கட்டுகின்றன. அன்று எப்படிப் பாடினவோ அவ்வாறே இன்றும் பாடுகின்றன. மயில் அன்று ஆடிய முறையிலே இன்றும் ஆடுகின்றது.

ஆனால் மனிதன் தன் உழைப்பின் விளைவாக எல்லாத் துறைகளிலும் உலகின் தோற்றத்தையே மாற்றிவிட்டான். புதிய பூமியை உருவாக்குகின்றான். உண்மை, நீதி, அன்பு இவைகளின் அடிப்படையில் கிறிஸ்துமயமான உன்னத உலகைச் சமைக்கும் முயற்சியில் முன்னேறிக் கொண்டேயிருக்கிறான். "நீங்கள் கடவுளைப் போல் ஒழுக முயலுங்கள். கிறிஸ்து தம்மையே கடவுளுக்கு நறுமணம் வீசும் காணிக்கையும் பலியுமாக நம்மை முன்னிட்டுக் கையளித்து உங்கள் மேல் அன்பு கூர்ந்ததுபோல், நீங்களும் அன்பு கொண்டு ஒழுகுங்கள்". இப்பணியைத் தொடர்ந்து முன்னேறச் செய்வதுதான் எம்மன்றத்தின் கடமையும் உரிமையுமாகும்.

எமது மன்றம் இவ்வாண்டிலே இருபத்துநான்கு உறுப்பினர்களைக் கொண்டு பொலிவுடன் திகழ்கின்றது. மறைக்கல்வி கற்பதற்கும், கிறீஸ்தவதினம், ஜனன விழா போன்ற விழாக்களை ஏனைய சகோதரர்களுடன் சேர்ந்து சிறப்புடன் நடத்துவதற்கும் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு இவ்விழாக்களைக் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்வுற்றோம்.

எம்மைச் சமயத் தொண்டில் ஈடுபடவும் சமய விழாக்களை ஆர்வத்துடன் கொண்டாடவும் ஊக்கமும், ஆக்கமும் அளித்துவரும் சமய வீரிவுரையாளர்களான ஞானச்சகோதரி, டானியலா, திருமதி ஓ. செ. தர்மானந்தன் ஆகியோருக்கு எம் மன்றம் நன்றி நவில்கின்றது.

மேலும் சமய விழாக்களை நாம் கொண்டாட முற்படும் போதெல்லாம் அனுமதி தந்து ஆசி கூறி அருந்துணை புரிந்த அதிபர் அவர்கட்கும், வேண்டும் போதும் வேண்டிய ஆலோசனை தந்து உதவிய பேராசிரியர்கட்கும் தங்கள் அயராத ஒத்துழைப்பை அன்புடன் தந்துதவிய சக ஆசிரிய மாணவ மாணவிகட்கும் எம்மன்றம் தன் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றது.

**ஞானச்சகோதரி கொன்ஸ்ரன்ரைன்**
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலை ஆளுமன்றம்

| | |
|---|---|
| ஆள்பதி : | திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள் |
| முதலமைச்சர் : | செல்வி மீனலோசனி தம்பிராஜா |
| உதவி அமைச்சர் : | செல்வி கிறிஸ்டின் தோமஸ் |
